# குர்ஆனின் குரல்

جمادى الثاني ١٤٤٣

ஜனவரி 2022



தொழுகையில்...
துவாவில்...

999®
LUNGIES

Not Just a Number,
**IT'S TRUST!**

ஒரே க்ளிக்கில் வாங்க
www.999lungies.com

அணுகவும்
89399 97475

# சூனியம் பற்றி இஸ்லாம்

وَاتَّبَعُوْا مَا تَتْلُوا الشَّيٰطِيْنُ عَلٰى مُلْكِ سُلَيْمٰنَ ۚ وَمَا
كَفَرَ سُلَيْمٰنُ وَلٰكِنَّ الشَّيٰطِيْنَ كَفَرُوْا يُعَلِّمُوْنَ النَّاسَ
السِّحْرَ ۗ وَمَآ اُنْزِلَ عَلَى الْمَلَكَيْنِ بِبَابِلَ هَارُوْتَ وَمَارُوْتَ ؕ
وَمَا يُعَلِّمٰنِ مِنْ اَحَدٍ حَتّٰى يَقُوْلَاۤ اِنَّمَا نَحْنُ فِتْنَةٌ فَلَا
تَكْفُرْ ؕ فَيَتَعَلَّمُوْنَ مِنْهُمَا مَا يُفَرِّقُوْنَ بِهٖ بَيْنَ الْمَرْءِ وَ
زَوْجِهٖ ؕ وَمَا هُمْ بِضَآرِّيْنَ بِهٖ مِنْ اَحَدٍ اِلَّا بِاِذْنِ اللّٰهِ ؕ
وَيَتَعَلَّمُوْنَ مَا يَضُرُّهُمْ وَلَا يَنْفَعُهُمْ ؕ وَلَقَدْ عَلِمُوْا
لَمَنِ اشْتَرٰىهُ مَا لَهٗ فِى الْاٰخِرَةِ مِنْ خَلَاقٍ ؕ وَلَبِئْسَ
مَا شَرَوْا بِهٖۤ اَنْفُسَهُمْ ؕ لَوْ كَانُوْا يَعْلَمُوْنَ ﴿١٠٢﴾

இன்னும், ஸுலைமானின் ஆட்சிக் காலத்தில் ஷைத்தான்கள் (அவரைப் பற்றி புனைந்துரைத்து) ஓதிய (சூனியத்)தை (யூதர் களான) அவர்கள் பின்பற்றினார்கள் – ஸுலைமானோ (சூனியம் செய்து அல்லாஹ்வின் கட்டளைக்கு) மாறு செய்யவில்லை; ஆனால், ஷைத்தான்கள்தாம் (அல்லாஹ்வுடைய கட்டளைக்கு) மாறு செய்தனர்; மக்களுக்கு சூனியத்தையும், பாபிலில் (பாபிலோன் என்னும் நகரில்) ஹாரூத், மாரூத் என்னும் வானவர்கள் இருவர் மீது இறக்கப்பட்டதையும் (தவறாகப் பயன்படுத்த) அவர்கள் கற்றுக் கொடுத்தனர் – ஆனால், (அந்த வானவர்கள் இருவரும் தங் களிடம் சூனியம் கற்க நாடுவோரிடம்), "நாங்கள் (மக்களுக்குச்) சோதனை(யாக வந்தவர்கள்)தாம்; எனவே நீ நிராகரிப்பவனாகி விடாதே" என்று அவ்விருவரும் (எச்சரித்துக்) கூறும் வரை எவ ருக்கும் (அச்சூனியத்தை அவ்விருவரும் கற்றுக் கொடுக்கவில்லை; (அவ்வாறிருந்தும்) கணவனுக்கும் அவன் மனைவிக்குமிடையே அவர்கள் பிரிவினையை உண்டாக்கும்

செயலை அவ்விருவரிடம் இருந்தும் கற்றுக் கொண்டனர்; எனினும், அதன் மூலம் அவர்கள் அல்லாஹ்வின் அனுமதி கொண்டே தவிர எவருக்கும் அவர்கள் தீங்கிழைக்க முடியாது; மேலும், தங்களுக்கு தீங்கிழைப்பதையும், தங்களுக்கு (எவ்வித)ப் பலன் தராததையும் அவர்கள் கற்றுக் கொண்டனர். இதனை (சூனியத்தை) விலைக்கு வாங்கிக் கொண்டாரே அவருக்கு மறுமையில் எவ்வித பாக்கியமும் கிடையாது என்பதையும் அவர்கள் திட்டமாக அறிந்திருந்தனர்; தம் ஆத்மாக்களை, எதற்குப் பகரமாக அவர்கள் விற்று விட்டார்களோ அது மிகக் கெட்டதாகும் – (இதனையெல்லாம்) அவர்கள் அறிந்திருக்க வேண்டுமே!

– அல்குர்ஆன் (2 : 102)

---

முன்பொரு காலத்தில் பாபில் எனும் நகரத்திலும், உலகின் பல பாகங்களிலும், சூனியம், மந்திரம், ஏவல் போன்ற ஜதீக விஷயங்கள் பரவி மக்கள் பல்வேறு மௌடீக சிந்தனையில் ஆழ்ந்தனர். அதன் வீரிய சக்தியில் ஆச்சரியப்படலாயினர். அதன் மூலம் இணை வைப்புகளும் பெருகின. அதை மார்க்கமாக நம்பி செயல்படவும் துணிந்தனர். இவர்களின் எண்ணங்களை சுத்தப்படுத்துவதற்காக அல்லாஹு ஜல்ல ஷஃனுஹு தஆலா ஹாரூத் - மாரூத் என்ற இரண்டு வானவர்களை அனுப்பி வைத்தான். இவர்கள் மக்களுக்கு சூனியத்தின் அசல் நிலையையும், அதன் ஆபத்துகளையும், அதில் அத்துமீறுவது ஈமானை இழக்கச் செய்து விடும் என்றும், சூனியத்தின் மீது நம்பிக்கை கொண்டு அல்லாஹ்வின் வல்லமையை மறந்திடக் கூடாது என்றும் போதனை செய்தார்கள். சூனியத்தைப் பற்றி தெரிந்து கொள்ள வந்தவர்களிடம் இதை தவறாகப் பயன்படுத்தக் கூடாதென உத்தரவாதம் பெற்ற பிறகே கற்றுக் கொடுத்தார்கள். கூறினார்கள் : நாங்கள் உங்களின் சோதனைக்காகவே அனுப்பப்பட்டுள்ளோம். ஆனால் சூனியத்தைப் பற்றி தெரிந்து கொண்டவர்கள் அதை தவறுக்காகவே பயன்படுத்தினார்கள். அக்கலையை கற்றுக் கொண்ட மக்கள் குடும்பங்களை பிரிப்பதற்கு பயன்படுத்தினார்கள். ஈமானை இழந்து குஃப்ரை தேர்ந்தெடுத்தார்கள். யார் சூனியத்தை தேர்ந்தெடுத்தார்களோ அவர்களுக்கு மறு உலகில் எவ்வித பங்கும் கிடையாது என்கிறான் அல்லாஹ்.

சூனியம் என்பது ஒரு ஆயுதம் போன்றது. ஆயுதத்தை புழங்கினால் அதன் பிரதிபலிப்பு ஏற்படுவது இயல்பு போல, இதன் பிரதிபலிப்பும் ஏற்படும். அந்த வகையில் தான், யூதன் செய்த சூனியத்தின் விளைவு நபிகள் நாயகம் (ஸல்) அவர் களின் மீதும் ஏற்பட்டது. வல்ல ரஹ்மானின் உதவியால் விலகியது. சூனியத்தின் உண்மை நிலை ஷைத்தானை சந்தோஷப்படுத்தி, அவனின் உதவி பெற்று, அவன் சந்தோஷப்படும்படி சிலைகளை பூஜித்து, அதன் மீது பலி கொடுத்து, அசுத்தமான நிலையிலிருந்து செயல்படுவது. அதன் மூலம் எதிராளியை நிலை குலைய வைப்பது, அவரின் புத்தியை செயலிழக்கச் செய்வது, அவரின் குடும்பத்தை சீரழிப்பது, வியாபாரத்தை சிதறடிப்பது. இவை அனைத்தும் சூனியத்தின் விளைவாகும்.

கண்கட்டி வித்தைகள் காட்டுவது, ஒருவரின் உள்ளத்தை தன் பக்கம் கவரை மெஸ்மெரிசம் செய்வது, அதன் மூலம் அவரின் உடமைகளை அபகரிப்பது, மானபங்கப்படுத்துவது, பிறரை தன் வசப்படுத்துவதற்காக பேச்சுக் கலை பயில்வது. தன்னை அலங்கரிப்பது போன்ற அனைத்தும் சூனியத்தில் கட்டுப்பட்டதே.

ஹள்ரத் கஃபுல் அஹ்பார் (ரளி) அவர்கள் யூதராக இருந்து முஸ்லிமானவர். எனவே யூதர்களின் வெறுப்பும், விரோதமும் அவர்களின் மீது இருந்தது. கஃபுல் அஹ்பார் (ரளி) கூறுகிறார்கள் : நான் நாள்தோறும் அல்லாஹ்வின் திருநாமங்களைக் கொண்டு உதவி தேடுகிறேன். இல்லையெனில் யூதர்கள் சூனியத்தால் என்னை கழுதையாக மாற்றி விடுவார்கள் என்றார்கள். கஃபுல் அஹ்பார் (ரளி) அவர்கள் ஓதிவந்த வார்த்தைகள் பின்வருமாறு :

காலை, மாலை ஒரு தடவை கீழ்காணும் வாசகங்களை கூறிக் கொண்டால் சூனியங்களும், சூழ்ச்சிகளும் தவிடுபொடியாகிவிடும்.

أَعُوذُ بِاللهِ الْعَظِيمِ الَّذِي لَيْسَ بِشَيْءٍ أَعْظَمَ مِنْهُ وَبِكَلِمَاتِ اللهِ التَّامَّاتِ الَّتِي لَا يُجَاوِزُهُنَّ بَرٌّ وَلَا فَاجِرٌ وَبِأَسْمَاءِ اللهِ الْحُسْنَى كُلِّهَا مَا عَلِمْتُ مِنْهَا وَمَا لَمْ أَعْلَمْ مِنْ شَرِّ مَا خَلَقَ وَبَرَأَ وَذَرَأَ

**மவ்லவீ ஹாஃபிழ் பீ.இஸட்.பரகத் அலீ பாழில் பாகவி**

# மாநபியின் மணிமொழிகள்

قَالَ أَبُوْ هُرَيْرَةَ يَأْثُرُ عَنِ النَّبِيِّ ﷺ
قَالَ: إِيَّاكُمْ وَالظَّنَّ فَإِنَّ الظَّنَّ أَكْذَبُ
الْحَدِيْثِ، وَلاَ تَجَسَّسُوْا، وَلاَ تَحَسَّسُوْا،
وَلاَ تَبَاغَضُوْا، وَكُوْنُوْا إِخْوَانًا.

"(பிறர் மீது) கெட்ட எண்ணம் கொள்வது குறித்து உங்களை நான் எச்சரிக்கிறேன். ஏனெனில், கெட்ட எண்ணம் தான் பேச்சுக்களிலேயே மிகவும் பொய்யான தாகும். (மற்றவர்களின் குற்றங் குறைகளை) துருவித் துருவி ஆராயாதீர்கள். ஒட்டுக் கேட்காதீர்கள். ஒருவரோடொருவர் பகைத்துக் கொள்ளாதீர்கள். (அல்லாஹ்வின் அடியார்களே!) சகோதரர்களாய் இருங்கள்" என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அருளியுள்ளார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள்


**65ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் குர்ஆனின் குரலுக்கு மனமார்ந்த நல் வாழ்த்துகள்!**

**செய்யது சகோதரர்கள்**

**நாகூர்**

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயரால்...
குர்ஆனின் குரல்
குரல் : 65 ★ எதிரொலி – 1
ஜமாதுல் ஆகிர் 1443 ஜனவரி – 2022

# வயது 65

## அல்லாஹ்வின் உபகாரங்களை என்னவென்று சொல்வது?

கடந்த 64 ஆண்டுகளில் இந்த குர்ஆனின் குரல் வளர்க்கப்படுவதற்காக எடுத்துக் கொண்ட முயற்சிகளும், அதற்காக செய்யப்பட்ட தியாகங்களும் அதன் தொடரால் வளர்ந்து வளர்ந்து இன்றைய நிலையில் அதனை பார்க்கும்போது அந்த சிந்தனைகள் எங்களை மெய்சிலிர்க்க வைத்துள்ளன. அல்லாஹு அக்பர்!

80 வயதானாலும், 90 வயதானாலும், 95 வயதை தொட்டாலும் அல்லாஹ் எங்களுக்கு கண் பார்வை கொடுத்திருக்கின்ற வரை நாங்கள் குர்ஆனின் குரலை படித்துக் கொண்டே இருப்போம் என்ற சிலரின் குரல்களும், கண் பார்வையே மங்கிப் போய் விட்டாலும் பிறிடம் படிக்கச் சொல்லி குர்ஆனின் குரல் கூறும் கருத்துக்களை எங்களின் செவிகளின் வழியாக எங்களின் உள்ளங்களில் ஏற்றி எங்களின் சந்ததிகளுக்கு அவற்றை போதிப்போம் என்ற சிலரின் குரல்களும் உண்மையில் எங்களின் சிந்தனைகளை திகைக்க வைக்கிறது.

குர்ஆனின் குரலை படிக்கா விட்டால் எங்களுக்கு பைத்தியம் பிடித்தத்தைப் போல் ஆகிவிடுகின்றது என்றும், ஓரிரு நாட்கள் அதன் தேதிகளில் தாமதம் ஏற்பட்டுவிட்டால் எங்கள் பெற்றோர்களுக்கு எங்களால் பதில் சொல்ல முடியாதே என்ற தவிப்பான குரல்களும் எங்களின் சிரமங்களை தூக்கியெறிய செய்து விடுகின்றன.

குர்ஆனின் குரலின் நிறுவனர் **பள்ளபட்டி அஸ்மியான் அல்லாமா மர்ஹூம் மு.அப்துல் ஜப்பார் பாகவி ஹஸ்ரத் (நவ்வரல்லாஹு மர்கதஹு-ரஹிமஹுல்லாஹு தஆலா அலைஹி)** அவர்களும், அவர்களுக்கு தூணாகவும் – துணையாகவும் – பக்க பலமாகவும் நின்று ஊக்கமூட்டி செயல்பட்டுவந்த அன்னாரின் அருமை துணைவியார் **அல்ஹாஜ்ஜா மர்ஹூமா ஹவ்வா பீவி அம்மாள் (நவ்வரல்லாஹு மர்கதஹா-ரஹிமஹுல்லாஹு தஆலா அலைஹா)** அவர்களும், அவர்களின் வழிநின்று சுமார் 50 ஆண்டுகாலம் இந்த குர்ஆனின் குரலை வானளாவிய

அளவில் உயர்த்திக் காட்டிய **"அஸ்அதுல் மில்லத்"** மறைந்த மாமேதை மவ்லானா முஃப்தீ அல்ஹாஜ் அல்லாமா அஸ்மியான் **அ.முஹம்மது அஷ்ரஃப் அலீ** மன்பயீ ஹள்ரத் **(நவ்வரல்லாஹு மர்கதஹு-ரஹிமஹுல்லாஹு தஆலா அலைஹி)** அவர்களும் செய்த கடுமையான தியாகங்கள்தான் 64 வருடங்களை கடக்கின்ற நிலையிலுங்கூட மேற்கண்ட எங்கள் அன்பான வயது முதிர்ந்த வாசகப் பெருமக்களின் வார்த்தைகள் நிச்சயம் எம் உள்ளத்தையும், சிந்தனையையும் தட்டுவதற்கு போதுமானதாகும். அல்ஹம்து லில்லாஹ்! இவற்றையெல்லாம் நினைத்துப்பார்க்கும்போது அல்லாஹ்வின் அந்த திருவசனம்தான் நினைவுக்கு வருகிறது.

وَإِنْ تَعُدُّوا نِعْمَةَ اللّٰهِ لَا تُحْصُوهَا

**"நீங்கள் அல்லாஹ்வின் அருட்கொடையை எண்ணுவீர்களேயானால் அதனை நீங்கள் கணக்கிட முடியாது"** -அல்குர்ஆன் (16 : 18)

என்று அல்லாஹ் தன் திருமறையில் குறிப்பிடுகிறான்.

கடந்த சுமார் மூன்று வருடங்களாக குர்ஆனின் குரலின் ரிஜிஸ்ட்ரேசன் விஷயத்தில் ஏற்பட்ட சிக்கல்களினாலும், அதன்பின் ஏற்பட்ட கொடூர நோய்களின் பிரச்சினையாலும், மழைக்காலங்களின் தொடர் மழைகளாலும், தபால் துறையின் கடுமையான எண்ணிப் பார்க்க முடியாத போஸ்டல் சார்ஜ் அதிகரிப்பினாலும் குர்ஆனின் குரலுக்கு ஏற்பட்டுள்ள மிக சிக்கலான நிலையிலுங்கூட, மேற்குறிப்பிட்ட எங்கள் அன்பான வாசகர்களின் ஊக்கமளிக்கும் வார்த்தைகளும், உரிமையோடு நேரிலும், போன்களிலும், கடிதங்கள் மூலமும் எங்களை கடிந்து கொண்ட வார்த்தைகளும் எந்த நிலையிலும் எங்களை இந்த கித்மத்துகளை விட்டு மனம் தளர்ந்து சோர்ந்து போக விட்டு விடவில்லை.

மாறாக, அல்லாஹ்வின் எண்ணிப் பார்க்க முடியாத உபகாரங்களின் ஒன்றாக எந்த நிலையிலும், எந்த சிரமமான சூழ்நிலையிலும் ஒரு நல்லடியாரால் மனத்தூய்மையோடு உருவாக்கப்பட்ட - இன்னொரு நல்லடியாரால் வளர்க்கப்பட்ட இந்த குர்ஆனின் குரல் நிச்சயம் எந்த தாக்குதலுக்கும் வலுவிழந்து விடாது என்ற முழு நம்பிக்கையை அல்லாஹ் எங்கள் முன்னோர்களுக்கு கொடுத்தது போன்று எங்களுக்கும் கொடுத்திருக்கிறான். அல்ஹம்து லில்லாஹ்!

எங்களுடன் தோளோடு தோள் நின்று குர்ஆனின் குரலுக்காக பாடுபடக்கூடிய எங்கள் அருமையான ஊழியர்களுக்கும்,

மழையிலும், வெயிலிலும், நோயிலும், சுகத்திலும் குர்ஆனின் குரலை மக்களுக்கு கொண்டு போய் சேர்க்கும் பணியில் ஈடுபட்டுள்ள எங்களின் அன்பான விற்பனையாளர்களுக்கும்,

அவ்வாறே, எந்த ஊரடங்கு போட்டாலும், எத்துணை நாட்கள் வியாபாரங்கள் ஸ்தம்பித்தாலும் "குர்ஆனின் குரலுக்கு எங்கள் உபகாரமாக நாங்கள் செய்து வரக்கூடிய விளம்பரங்களை எந்த நிலையிலும் விடாமல் கொடுத்து வருவோம்" என்ற சிந்தனையோடு எங்களுக்கு பக்கப்பலமாக எங்களை ஊக்கமூட்டி கொண்டிருக்கக் கூடிய அருமையான விளம்பரதாரர்களுக்கும் அல்லாஹ் அதே நம்பிக்கையை கொடுத்திருக்கிறான் போல!

அவ்வாறே, குர்ஆனின் குரலுக்காக எழுதி எழுதி இந்த முழு சமுதாயத்திற்கும் மார்க்க விஷயங்களை கொண்டுபோய் சேர்ப்பதற்காக கிதாபுகளை தேடித் தேடி சரியான ஆதாரங்களோடு எழுத்துக் களை வார்தெடுத்துக் கொடுத்த கண்ணியமான எங்களுடைய உலமா பெருமக்களுக்கும், மரியாதைக்குரிய எழுத்தாளர்களுக்கும் அல்லாஹ் அந்த நம்பிக்கையை மிக அதிகமாகவே கொடுத்திருக்கிறான் போல!

அதனால்தான் நாங்கள் கேட்டாலும் கேட்காவிட்டாலும் பல நூறு வருடங்களை குர்ஆனின் குரல் இன்ஷா அல்லாஹ் எப்படியும் கடந்து உலக இறுதி நாள் இருக்கின்ற வரை அதன் சேவை தொடர்ந்தே தீரும் என்ற நம்பிக்கையோடு தங்கள் ஆக்கங்களை தேதிகள் தாண்டாமல் சரியான தேதிகளுக்கு முன்னரே எழுதி அனுப்பி வருவதும் எங்களை ஆச்சரியத்திற்கு உள்ளாக்குகிறது. அப்படிப்பட்ட எங்களுடைய அனைத்து நல்லுள்ளங்களுக்கும் குர்ஆனின் குரல் 65ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கின்ற இந்த நன்நேரத்தில் எங்களின் நெஞ்சார்ந்த நன்றியை துஆக்களின் மூலமாக வெளிப்படுத்துகின்றோம்.

அல்லாஹ்வே! எங்களின் இந்த ஊழியர்கள், விற்பனையாளர்கள், விளம்பரதாரர்கள், எழுத்தாளர்கள், உலமாபெருமக்கள் அனைத்து பேர்களுக்கும் உன்னுடைய நிரப்பமான கூலியை சொர்க்கமாகவும், உன்னுடைய திருப்பொருத்தமாகவும், உன்னுடைய திருச்சந்திப்பா கவும் தந்தருள் புரிவாயாக.

இந்த குர்ஆனின் குரலுக்காக உழைத்து உழைத்து உன்னிடத்தில் வந்து சேர்ந்துவிட்ட எங்கள் முன்னோர்களுக்கும், எங்களின் மரியாதைக் குரிய தியாகிகளுக்கும் நீ சுவனத்தின் உயர்ந்த அந்தஸ்துகளை வழங்கி அவர்களை உன் ரஹ்மத்தால் முழுமையாக போர்த்திக் கொள்வாயாக.

இந்த குர்ஆனின் குரல் உலகம் இருக்கும் நாள் வரை ஸ்திரமாக இருந்து, எல்லா நிலையிலும் உன் பொருத்தத்தை மட்டுமே நோக்கமாகக் கொண்டு செயல்படக்கூடிய நல்ல நஸீபை எங்கள் அனைவருக்கும் தந்தருள் புரிவாயாக.

ஆமீன் ஆமீன் யாரப்பல் ஆலமீன்

வல்ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்!

# புனித பயணிகளை வேதனைப்படுத்தாதீர்!

2022-ம் ஆண்டில் புனித ஹஜ்ஜு பயணம் செல்லும் பயணிகளுக்கு சென்னையிலிருந்து விமான சேவை இயக்கப்படமாட்டாது என ஒன்றிய அரசு அறிவித்துள்ளது.

தமிழ்நாடு, புதுச்சேரி, அந்தமான், நிக்கோபர் தீவு மற்றும் தமிழகத்தையொட்டியுள்ள ஆந்திரா பகுதியிலிருந்து ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட புனித பயணிகள், ஆண்டுதோறும் சென்னை விமான நிலையத்திலிருந்துதான் தங்களின் புனிதப் பயணத்தை தொடங்குகின்றனர்.

ஆனால், ஒன்றிய அரசு இந்த புனித பயணிகளை 2022-ம் ஆண்டில் கேரள மாநிலம் கொச்சியிலிருந்து ஹஜ்ஜு பயணத்தை தொடங்க வேண்டும் என்று அறிவித்துள்ளது.

ஒன்றிய அரசின் இந்த அறிவிப்பு ஹஜ் பயணிகளுக்கு மிகுந்த சிரமத்தை ஏற்படுத்தக்கூடியதாகும். புனிதப் பயணம் மேற்கொள்ளும் பயணிகளுக்கு ஒன்றிய அரசின் இந்த அறிவிப்பு பெரும் அதிர்ச்சியையும், ஏமாற்றத்தையும் அளித்துள்ளது.

இங்குள்ள புனித பயணிகள் கொச்சி விமான நிலையத்திலிருந்துதான் தங்கள் பயணத்தை தொடங்க வேண்டும் என்று சொல்வது புனித பயணிகளுக்கு பல்வேறு சிரமங்களை ஏற்படுத்தும்.

எனவே, ஒன்றிய அரசு புனித பயணிகளை வேதனைப்படுத்தாமல் தமிழ்நாடு, புதுச்சேரி, அந்தமான், நிக்கோபர் தீவு, தமிழகத்தையொட்டியுள்ள ஆந்திரப் பகுதியிலிருந்து புனித பயணத்தை தொடங்கும் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட ஹஜ் பயணிகள், சென்னை விமான நிலையத்திலிருந்து புறப்படுவதற்கு ஒன்றிய அரசு ஏற்பாடு செய்ய வேண்டுகிறோம்.

உம்ரா செய்வதற்காக செல்லும் ஒருவர், கடனாளியாக இருந்தால் ஏதாவது பாதிப்புகள் ஏற்படுமா? பணவசதியும், ஆரோக்கியமும் உள்ள முஸ்லிமுக்கு கடனை அடைப்பது முக்கியமா? அல்லது ஹஜ், உம்ரா செய்வது முக்கியமா?

**திருவிதாங்கோடிலிருந்து**
**ஏ.ஹக்கீம் சேட்**

அல்லாஹ்வின் கடமையும், மனிதர்களின் கடமையும் மோதும்போது அடியார்களின் கடமைதான் அங்கு முக்கியத்துவம் பெறும் என்று மார்க்கம் கூறுகிறது. எனவே, கடன்களை அடைத்தபிறகுதான் ஹஜ் கடமையாகிறது. எனவே, கடமையில்லாத உம்ராவிற்காக கடனை தள்ளிப்போடுவது கூடாது.

நிக்காஹ் முடித்தப் பெண்கள், கழுத்தில் கருகமணி அணிந்து கொள்கிறார்களே! அப்படி அணிவது குற்றமாகுமா?

**கரூரிலிருந்து**
**எஸ்.ர:பிக் அஹமது**

குற்றமாகாது.

மய்யித் அடக்கம் செய்யப்பட்டபின்பு தல்கீன் ஓதப்படுகிறது. அதன் பொருளடக்கம் என்ன?

**காக்கிநாடாவிலிருந்து**
**எம்.தகிய்யுத்தீன்**

ஒரு மய்யித் அடக்கம் செய்யப்பட்டவுடன் அவரிடம் கேள்வி கேட்பதற்காக இரண்டு வானவர்கள் வருவார்கள். அவருடைய ஈமானை உறுதிப்படுத்துவதற்காக அல்லாஹ்வை பற்றியும், அவனின் மார்க்கத்தைப் பற்றியும், அவனின் திருத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களைப் பற்றியும் மூன்று கேள்விகள் கேட்பார்கள். தல்கீன் ஓதுபவர், அந்த கபுராளியின் பெயரைச் சொல்லி "உன்னிடத்தில் வரக் கூடிய இரண்டு மலக்குகள் இப்படி இப்படி கேள்வி கேட்பார்கள். அதற்கு இப்படியெல்லாம் பதில் சொல்" என்று அவருக்கு சொல்லி கொடுப்பார். உண்மையான சுவனவாதிக்கு

# பதில்கள்

மவ்லவீ முஃப்தீ **மு.முஹம்மது இஸ்மாயீல்**
காஷிஃபீ பாஜில் தேவ்பந்தீ ஜலாலாபாதீ

நிச்சயம் இவரின் பயிற்சி பலன் கொடுக்கும். இதுதான் அவர் சொல்லிக் கொடுக்கும் தல்கீனின் சாராம்சமாகும்.

"சுப்ஹான ரப்பிக்க ரப்பில் இஜ்ஜத்தி அம்மா எஸிபூன் வஸ லாமுன் அலல் முர்ஸலீன் வல் ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன்" என்ற துஆவின் பொருள் என்ன? ஜமாஅத்துடன் தொழும்போது மட்டும் மேற்கண்ட துஆவை ஓத வேண்டுமா? அல்லது தனியாக தொழுதாலும் ஓதிக் கொள்ளலாமா?

**கள்ளக்குறிச்சியிலிருந்து**
**அஹமது பாஷா**

எந்த துஆவின் முடிவிலும் ஸலவாத்துக்குப்பின்பு மேற்கண்ட இறை வசனங்களைக் கொண்டு அந்த துஆவை முடித்துக் கொள்ள லாம். அதன் பொருளாவது :

"**கண்ணியத்திற்குரிய ரப்பாகிய உம்முடைய ரப்பு, அவர்கள் வர்ணிப்பவற்றை விட்டும் மகா தூய்மையானவன்.**

**ரஸூல்களின் மீது ஸலாம் உண்டாவதாக!**

**புகழனைத்தும் அனைத்துலகங்களின் ரப்பாகிய அல்லாஹ்வுக்கே உரித்தாகும்.**"

-அல்குர்ஆன் (38 : 180 - 182)

நான் ஒளு செய்யும்போது, கெட்ட எண்ணங்கள் வருவதால் மீண்டும் மீண்டும் ஒளு செய்கிறேன். இவ்வாறே தொழுகைக்கு தக்பீர் கட்டிய பின்பும் கெட்ட சிந்தனைகள் வருவதால் மீண்டும் மீண்டும் தக்பீர் கட்டுகிறேன். இது சரிதானா?

**திருப்பத்தூரிலிருந்து**
**மதார் மைதீன்**

மார்க்கம் யாரையும் அவ்வளவு சிரமப்படுத்துவதில்லை. எனவே, நன்றாக ஒரு முறை ஒளு செய்து விட்டாலே போதுமானது. கெட்ட சிந்தனைகள் காரணமாக ஒளு முறிந்து விடுவதில்லை. ஒளு மற்றும் தொழுகைகள் நிறைவேறி விடுகின்றன. இருப்பினும், இந்த சிந்தனைகள் ஏற்பட்டதற்காக அல்லாஹ்விடம் பாவ மன்னிப்பு தேடுவதும், மீண்டும் மீண்டும் இதுபோன்ற கெட்ட சிந்தனைகள் ஏற்படாமலிருப்பதற்காக அல்லாஹ்விடம் பாதுகாப்பு தேடுவதும் அவசியமாகும். இதற்காகவும் தான் ஒளு செய்யும்போது ஒவ்வொரு நிலையிலும் மார்க்கம் அற்புதமான துஆக்களை சொல்லித் தந்துள்ளது. அவற்றை ஓதுவதால் இதுபோன்ற தீய எண்ணங்களிலிருந்து பாதுகாப்பு பெறலாம். இன்ஷா அல்லாஹ்!

நான் பல வருடங்களாக சில பத்திரிகைகளின் சிரிப்பு பகுதிக்கு உருவப் படங்களை வரைந்து அனுப்பிக் கொண்டி

ருந்தேன். ஆனால், அது ஒரு பெரிய குற்றம் என்று தெரிந்த பிறகு அதை முழுவதுமாக நான் விட்டுவிட்டேன். நான் செய்த குற்றங்களை அல்லாஹ் மன்னிப்பானா?

✍ தவறுக்காக மனதால் வருந்தியவர்களின் பாவங்களை அல்லாஹ் நிச்சயம் மன்னிக்காமல் இருப்பதில்லை.

☛ வாரந்தோறும் வெள்ளிக்கிழமை மஃரிப் தொழுகைக்குப் பின் சூரா கஹ்பை ஓதுவதின் நன்மைகள் என்ன?

**மங்களூரிலிருந்து**
**எஸ்.அப்துல் முத்தலிபு**

✍ மனிதன் அல்லாஹ்வின் மீது முழு நம்பிக்கையோடு அந்த சூராவை ஓதி வந்தால் இன்ஷா அல்லாஹ் அந்த வாரத்தினுடைய தேவைகளை அவருக்கு அல்லாஹ் நிறைவேற்றிக் கொடுப்பான்.

☛ ஒருவர் தனியாக பாத்ரூமுக்குள் குளிக்கும்போது நன்றாக சுத்தம் செய்வதற்காக ஆடையின்றி குளிக்கலாமா? அப்படியே ஒளு செய்து கொண்டு உடையணிந்து தொழுகலாமா?

**புதுவையிலிருந்து**
**எஸ்.ஷேக் அப்துல்லாஹ்**

✍ தனிமையிலிருந்தாலும் அப்படி அறவே ஆடையின்றி குளிப்பது மக்ரூஹ் என்று மார்க்க அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள். எனவே, அப்படி குளிக்க வேண்டாம்.

☛ தப்லீக் ஜமாஅத் என்பது சுன்னத்வல் ஜமாஅத்தில் கட்டுப்பட்டதுதானா?

**ஈரோட்டிலிருந்து**
**க. தாஹிர் பாஷா**

✍ ஆம்.

☛ சிலர் உறவுகளில் பகைமையுணர்வோடு ஹஜ்ஜுக்கு செல்கிறார்களே. இவர்களுக்கு ஹஜ்ஜின் முழு நன்மைகள் கிடைக்குமா?

**சிறுவாடியிலிருந்து**
**எஸ்.எம்.அப்துல் கனி**

✍ கிடைக்காது.

☛ எங்கள் ஊர் பகுதியில் ஒரு கிராமத்தில் வயது முதிர்ந்த ஒருவருக்கும், இளைஞர் ஒருவருக்கும் தகராறு ஏற்பட்டு முதியவர், வாலிபரை அடித்தும் விட்டார். வாலிபரோ அந்த முதியவரை வாய்க்கு வந்தபடியெல்லாம் திட்டி முடித்தார். ஜமாஅத்தில் பஞ்சாயத்து வைத்து அந்த முதியவருக்கு 15,000 ரூபாய் அபராதம் விதித்தனர். இரண்டு பேருமே முஸ்லிம்கள். இப்படி அபராதம் விதித்து தொகைகளை பெறுவது ஆகுமானதுதானா?

**வண்டலூரிலிருந்து**
**என்.காஜா முஹம்மது**

✍ ஏதாவது, பொருளாதார நஷ்டங்கள் ஏற்பட்டிருந்தால் அல்லது உடல் காயங்கள் ஏற்பட்டு மருத்துவ செலவுகள் ஏற்பட்டிருந்தால் அந்தளவுக்

குள்ள தொகைகளை வாங்கி கொடுப்பது தவறல்ல. இதற்கு அப்பாற்பட்டு அபராதத் தொகைகளை விதிப்பதும், வாங்குவதும் ஹனஃபீ மத்ஹபின் சட்டப்படி ஆகுமானதல்ல.

☛ வீட்டிற்கு முன்புறம் அல்லது பின்புறத்தில் புளியமரம் வளர்க்கக்கூடாது என்கிறார்களே. அதன் இரகசியம் தங்களுக்கு தெரியுமா?

**ஆடுதுறையிலிருந்து**
**முஹம்மது எஹ்யா**

✍ எங்களுக்கு தெரியாதே! விவசாய கல்லூரிகளில் பேராசிரியர்களாக பணிபுரிபவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டால் மிகவும் நன்றாக இருக்குமே....! மார்க்க ரீதியாக புளியமரம் வைப்பது தடுக்கப்படவில்லை என்பது மட்டும் எங்களுக்கு தெரியும்!

☛ ஒரு பள்ளிவாசலின் பொறுப்புதாரர் வட்டி மூலம் வரவு - செலவு செய்கிறார். அவர் பள்ளியில் பதவி வகிக்கலாமா? ரமளான் மாதத்தில் அவர் கொடுக்கும் பணத்தைக் கொண்டு கஞ்சி காய்ச்சலாமா? அந்த கஞ்சியை கொண்டு நோன்பாளிகள் நோன்பு திறக்கலாமா?

**ஆத்தூரிலிருந்து**
**ஐ.அப்துர் ரஜ்ஜாக்**

✍ அவர் அந்தப் பள்ளியில் பதவி வகிப்பது, பள்ளிவாசலுக்காக நன்கொடைகள் கொடுப்பது, அந்த நிர்வாகம் அவற்றை ஏற்றுக்கொள்வது, நோன்பாளிகள் அவர் கொடுத்ததைக் கொண்டு நோன்பு திறப்பது போன்ற அவரின் அனைத்து செயல்பாடுகளும் ஹராமாகும். அதே சமயம் அவரிடம் வட்டியில்லாத ஹலாலான வேறு வருமானங்கள் இருக்குமானால் அவற்றிலிருந்து அவர் நன்கொடைகளை கொடுத்திருந்தால் அவை ஹலாலானதாகவே கருதப்படும்.

☛ இறையச்சம் அதிகரிக்க என்ன செய்ய வேண்டும்?


**வி.களத்தூரிலிருந்து**
**எம்.ரியாஸ் அஹமது**

✍ அதிகம் நோன்பு வைக்க வேண்டும்.

☛ நான் 80 கிலோ மீட்டர்களுக்கு மேலுள்ள ஒரு ஊருக்கு சென்று திரும்பிக் கொண்டிருந்தேன். நான் வீடு வந்து சேருவதற்குள் அஸர் தொழுகையின் நேரம் முடிந்து விட்டது. இப்போது நான் இந்த அஸர் தொழுகையை நான்கு ரக்அத்துகளாக நிறைவேற்ற வேண்டுமா? அல்லது இரண்டு ரக்அத்துகளாகவா?

**மாயவரத்திலிருந்து**
**சிக்கந்தர் பாட்சா**

✍ நீங்கள் ஊருக்குள் நுழையும் போது அந்த அஸர் தொழுகையின் நேரம் இருந்திருந்தால் அந்த தொழுகையை நான்கு


கும்பகோணம்
சீமாட்டி
சில்க்ஸ் - ரெடிமேட்ஸ்

ரக்அத்துகளாக நிறைவேற்ற வேண்டும். நேரம் முடிந்து களா வாகிவிட்டால்அந்த தொழுகையை இரண்டு ரக்அத்துகளாகத்தான் நிறைவேற்ற வேண்டும்.

☛ ஆண்களும், பெண்களும் நகங்களின் மீது பாலிஷ் பூசிக் கொள்வது கூடுமா?

**ஆந்திராவிலிருந்து**
**எஸ்.அபூதாலிப்**

✍ ஒளு செய்யும்போது அல்லது குளிக்கும்போது தண்ணீர் படுவதற்கு அந்த பாலிஷுகள் தடையாக இருந்தால் நிச்சயம் அவற்றை பயன்படுத்துவது கூடாது.

☛ இஸ்லாத்தில் உருவ வழிபாடு இல்லாவிட்டாலுங் கூட அரசாங்கத்துடைய நிர்பந்தமான சட்டத்தின் காரணமாகவும், அவசியமான சூழ்நிலைகளின் காரணமாகவும், வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை போன்றவற்றில் அவசியமாக நம் உருவங்களை பதிக்கிறோம். அது போன்றே, உங்களிலுள்ள பொறுப்பாளர்கள் மற்றும் எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தும் விதமாக அவர்களுக்கு அடையாளமாக அவர்களின் புகைப்படங்களை இதழில் வெளியிட்டால் நன்றாக இருக்குமே! இது நிறைவேறுமா?

**புத்தாம்பூரிலிருந்து**
**முஹம்மது இப்ராஹீம்**

✍ இன்ஷா அல்லாஹ் நிச்சயம் அது நிறைவேறாது. இது ஒன்றும் அவசியமான தேவை கிடையாது அல்லவா! அவசியமின்றி, நிர்பந்தமான சூழ்நிலைகளின்றி ஹராமான ஒரு காரியத்தை ஹலாலாக்குவதற்கு உங்கள் குரல் இன்ஷா அல்லாஹ் என்றும் இடங் கொடுக்காது.

☛ தற்போது தஸ்பீஹ் எண்ணுவதற்காக புதிய மெஷின் வந்துள்ளது. அதைக் கொண்டு தஸ்பீஹ் ஓதினால் குறைந்த நேரத்தில் அதிகமான திக்ருகளை ஓத முடிகிறது. எனவே, அந்த மெஷினை பயன்படுத்தி தஸ்பீஹ் ஓதலாமா?

**தாராபுரத்திலிருந்து**
**ஜா.கௌஸ் முஹையதீன்**

✍ ஓதலாம்.

☛ ஒரு மனிதர் தொழுகை முடிந்தவுடன் வலது பக்கமாக திரும்பி நின்றுகொண்டு துஆ செய்ய கண்டேன். இதற்கு ஆதாரம் உண்டா?

**டாணாவிலிருந்து**
**என்.அப்துல் மஜீத்**

✍ இல்லை.

☛ இஸ்லாமிய மார்க்கத்தில் சடங்குகள் அதிகம் இருப்பதாகஎன் நண்பர் கூறுகிறாரே! சரிதானா?

**திருசெந்தூரிலிருந்து**
**என்.முஹம்மது சலீம்**

✍ சரியல்ல. இஸ்லாத்தை ஏற்றுள்ள, மார்க்கத்தை புரியாத சகோதரர்களிடமிருந்து சடங்குகள் ஏற்படுகின்றனவே தவிர, மார்க்கத்தின் அடிப்படையில் எந்த சடங்கு, சம்பிரதாயமும் நிச்சயம் அனுமதிக்கப்படவில்லை.

☛ என்னுடைய பல கேள்விகளுக்கு பதில் தராமல் அந்த கடிதங்கள் குப்பையில் செல்வதாக தெரிகிறதே!

**மும்பையிலிருந்து**
**அப்துல் முனீ:ப்**

✍ ஆம். இதிலென்ன சந்தேகம்! "ஒருவருக்கு ஒரு கேள்வி மட்டுமே போதும்" என்ற அறிவிப்பு ஒவ்வொரு இதழிலும் இடம்பெறுகிறது. அதை நீங்கள் ஏன் கண்டும், காணாமல் இருக்கிறீர்கள்? இனிமேலாவது மாதம் ஒரு கேள்வி கேட்டு மற்றவர்களுக்கும் இடம் தாருங்கள்.

☛ மாற்றுமத சகோதரர்கள் பூசணிக்காயில் வைத்து உடைக்கும் சில்லரை காசுகளை நாம் எடுத்து பயன்படுத்தலாமா?

**வண்டலூரிலிருந்து**
**மு.அப்துல் அஜீஸ்**

✍ ஹராமாகும்.

☛ இரண்டு சகோதரர்கள் தங்களுக்கு மத்தியில் சண்டையிட்டுக் கொண்டு, உறவைத் துண்டித்து வாழ்கிறார்கள். இருவரும் ஹஜ் செய்திருக்கிறார்கள். இந்நிலையில், பள்ளியில் இமாம் இல்லாத நேரத்தில் இவ்விருவரில் யாராவது ஒருவர் இமாமத் செய்தால் நாம் அவர்களை பின்பற்றி தொழலாமா? நம் தொழுகை கூடுமா?

**போரூரிலிருந்து**
**க.பாட்சா சாஹிப்**

✍ கூடும்.

☛ அரசாங்கத்திற்கு பயந்து வருமான வரி கட்டும் நம்மவர்கள், அல்லாஹ்வுக்கு பயந்து ஜகாத் கொடுப்பதில்லையே?

**காரிமங்கலத்திலிருந்து**
**அய்யூப் கான்**

✍ அரசாங்கம் கண்ணெதிரில் அதிரடியான நடவடிக்கையில் ஈடுபடும். அல்லாஹ் விசாலமானவன். அவன் உடனடியாக யாரையும் பிடித்து விட மாட்டான். அனைவரின் மீதும் இரக்கமுள்ளவன் போன்ற சிந்தனைகள் தான் மனிதனை மேற்கண்ட நிலைக்கு இழுத்துச் செல்கிறது.

உஷார்......! அல்லாஹ் மிகவும் இரக்கமுள்ளவன். நம் பணத்திலுள்ள அழுக்கை போக்குவதற்காக அவன் நமக்கு இரக்கத்தோடு "ஜகாத்" என்ற வழியை சொல்லி தந்திருக்கிறான். அவனது இரக்க சிந்தனையை பயன்படுத்திக் கொள்ளாவிட்டால் அவன் நம்மிடமுள்ள அந்த அழுக்கு மூட்டைகளை அகற்றுவதற்காக

நல்ல மூட்டைகளையும் சேர்த்து வெள்ளம் போல, சுனாமியாக வந்து அடித்துச் சென்று விடுவான். நவூதுபில்லாஹ்!

☛ தொழுகையின் நான்காவது ரக்அத்திற்கு செல்லாமல் மூன்றாவது ரக்அத்திலேயே உட்கார்ந்து ஸலாம் கொடுத்து விட்டால் எப்படி அந்த தொழுகையை சரி செய்வது? அவ்வாறே நான்கு ரக்அத்துக்கு பதிலாக ஐந்தாவது ரக்அத்திற்கு எழுந்து ஞாபகம் வந்துவிட்டால் என்ன செய்வது?

**திருச்சியிலிருந்து**
**த.ஹனீ:பா ராவுத்தர்**

✍ மூன்றாவது ரக்அத்திற்கு பிறகு அத்தஹிய்யாத்தின் இருப்பில் இருக்கும்போது ஸலாம் கொடுப்பதற்கு முன்பே ஞாபகம் வந்துவிட்டால் அப்படியே நான்காவது ரக்அத்திற்கு எழுந்து தொழுது ஸஜ்தா ஸஹ்வு செய்து, தொழுகையை நிறைவேற்றிக் கொள்ளலாம். ஸலாம் கொடுத்ததற்குப்பின்பு ஞாபகம் வந்தால் அந்த தொழுகை முறிந்து விடும். பிறகு, புதிதாக மீண்டும் அந்த ஃபர்ளுடைய நான்கு ரக்அத்துகளையும் நிறைவேற்ற வேண்டும்.

மேலும், நான்காவது ரக்அத்திற்கு பின் அத்தஹிய்யாத்தில் அமர்ந்து, பிறகு ஐந்தாவது ரக்அத்திற்கு எழுந்திருத்திருந்தால் அந்த ஐந்தாவது ரக்அத்துடன் இன்னொரு ரக்அத்தையும் சேர்த்து தொழுது ஸலாம் கொடுக்க வேண்டும். அப்பொழுது, முதல் நான்கு ரக்அத்துகள் ஃபர்ளாகவும், பிந்திய இரண்டு ரக்அத்துகள் நஃபிலாகவும் நிறைவேறும். ஆனால், நான்காவது ரக்அத்திற்குபின் இருப்பில் அமராமல் எழுந்திருத்திருந்தால் அவர் அந்த ரக்அத்தை மட்டும் முடித்துக் கொண்டு ஸலாம் கொடுத்து விட்டு, மீண்டும் அந்த ஃபர்ளுடைய நான்கு ரக்அத்துகளையும் புதிதாக நிறைவேற்ற வேண்டும்.

☛ எங்களின் கடை மற்றும் வீடுகளை வாடகைக்கு விட்டுள்ளோம். அவர்கள் சரியான முறையில் வாடகை தராத சூழ்நிலையில் அவர்களிடம் குறிப்பிட்ட ஒரு பெருந்தொகையை வாங்கிக் கொண்டு, அதை வியாபாரத்தில் முதலீடு செய்து, அந்த இலாபத்தை நாம் எடுத்துக் கொள்ளலாமா? அதனுடன் குறைந்த தொகையாக மாதா மாதம் ஒரு குறிப்பிட்ட தொகையை அவர்களிடமிருந்து வசூலித்துக் கொள்ளலாமா?

**பள்ளபட்டியிலிருந்து**
**அபூபக்கர்**

✍ அதற்கு பெயர்தான் 'ஒத்தி' ஆகும். இந்த முறை ஷரீஅத் ரீதியாக கண்டிப்பாக அனுமதிக்கப்பட்ட முறையல்ல. எனவே, இந்த செயல்பாடு ஹராமாகும்.

## குறையுள்ள பொருட்களை விற்பனை செய்யாதீர்!

"திராட்சை கருப்பாகாத வரையிலும், தானியங்கள் நன்றாக விளையாத வரையிலும் அவற்றை விற்பனை செய்வதை நபி (ஸல்) அவர்கள் தடை செய்தார்கள்."

அறிவிப்பாளர் : ஹள்ரத் அனஸ் (ரளி) அவர்கள் (ஆதாரம் : அபூதாவூது)

---


Successful indeed are the Believers

A.R.M

CEMENT KING

www.armsons.in

சிக்கனமான விலையில் சிமெண்ட், கம்பி வாங்கிட

தமிழகத்தின் Ist 24 மணி நேர சிமெண்ட் கடை

# A.R.M Sons

The Cement & Steel Market

வடக்கு ராஜ வீதி
புதுக்கோட்டை.
7373798900
7373798930
04322-221649

ஏர்போர்ட் ரோடு
திருச்சி.
7373798944
7373798942
armsonstrichy@gmail.com

ECR.
கோட்டைப்பட்டிணம்.
7373798911, 7373798912
04371-260260 armsonskpm@gmail.com

நகர் முழுவதும் 10 மூட்டைக்கும், மாவட்டம் முழுவதும் 50 மூட்டைக்கும் சிமெண்ட் இலவச டோர் டெலிவரி

☛ மாற்று மதத்தைச் சார்ந்த சில நண்பர்கள் ஸலாம் என்று கூறுகின்றனர். நாம் அவர்களுக்கு பதில் ஸலாம் கூறலாமா?

**வண்டிமேட்டிலிருந்து**
**எஸ்.ஜமால் முஹம்மது**

✍ அவர்கள் ஸலாம் என்று கூறினாலோ அல்லது அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறினாலோ நாம் "வஸ்ஸலாமு அலா மனித்தப அல்ஹுதா" என்ற வாசகத்தை அவர்களுக்கு சொல்ல வேண்டும். அதாவது, "நேர் வழியை பின்பற்றுபவர்கள் மீது அல்லாஹ்வின் சாந்தி உண்டாகுவதாக" என்பது அதன் பொருளாகும்.

☛ மதங்களில் யூத மதம், கிறிஸ்தவ மதம், இஸ்லாம் மதம் இருக்கின்றன. இவற்றிற்குள்ள ஒற்றுமைகளும், வேற்றுமைகளும் என்ன?

**புதுச்சேரியிலிருந்து**
**கே. முஹம்மது யாஸீன்**

✍ இவை மார்க்கங்களாக அல்லாஹ்வினால் மட்டுமே உருவாக்கப்பட்டன என்பது ஒற்றுமையாகும். ஆனால், முந்திய இரண்டும் அதன் சட்டங்களும் இஸ்லாத்தின் மூலமாக, குர்ஆனின் மூலமாக முடக்கப்பட்டுவிட்டன. இப்போது அல்லாஹ்வினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரே மார்க்கம் இஸ்லாம் மட்டுமே என்பது அதன் வேற்றுமையாகும்.

☛ நான் ஹனஃபீ மத்ஹபைச் சார்ந்தவள். இதுவரை வித்ரு வாஜிபு தொழுகையை மற்றவர்கள் தொழுவதைப் போன்று இரண்டு ரக்அத்துகள் முடிந்ததும் இருப்பில் அமர்ந்து பிறகு மூன்றாவது ரக்அத்தை தொழுது வந்தேன். ஆனால், சிலர் அப்படி இருப்பில் அமரக் கூடாது. மூன்று ரக்அத்துகளையும் தொடர்ந்துதான் நிறைவு செய்ய வேண்டும் என்று கூறுகிறார்கள். சரியான வழி என்ன?

**பெங்களூரிலிருந்து**
**அ.ஹாஜரா**

✍ நீங்கள் வழமையாக தொழுது கொண்டிருப்பது தான் ஹனஃபீ மத்ஹபின் சரியான வழியாகும். வழியை மாற்றி விடாதீர்கள்.

☛ முஹம்மது ஃபஹீம், ஃபஹீமா, ஐனுல் மர்ளிய்யா ஆகிய பெயர்களுக்கு பொருளென்ன? ஆங்கிலத்தில் அவற்றை எப்படி எழுதுவது?

**வடவள்ளியிலிருந்து**
**எம்.நஸீர் அஹமது**

✍ ஃபஹீம் (Faheem) என்பதற்கு "விளக்கம் உள்ளவன்" என்றும், ஃபஹீமா (Faheema) என்பதற்கு "விளக்கம் உள்ளவள்" என்றும், ஐனுல் மர்ளிய்யா (Ainul Marliya) என்பதற்கு "பொருந்திக் கொள்ளப்பட்ட ஊற்றுக்கண்" என்றும் பொருள் கொள்ளப்படும்.

# புத்தாண்டு!

மவ்லானா அல்ஹாஜ் **ஜே.எம்.அப்துல் ஜப்பார்** தாவூதி பாஜில் மன்பஈ
**(ஜம்பை ஜப்பார்)**

"முஃமின்களே! உங்கள் சப்தத்தை நபியின் சப்தத்திற்கு மேல் உயர்த்தாதீர்கள். உங்களில் சிலர் சிலரிடம் இரைந்து பேசுவது போல் அவரிடம் இரைந்து பேசாதீர்கள். (ஏனெனில்) நீங்கள் உணர்ந்து கொள்ளாத நிலையில் உங்களுடைய (நற்) செயல்கள் அழிந்து விடும்"

- அல்குர்ஆன் (49 : 2)

இந்த வசனம் இறங்கியதும் ஒரு சஹாபி பள்ளிக்கு வராமல் இருந்துவிட்டார். நான் எப்போதும் சப்தமாகப் பேசிப் பழகி விட்டேன் நபி முன் இதுவரை சப்தமாகப் பேசிவிட்டேனே என அழுது கொண்டேயிருந்தார். அவர் அழைத்து வரப்பட்டு அவருக்காக நபிமணி துஆச் செய்தார்கள்.

நபிமணி முன் சப்தமாகப் பேசியதற்கே வருத்தப்பட்டு அழுது கொண்டிருந்தாரென்றால் நபிமணியின் மார்க்கத்திற்கு துரோகம் செய்பவர்களைப் பற்றி என்ன சொல்வது? அதுதான் புத்தாண்டு கொண்டாடுவது! ஏன் கொண்டாடுகிறார்கள்? கொண்டாடினால் செல்வம் பெருகும், பொற்காலம் பிறக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறதா?

வாழ்க்கையில் ஆயுள் நீட்டிப்பு கிடைப்பது ஒரு அருள். ஆயுள் நீடிக்கும் காலமெல்லாம் அமல்களால் ஆயுளை நிரப்புவேன் என எண்ணுவதுதான் அறிவாளிக்கு அடையாளம். கடந்து விட்ட வருடங்களில் செய்த பாவங்களை எண்ணி வருத்தப்படுவதும், தவ்பா செய்வதும் தான் இஸ்லாமியனுக்கு அழகு!

மறைவான அமல்கள் செய்பவர், நீண்ட வயதை அமல்களால் நிரப்புபவர் இவர்களுக்கு நபிமணி சுபச் செய்தி சொன்னார்கள்:

"முந்தைய சமுதாயத்தவரின் நடைமுறைகளை முழும் முழுமாக பின்பற்றி நடக்காத வரை மறுமை நாள் வராது" (புகாரி) என்ற நபிமணியின் பொன்மொழி உண்மையாகி விட்டது.

"பார்வையால் கண்கள் விபச்சாரம் செய்கிறது. பேசுவதன் மூலம் நாவும், செவியேற்பதன் மூலம் காதும் விபச்சாரம் செய்கிறது. உனக்கு வழிப்படுவதன் பக்கம் இதயங்களை திருப்பு என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

அறப்போர் என்பது நப்ஸை கட்டுப்படுத்துவது நப்ஸ் எழுபது ஷைத்தான்களைவிட கொடியது என்பது நபிமொழி.

நப்ஸை கட்டுப்படுத்தி விட்டால் புத்தாண்டு கொண்டாட்டம் போன்ற ஷைத்தானிய்யத்திடமிருந்து பாதுகாத்துக் கொள்ளலாம். சங்கைக்குரிய நான்கு மாதங்களில் இஸ்லாமிய ஹிஜ்ரி முதல் மாதம் முஹர்ரம்; இதற்கு முந்திய மாதம் புனித ஹஜ் மாதம்; புனித ஹஜ் மாதம் என்பதால் இம்மாதத்தை கொண்டாடுவதில்லை. முஹர்ரம் தியாக மாதமென்பதால் இம்மாதத்தை நினைவுகூருவதில்லை. ரமளான் ஒப்பற்ற மாதம் என்பதால் அதைக் கூட ஆர்ப்பரித்து கொண்டாடுவதில்லை. இம்மாதங்களில் அமைதியான வணக்க வழிபாடுகளையே பிரதானமாகக் கொள்கிறோம். புனிதர்களாக ஆக அனைத்து நன்மைகளையும் அள்ளுகிறோம். புத்திசாலித்தனமும் அறிவுடைமையுமாகும். ரபீஉல் அவ்வல் மாதத்தைக் கூட அநாகரீகமாக ஆக்காமல் கண்ணியமாக செயல்படுகிறோம்.

ஆடல், பாடல், கூத்து, கும்மாளம், மது, மாது இதுதான் கொண்டாட்டமா? கேடு கெட்ட விளைவுகள்தான் விளைகிறது. அறிவாளிகள், படித்தவர்கள், பணியாளர்கள் என பாரபட்சமின்றி அநாகரீகச் செயலில் ஈடுபடும் இவர்களின் இதயங்களை இறைவன் பூட்டி விட்டானோ? இதற்கு தடைவிதிக்காத அரசு காலக்கெடு கொடுத்து ஆதரிக்கிறது.

பகலை இறைஅருளைப் பெறவும், இரவை நிம்மதியாக கழிக்கவும் அல்லாஹ் ஆக்கியிருக்க அநியாயத்துக்கு பயன்படுத்துவது நரகத்திற்கு வழி தேடிக் கொள்வதாகும்.

பணத்துக்கும், பதவிக்கும், ஈமான்தாரிகளான அதிகாரிகளும், அமைச்சர்களும் சிலைகளை கும்பிடுவதும், இணை செயல்கள் செய்வதும் புத்தாண்டு கொண்டாட்டத்தின் பெயரால் இஸ்லாத்துக்கு களங்கம் கற்பிப்பது ஈமானை இழக்கச் செய்து விடும்.

**நிச்சயமாக அநியாயம் செய்பவர்களுக்கு நோவினை தரும் வேதனை உண்டு**

- அல்குர்ஆன் (42 : 21)

மரணத்தையும், மண்ணறையையும், இருளையும், கொடிய வேதனையையும் மறந்த மனிதர்களால் மட்டுமே அநியாயத்தையும் அட்டூழியத்தையும் பயமின்றி செய்ய முடியும்.

“இறைவா! இருளான விளக்கத்தை விட்டு காப்பாற்று; ஒளிமிக்க விளக்கத்தைக் கொடு” என்பது நபிமணியின் பிரார்த்தனை.

அறிவாளிகளிடம் அமர்ந்தால் பேணுதலையும், ஞானத்தையும் அல்லாஹ் தருவான். நல்லோரிடம் அமர்ந்தால் இறைவழிபாட்டையும், அருளை

Since 1977-2017
40 Years
Customer Service

ஆடைகளால் ஆனந்தம்

மஹாராஜா

சில்க் ஹவுஸ் - ரெடிமேட்ஸ்

தஞ்சாவூர்

யும் பெறலாம். அநியாயக் காரனுடன் சேர்ந்தால் பாவங்கள் பெருகும், சீமான்களின் சகவாசம் உலக ஆசையை ஊட்டும். ஏழை களின் தோழமை நன்றியுள்ள இதயத்தை தரும். அனுபவம் எனும் சமுத்திர நீரைக் குடிக்க வில்லையெனில் பாலைவனத் தில் தாகித்து இறக்க நேரிடும்.

"ஒரு கூட்டத்தாருக்கு ஒப் பாக நடந்தால் அவர் அக்கூட்டத் தாரில் ஒருவராவார்" என்பது நபிமொழியாகும். (அபூதாவூத்)

புத்தாண்டு, கிருஸ்துவ மத நம்பிக்கை! முஸ்லிம்கள் ஏன் பின்பற்ற வேண்டும்? ஆணும், பெண்ணும் கைகோர்த்து ஆடுவது தான் பண்பாடா? பட்டாசு கொளுத்துவது எதற்காக? ஆண்டின் துவக்கம் சந்தோஷமா யிருந்தால் ஆண்டு முழுவதும் சந்தோஷமிருக்கும் என்பது மூடநம்பிக்கை. ஆண்டு துவக்கத் தில் செய்கின்ற அட்டூழியங்கள் ஆண்டு முழுவதும் இருக்கும் என்பதுதான் நோக்கமா? என்னே அறிவாளித்தனம்? முதல் கோணல் முற்றிலும் கோணல் என்பது உண்மையா?

புத்தாண்டு அன்று, மது பார்கள் கூடுதல் நேரம் திறந் திருக்க வேண்டும். பல்லாயிரம் காவலர்கள் பாதுகாப்பு, 50 கார் களின் கண்ணாடிகளை நொறுக்கி புத்தாண்டு கொண்டாட்டம். இரு சக்கர வாகன போட்டி இரண்டு பேர்கள் உயிரிழப்பு; பதினைந்து பேர்கள் காயம்; மது குடித்து விட்டு இருசக்கர வாகனத்தில் சாகசம் செய்தோர் 50 பேர் கைது; புத்தாண்டை கொண்டாடி விட்டு காதலிக்க மறுத்த பெண் கொலை இவைகள் புத்தாண்டு பரிசுகள்!

செல்வம் குறையும்போது கலங்குபவன் ஆயுள் குறையும் போது கலங்குவதில்லை. முடிந்து போன ஆண்டுகளில் நாம் செய்த அமல்களென்ன சேகரித்த நன்மைகள் என்ன என்பதை எண்ணிப் பார்ப்பதில்லை.

புத்தாண்டிலே புதிய புதிய நன்மைகளை சேகரிப்போம். வயது குறைகிறது எப்போது தவணை வருமோ தெரிய வில்லை. அதற்குள் மனிதப் புனிதனாக மாற வேண்டும் என்ற வேட்கை வளர வேண்டும்.

வருடம் முழுவதும் செய் கின்ற பாவங்களால் இறைவனின் கோபத்தையும், சாபத்தையும் சம்பாதிக்கக் கூடியவர்கள், ஒரு இரவின் பாதி நேரத்தில் ஒரு வருட பாவத்தை சம்பாதிக்கிறார்கள்.

இரவிலே முடிந்தால் தஹஜ்ஜுத் தொழு, திக்ரில் ஈடுபடு, இல்லாவிடில் அமைதியாக தூங்கி விழி.

உலகம் முழுவதும் நடந்த இழிவான இழப்புகளை எடுத்துரைப்பதே கேவலமாகத் தோன்றுகிறது.

"[இறைவா] நேரான பாதையை எங்களுக்கு காட்டுவாயாக."

- அல்குர்ஆன் (1 : 5)

# காலம் கெட்டுப் போச்சு!

மவ்லவி மு.முஹம்மது ஹைதர் அலி இம்தாதி

اِقْتَرَبَتِ السَّاعَةُ وَانْشَقَّ الْقَمَرُ

"மறுமை நாள் நெருங்கி விட்டது. [அதற்கு அத்தாட்சியாக] சந்திரனும் பிளந்து விட்டது" - அல்குர்ஆன் (54 : 1)

புது வருடம் பிறந்துள்ளது. சென்ற வருடங்களைவிட இந்த வருடம் சிறப்பாக இருக்க வேண்டும் என்று நம்மில் பலரும் எண்ணுகிறோம்.

காலங்கள் செல்லச் செல்ல நல்லொழுக்க மாண்புகள் குறைந்து கொண்டே வருவதுடன், தீய பழக்கங்கள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. இவனை விட அவன் பரவாயில்லை என்று ஆட்சியாளர்கள் முதல் அக்கம் பக்கத்தினர் வரை எண்ணத் தோன்றுகிறது. பெரும்பாலும் கடந்த காலங்களைவிட வருங்காலங்கள் மோசமாகத்தான் இருக்கும் என்கிறது இஸ்லாம்.

நாம் இங்கே காலங்கள் என்று குறிப்பிடுவது நாள்கள் மாதங்களை அல்ல. மனிதர்களைத் தான் என்பது கவனிக்கத்தக்கது.

## முந்தைய தலைமுறையினர்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் : மக்களில் சிறந்தவர்கள் என் தலைமுறையினர். பிறகு அவர்களை அடுத்து வருபவர்கள். பிறகு அவர்களை அடுத்து வருபவர்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரளி) அவர்கள்.

(நூல் : புகாரீ - 6429, முஸ்லிம் - 4958, திர்மிதீ - 2147)

இந்த நபிமொழியின் அடிப்படையில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமுதாயத்தாரில் மிகவும் சிறந்த தலைமுறையினர் நபியவர்களின் காலத்தில் வாழ்ந்த முஸ்லிம்கள். அதாவது நபித்தோழர்கள் ஆவர். அதற்கு அடுத்து சிறந்த தலைமுறையினர் "தாபிஉன்கள்" எனப்படும் முஸ்லிம்கள் ஆவர். அடுத்து சிறந்த தலைமுறையினர் "தபஉத்தாபிகள்" எனப்படும் முஸ்லிம்கள் ஆவர். நபித்தோழர்களின் (முதல் தலைமுறையினர்) காலம் ஹிஜ்ரி 100

ஆண்டுகளுக்கும் மேலாக இருந்தது. தாபிஉன்களின் (இரண்டாம் தலைமுறையினர்) காலம் சுமார் ஹிஜ்ரி 180 வரையிலும் இருந்தது. தபஉத்தாபிகளின் (மூன்றாம் தலைமுறையினர்) காலம் சுமார் ஹிஜ்ரி 220 வரையிலும் இருந்தது. இந்த காலக்கட்டங்களில் வாழ்ந்தோர் பெரும்பாலும் சிறந்தவர்களாக விளங்கினர். இதற்குப் பிறகுதான் இஸ்லாத்தில் குழப்பங்களும், இடைச் செருகல்களும் ஏற்பட்டன. இன்று வரையில் இந்நிலை நீடிக்கிறது.

(நூல் : ஃபத்ஹுல் பாரீ)

இப்னு கஸீர் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள் :

ஒவ்வொரு சமுதாயத்தின் தொடக்கக் கால மக்கள் அதன் இறுதிக்கால மக்களைக் காட்டிலும் சிறந்தவர்களே என்பதில் ஐயம் எதுவும் இல்லை

(நூல் : தஃப்சீர் இப்னு கஸீர், அல்வாகிஆ வசனம் - 14)

## உள்ளத்தில் மாற்றம்

ஹள்ரத் அனஸ் (ரளி) அவர்கள் கூறியதாவது :

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மதீனாவில் நுழைந்த நாளில் அங்கிருந்த அனைத்து பொருள்களும் ஒளிர்ந்தன. அண்ணலார் இறந்த நாளில் அங்கிருந்த அனைத்து பொருள்களும் இருண்டன. அண்ணலாரை அடக்கம் செய்து எங்கள் கைகளை நாங்கள் உதறியிருக்கமாட்டோம். அதற்குள் எங்கள் உள்ளங்கள் மாற்றங்களை உணர்ந்தன.

(நூல் : இப்னுமாஜா 1621, முஸ்னது அஹ்மத், தாரமீ)

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் உயிரோடு இருந்த சமயத்தில் இருந்த தெளிவும் நேசமும் அண்ணலாரை நல்லடக்கம் செய்யும் நேரத்தில் இருக்கவில்லை. முன்பிருந்த இறை நம்பிக்கை அண்ணலாரின் மரணத்திற்குப்பின் நபித் தோழர்களை விட்டும் நீங்கி விட்டது என்பது இதன் பொருளன்று.

(நூல் : துஹ்ஃபத்துல் அஹ்வதீ)

ஹள்ரத் உபை பின் கஅப் (ரளி) அவர்கள் கூறியதாவது :

நாங்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்களுடன் இருந்த போது எங்கள் முகங்கள் ஒன்றாகவே (ஒரே நோக்கத்திலேயே) இருந்தன. அண்ணலார் இறந்த போது (எங்கள் நோக்கம் இலக்கும் மாறி) நாங்கள் இவ்வாறு (உலகத்தையும், மறுமையையும்) பார்க்கத் தொடங்கினோம்.

(நூல் : இப்னுமாஜா - 1623)

இமாம் திர்மிதீ (ரஹ்) அவர்கள் இளமையில் மிகுந்த அழகாக இருப்பார்கள். எனவே, ஒரு முறை அவர்களை அழகு நிறைந்த தீய பெண் ஒருவள்

தவறு செய்ய அழைத்தாள். இமாமவர்கள் இறைவனுக்கு அஞ்சி அங்கிருந்து ஓட்டமெடுத்தார்கள். பிறகு காலங்கள் கடந்து இமாமவர்கள் முதுமைப் பருவத்தில் ஒருநாள் தொழுது கொண்டிருக்கும்போது "அன்றொரு நாள் ஓர் அழகான பெண் அழைத்தாள். அன்று தானாக வந்த ஒரு நல்ல வாய்ப்பை தவற விட்டு விட்டாயே!" என அவர்களின் (நப்ஸ்) மனம் கூறுகிறது. இமாமவர்கள் தம் மனம் இவ்வாறு அசிங்கமாக எண்ணுகிறதே என்று கவலைப்பட்டு அன்றிரவு உறங்கினார்கள்.

அந்த உறக்கத்தில் கனவு ஏற்பட்டது. அந்த கனவில் அண்ணல் நபி (ஸல்) அவர்களை கண்டார்கள். இமாமவர்கள் கனவில் அண்ணலாரிடம், "நாயகமே! நான் வாலிபத்தில் அந்த பாவத்தை வெறுத்தேன். ஆனால் சுமார் முப்பது ஆண்டுகள் கடந்த பிறகு முதுமையில் இப்படிப்பட்ட ஓர் அசிங்கமான எண்ணம் ஏற்படுகிறதே! என்ன காரணம்?" என்று வினவினார்கள். அதற்கு அண்ணலார், உங்கள் இளமை பருவம், என் காலத்திற்கு நெருக்கமாக இருந்தது. ஆனால், உங்கள் முதுமை பருவம், என் காலத்தை விட்டும் கொஞ்சம் தூரமாகி விட்டது. இது தான் காரணம்" என்று கூறினார்கள்.

காலங்கள் செல்லச் செல்ல மோசமாகிக் கொண்டேதான் செல்லும் என்பதையே அண்ணல் நபி (ஸல்) அவர்கள் உணர்த்தியுள்ளார்கள்.

## தொழுகையின் நிலை

அன்னை ஹள்ரத் உம்மு சல்மா (ரளி) அவர்கள் கூறியதாவது :

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் மக்களுள் ஒருவர் தொழ நின்றால் அவருடைய பார்வை அவருடைய பாதங்களைத் தாண்டாது. அண்ணலார் இறந்தபின் மக்களுள் ஒருவர் தொழ நின்றால் அவருடைய பார்வை அவர் நெற்றி வைக்கும் இடத்தை விட்டும் தாண்டாது.

பின்னர் (ஜனாதிபதி) அபூபக்ர் (ரளி) அவர்கள் இறந்து, உமர் (ரளி) அவர்கள் ஆட்சிக்கு வந்தபோது மக்களுள் ஒருவர் தொழ நின்றால் அவருடைய பார்வை அவர் (தொழும் திசையான) கிப்லாவைத் தாண்டாது. (அதன்பின்) உஸ்மான் (ரளி) அவர்கள் (ஆட்சிக்கு) வந்த போது குழப்பம் தோன்றியது. மக்கள் வலப்பக்கம் இடப்பக்கம் திரும்பி பார்க்கத் தொடங்கினர்.

(நூல் : இப்னுமாஜா 1624)

## ஆட்சியாளர்

ஸுபைர் பின் அதீ (ரஹ்) அவர்கள் கூறியதாவது : "நாங்கள் அனஸ் (ரளி) அவர்களிடம் சென்று (ஆளுநர்) ஹஜ்ஜாஜ் மூலம் நாங்கள் அனுபவித்துவரும் கொடுமை

கள் குறித்து முறையிட்டோம். அதற்கு அவர்கள் "நீங்கள் உங்கள் இறைவனைச் சந்திக்கும்வரை பொறுமையோடு இருங்கள். ஏனெனில், உங்களிடம் ஒரு காலம் வந்தால், அதற்குப் பின் வரும் காலம் அதைவிட மோசமானதாகவே இருக்கும்" என்று கூறிவிட்டு, "இதை நான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் இருந்து செவியுற்றுள்ளேன்" என்று கூறினார்கள்.

(நூல் : புகாரீ - 7068, திர்மிதீ - 2132)

அதாவது காலம் போகப் போக, நாட்கள் செல்லச் செல்ல நன்மைகள் அருகி, தீமைகள் பெருகிவிடும். ஆகவே, நாம் வாழும் காலம் அடுத்து வரும் காலத்தைவிட எவ்வளவோ மேல் என எண்ணிச் சோதனைகளைப் பொறுத்துக் கொண்டு சாதனைகள் படைக்கவேண்டும். துவண்டு விடலாகாது என்பது தான் இந்த நபிமொழியின் கருத்தாகும்.

உலகளாவிய ஆட்சியாளர்கள், அதிகாரிகள் விஷயத்தில் முன் சென்றவர்களே பரவாயில்லை என்று எண்ணத் தோன்றுகிறது.

## பாவச் செயல்கள்

ஹள்ரத் அனஸ் (ரளி) அவர்கள் கூறினார்கள் :

"நீங்கள் சில (பாவச்) செயல்களை புரிகிறீர்கள். அவை உங்கள் பார்வையில் முடியைவிட மிகஎளிதாகதோன்றுகின்றன. ஆனால், அவற்றை நாங்கள் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் காலத்தில் பேரழிவை ஏற்படுத்துபவை என்றே கருதினோம்.

(நூல் : புகாரீ - 6492)

மார்க்க அறிஞர் இமாம் ஹஸன் அல்பஸரீ (ரஹ்) அவர்கள் தன் கடைசி நாட்களில் தன் தோழர்களைப் பார்த்து "நாங்கள் வாழ்ந்த காலம் தீய எண்ணம் கொள்வதைக்கூட தடுக்கப் பட்டவையாக (ஹராமாக) நினைத்த காலம். ஆனால், நீங்கள் வாழும் காலமோ, தீய எண்ணம் கொள்வதையே வாழ்க்கையாக்கிக் கொண்ட காலம் என்றார்கள்.

சென்ற காலத்தில் பீடி, சிகரெட் புகைப்பதையே மிக பெரிய கெட்டப்பழக்கமாகக் கருதினர். அதையும் அவர்கள் யாருக்கும் தெரியாமல் ஒளிந்து மறைந்து புகைத்தனர். ஆனால் இன்று மது அருந்துவதையே கெட்டப்பழக்கமாகவோ பாவச் செயலாகவோ எண்ணுவதில்லை. பெரும்பாலான நிகழ்ச்சிகளில் மது பரிமாற்றம் சாதாரணமாகி விட்டது. மதுப்பழக்கம் இல்லாதவர்கள் பத்தாம் பசலித்தனமானவர்கள் என்றுதான் எண்ணப்படுகிறது. மதுவை பட்டவர்த்தனமாக அருந்துவது நாகரீகமாகி வருகிறது. மது அருந்துவதெல்லாம் குற்றமா? என்று ஆச்சரியமாக எண்ணுகிறார்கள்.

# ஹாஃபிழ் காரி தேவை!

மதுரையிலுள்ள பிரபலமான அரபு கல்லூரிக்கு ஹிஃப்ளு பிரிவுக்கு பாடம் நடத்திட சிறந்த **ஹாஃபிழ் காரி தேவை!**

**தகுதிக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்.**

தொடர்புக்கு :

**9994148480, 9486017570**

---

shabnamsilks@ymail.com

www.facebook/shabnamsilk.com

## Shabnam

SILKS & READYMADE

**No.74, J.N.STREET, PUDUCHERRY - 1.**

**Ph : 0413-2222600, 2333600**

## Sagar Foot Wear



**269, M.G.ROAD, PUDUCHERRY - 1.**

**Ph : 0413-2344600**

இதே போன்று தான் விபச்சாரத்தின் நிலைப்பாடு. கள்ள உறவு, வப்பாட்டி இவை பாவம் என்றது போய், கேர்ள் ஃபிரண்ட் (பெண் தோழி) ஃபிசிக்ஸ் ஹெல்ப் (உடலால் உதவுதல்) லிவிங் டுகெதர் (திருமணத்திற்கு முன் ஒன்றாக வாழ்ந்து பழகி, பிறகு பிடித்திருந்தால் மண முடித்துக் கொள்வது) என்பதெல்லாம் இன்று நாகரீகமாகி வருகிறது. ஒரு பெண் குழந்தை பெற்றுக் கொள்ள, கணவன் தேவையில்லை. பாய் ஃபிரண்ட் (ஆண் தோழன்) இருந்தால் போதும் என்றாகி வருகிறது.

## நவநாகரீக மங்கைகள்

ஹள்ரத் அம்ரா பின்த் அப்துர் ரஹ்மான் (ரஹ்) அவர்கள் கூறியதாவது : "ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள், பெண்கள் (இன்று) உருவாக்கியுள்ள (அலங்கார உத்திகள் போன்ற)வற்றை அருமை நாயகம் (ஸல்) அவர்கள் கண்டிருந்தால் பனூ இஸ்ராயீல் பெண்கள் தடுக்கப்பட்டதைப் போன்று இந்தப் பெண்களையும் (பள்ளிவாசலுக்கு வரக் கூடாது எனத்) தடுத்திருப்பார்கள்" என்று கூறினார்கள்.

(நூல் : புகாரீ - 869)

ஹள்ரத் உமர் (ரளி) அவர்கள் ஆட்சியில் பெண்கள் பள்ளிவாசலில் ஜமாஅத்தாக தொழுவதை ஆரம்பத்தில் அனுமதித்தாலும் பிறகு அதை தடை செய்து, பெண்கள் வீட்டினுள் தொழுவதே சிறந்தது என்று நபிவழியை வலியுறுத்தினார்கள். இதை அன்றிருந்த நபித் தோழர்கள் எவரும் ஆட்சேபிக்க வில்லை.

(நூல் : உம்தத்துல்காரீ 3/228)

அல்லாஹ்வின் தூதர் நபி (ஸல்) அவர்களின் நபித்தோழர்கள் வாழ்ந்த அந்த சிறந்த சமுதாயத்தின் காலத்திலேயே, பெண்கள் பள்ளிக்கு தொழ வருவதிலுள்ள பிரச்சனைகளை அன்னை ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்களும், ஹள்ரத் உமர் (ரளி) அவர்களும் தெளிவுபடுத்துகிறார்கள். இன்றைய நவீன குழப்ப உலகின் நிலையை நாம் சொல்ல வேண்டியதில்லை.

சென்ற காலத்தில் பெண்கள் எண்ணெய் தேய்த்து தலைமுடி வாரினாலே போதுமானது என்றிருந்தார்கள். ஆனால் இன்று பெண்கள் தங்களை அலங்கரித்துக் கொள்ள பியூட்டி பார்லர் (அழகு நிலையம்) செல்கிறார்கள். தலை முடிகளை வெட்டிக் கொள்ளவும், நகங்களை களைந்து கொள்ளவும் அங்கு செல்கிறார்கள்.

முகம் பளபளப்பாக இருக்க, சில நூறுகளை செலவு செய்து ஃபேசியல் செய்து கொள்கிறார்கள். முகம் வெண்மையாகத் தெரிய எண்ணிலடங்கா க்ரீம்களை தேய்த்துக் கொள்கிறார்கள்.

இன்றைய சில பெண்கள் சாப்பிடாமல்கூட இருந்து விடுவார்கள். அவர்களால் அழகுப்

படுத்திக் கொள்ளாமல் இருக்கவே முடியாது. சிலரிடம் சாப்பாட்டுக்கே வழியில்லா விட்டாலும் கூட அழகு சாதன பொருட்களுக்கு குறைவு இருக்காது.

பெண்கள் தங்களை அழகுப்படுத்திக் கொண்டு சுற்றுவதால் தான் வன்புணர்ச்சி போன்ற பாலியல் குற்றங்கள் பெருகுகிறது.

## காசு பணம்

ஹள்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரளி) அவர்கள் கூறுகிறார்கள் : "ஒரு காலம் இருந்தது. அப்போது தங்கக்காசு வெள்ளிக் காசுகளை காட்டிலும் ஒரு முஸ்லிம் சகோதரரை நாங்கள் பெரிதாக மதித்தோம். ஆனால், இன்றைக்கு முஸ்லிம் சகோதரனை விட தங்கக்காசு வெள்ளிக் காசுகளையும் பெரிதாக எண்ணுகிறோம்." (நூல் : தப்ரானீ, மஜ்மஉஸ் ஸவாயித்)

ஹள்ரத் ஹுதைஃபா பின் அல்யமான் (ரளி) அவர்கள் கூறுகிறார்கள் : "எனக்கு ஒரு காலம் வந்திருந்தது. அக்காலத்தில் நான் உங்களில் யாரிடம் கொடுக்கல் வாங்கல் செய்கிறேன் என்று பொருட்படுத்துவதில்லை. (ஏனெனில்) அவர் முஸ்லிமாக இருந்தால் இஸ்லாம் (எனது பொருளை) அவரிடமிருந்து மீட்டுத் தந்துவிடும்.

அவர் யூதராகவோ, கிறித்தவராகவோ இருந்தால் அவருக்கான அதிகாரி (எனது பொருளை) அவரிடமிருந்து மீட்டுத் தந்துவிடுவார். ஆனால் இன்றோ நான் உங்களில் இன்னார் இன்னாரிடம் மட்டுமே கொடுக்கல் வாங்கல் செய்து கொண்டிருக்கிறேன்."

(நூல் : புகாரீ - 6497, திர்மிதீ - 2105)

## குறை சொல்வது

ஹள்ரத் ஸாபித் பின் அல் புனானீ (ரஹ்) அவர்கள் கூறியதாவது : "(ஒருமுறை) நாங்கள் அனஸ் (ரளி) அவர்களுடன் இருந்தோம். அவருடன் அவர்களுடைய மகள் ஒருவரும் இருந்தார். அப்போது அனஸ் (ரளி) அவர்கள், "நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் தன்னை மணந்து கொள்ளுமாறு கூறியபடி ஒரு பெண் வந்து, நாயகமே! (என்னை மணந்து கொள்ள) என் விஷயத்தில் தங்களுக்கு நாட்டம் உண்டா? எனக் கேட்டார்" என்று கூறினார்கள். அப்போது அனஸ் (ரளி) அவர்களின் மகளார், என்ன வெட்கம் கெட்டத்தனம்!" என்று (வியந்து) சொன்னார். அனஸ் (ரளி) அவர்கள், அந்தப் பெண்மணி உன்னை விடச் சிறந்தவர்; அந்தப் பெண் நபியவர்களை (மணந்து கொள்ள) ஆசைப்பட்டார். ஆகவே, தன்னை மணந்து கொள்ளுமாறு கோரினார்" என்று கூறினார்கள்.

(நூல் : புகாரீ - 5120, நஸாயீ - 3197, இப்னுமாஜா - 1991, முஸ்னத் அஹமத்)

காலஞ் சென்றவர்களை குறை சொல்வதால் மட்டும் நாம் சிறந்தவர்களாக ஆகி விட முடியாது. அதற்காக காலஞ் சென்றவர்கள் அனைவரும் உத்தமர்கள் என்று சொல்லவில்லை. அவர்களின் குறைகளை விட நமது குறைகள் பெரியதாக இருக்கிறதே என்று தான் சொல்லுகிறோம்.

சல்லடை ஊசியைப் பார்த்து "உன் தலையில் ஓர் ஓட்டை உள்ளது" என்று குறை சொன்னதாம். தன் உடம்பு முழுவதும் இருக்கும் ஓட்டைகளை மறந்து விட்டதாம். இது கிராமத்து சொல் வழக்கு.

ஒரு ஓடக்காரன் இருந்தான். ஆற்றைக் கடக்க கொள்ளைப் பணம் வசூலிப்பான். மக்கள் எல்லோரும் திட்டுவார்கள். அதையெல்லாம் அவன் கண்டு கொள்ள மாட்டான். மக்களும் வேறு வழியின்றி அவன் கேட்கிற பணத்தைக் கொடுத்து ஆற்றைக் கடந்து செல்வார்கள்.

"இவனுக்கு நற்கதியே கிடைக்காது" என்று மக்கள் தூற்றினார்கள். அவனுக்கு அந்திமக் காலம் வந்தது. இறக்கும் தருவாயில் தன் மகனை அழைத்தான்.

மகனும் யோசித்தான். தந்தை பார்த்த தொழிலையே அவனும் செய்து கொண்டு, ஆனால் தந்தையைவிட இரண்டு மடங்கு பணம் வசூலித்தான். இப்பொழுது மக்கள் "இவனுக்கு இவன் தந்தை எவ்வளவோ மேல் பாவம் புண்ணியவான் அதுக்குள்ள போய்ச் சேர்ந்துட்டான்" என்று சொன்னார்கள்.

நிகழ்காலத்தவர்களைவிட கடந்த காலத்தவர்கள் எவ்வளவோ பரவாயில்லை என்பதுதான் உண்மை.

## இஸ்லாத்தின் நிலை

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

இஸ்லாம் குறைந்த எண்ணிக்கை கொண்ட மக்களிடையே தான் தோன்றியது. அது தோன்றிய பழைய நிலைக்கே திரும்பச் செல்லும். அந்தக் குறைந்த எண்ணிக்கையிலான (இஸ்லாத்தை முறையாக பின்பற்றும்) மக்களுக்கு சோபனம் உண்டாகட்டும்"

அறிவிப்பாளர் : ஹள்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (ரளி) அவர்கள்
(நூல் : முஸ்லிம் - 232, திர்மிதீ - 2550, இப்னுமாஜா - 3987, (முஸ்னத் அஹமத், தப்ரானீ)

காளீ இயாள் (ரஹ்) அவர்கள் கூறியதாவது : "இஸ்லாம் மதீனாவில் சிறிதாகத் தோன்றி, உலகின் எல்லாப் பாகங்களிலும் பரவி விரிந்தது. ஆனால் அது மீண்டும் சுருங்கி குறைந்த எண்ணிக்கைக் கொண்ட குழுக்களுடன் ஆரம்பநிலை போலவே மதீனாவை வந்தடையும்."

உலகில் முஸ்லிம்கள் பல கோடி பேர் இருந்தாலும், மார்க்கப் பற்றுள்ளவர் குறைந்து கொண்டே

இறையருளால் சுகமாக தங்கவும்,
சுவையாக உண்ணவும் திருச்சி மாநகரில் என்றும் உங்கள்

# ஹோட்டல் ராஜா கார்டன்

HALAL

## போர்டிங் & லாட்ஜிங்

ரயில்வே ஜங்ஷன் அருகில்,
28, 29, ராக்கின்ஸ் ரோடு, **திருச்சிராப்பள்ளி** – 620 001.
**0431-2411023, 2410023; Fax : 0431-2413141**
**99944 47131/33**

## சிறப்பம்சங்கள்

- குயின் A/c உணவகம்
- பிரின்ஸ் A/c உணவகம்
- Non A/c உணவகம்
- கார்டன் உணவகம்
- கார்கள் நிறுத்தும் வசதி
- குழந்தைகள் விளையாடும் வசதி
- உங்கள் அனைத்து நிகழ்ச்சிகளையும் சிறப்புடன் நடத்திட ராஜா ஹால்
- டீலக்ஸ் A/c & Non A/c தங்கும் அறைகள்.
- மத்திய பேருந்து நிலையம், ரயில் நிலையத்திற்கு மிக அருகில்.
- விமான நிலையத்தில் இருந்து 10 நிமிட பயணம்.

Email : hotelraja@gmail.com • Visit : www.hotelraja.in

வருகின்றனர். இதனால் இஸ்லாமிய எதிரிகள் இஸ்லாமியர் மீது ஆதிக்கம் செலுத்தத் துவங்கியுள்ளனர். இஸ்லாத்தின் வீரியமான வட்டம் சுருங்கிக் கொண்டே வருகிறது. இறுதியில் அது மக்கா, மதீனாவில் வந்து முடிவடையும்.

## மறுமை நாள்

“மனிதர்களை (நாம்) கேள்வி கணக்குக் கேட்கும் நாள்) நெருங்கிக் கொண்டே வருகின்றது. எனினும், அவர்களோ கவனமற்ற நிலையில் அலட்சியப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

- அல்குர்ஆன் (21 : 1)

ஹள்ரத் சஹ்ல் பின் சஅத் (ரளி) அவர்கள் கூறியதாவது : “நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நானும் மறுமை நாளும் இப்படி அனுப்பப்பட்டுள்ளோம் என்று கூறி தம் இரு விரல்களையும் (கூட்டு விரல், நடு விரல் இரண்டையும்) நீட்டியவாறு சைகை செய்தார்கள்.”

(நூல் : புகாரீ - 6503; திர்மிதீ - 2140; முஸ்னது அஹ்மத்)

நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களின் காலத்தில் சந்திரன் இரண்டு துண்டுகளாகப் பிளந்தது. அந்நிகழ்வுதான் மறுமைநாள் நெருங்கிவிட்டதற்கான ஓர் அடையாளமாக சுட்டிக்காட்டி, இவ்வுலகம் ஓய்ந்துவிட்டதாகவும், இறுதி நிலையை எட்டிவிட்டதாகவும் அல்லாஹுத்தஆலா தலைப்பில் காணும் வசனத்தின் மூலம் தெரிவிக்கின்றான்.

காலங்கள் மோசமாகும் போது தான் உலகம் அழிக்கப்படும். நம்மிடம் உள்ள ஒரு பொருள் பயன்படுத்த முடியாத அளவுக்கு மோசமாகிவிட்டால், நாம் அது பயனற்றது என்றெண்ணி அதை தூக்கி வீசி விடுகிறோம். அல்லது அதை அழித்து விடுகிறோம். இந்த உலகத்தைப் படைத்த ஏக இறைவன் அல்லாஹுத்தஆலாவும் இதைத்தான் கடைப்பிடிக்கிறான். நாம் படைக்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றாத போது, நாம் அழிக்கப்படுவது நியாயம்தானே!

நிகழ் காலத்தின் சீர்கேடுகளைப் பற்றி சொல்லிமாளாது எனில், வருங்கால சீர்கேடுகள் எவ்வாறு இருக்கும் என்று எண்ணும் போதே ஒருவித கலக்கம் தொற்றிக் கொள்கிறது.

சுருங்கக்கூறின், உலகம் சீர்கேடுகளில் முன்னேறிக் கொண்டிருக்கிறது. ஆனால், அதன் தேய்மானம் துவங்கியுள்ளது. எனவே, காலத்தின் கோலத்தில் நாம் சிக்கிவிடாமல் இறைநெருக்கத்திற்குரிய நற்காரியங்கள் புரிந்து, இறையன்பைப் பெறுவோமாக!

# மீண்டும் உருமாறும் கொரோனா, உஷார்!

டாக்டர் கு.கணேசன்

இந்தியா உள்ளிட்ட தென் கிழக்கு ஆசிய நாடுகளில் கொரோனா பரவல் குறைந்து கொண்டிருக்கும் வேளையில், தென்னாப்பிரிக்காவில் கண்டறியப்பட்டுள்ள புதிய வகை கொரோனா வேற்றுருவம் (Varant) மக்களை அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது. முதன்முதலில் இங்கிலாந்தில் ஆல்பா எனும் வேற்றுருவமும், அதைத் தொடர்ந்து தென்னாப்பிரிக்காவில் பீட்டா, பிரேசிலில் காமா, இந்தியாவில் டெல்டா வேற்றுருவங்களும் கொரோனா வைரஸில் அறியப்பட்டன. இவற்றை விட இப்போதைய புதிய வைரஸ் அதிவீரியமானது எனும் எச்சரிக்கை வந்துள்ளதால் உலகம் முழுவதும் புதிய கொரோனா அலை உருவாகி விடுமா? எனும் கேள்வி மக்கள் மனத்தில் எழுந்துள்ளது.

ஒமைக்ரான் (Omicron) எனப் பெரியடப்பட்டுள்ள இந்த வைரஸின் மரபணு வரிசையில் 'B1.1529' எனும் புதிய பிறழ்வு (Mutation) ஏற்பட்டுள்ளது. பூட்டுக்குள் சாவி நுழைவதுபோல இது நம் உடல் செல்களுக்குள் ஏசிஇ2 புரத ஏற்பிகளுடன் இணைந்து நுழையும் கூர்ப்புரதங்களில் (Spike Proteins) 50க்கும் மேற்பட்ட பிறழ்வுகள் உள்ளன. வைரஸ்பிறழ்வு என்பது வைரஸ்களின் இனப் பெருக்க வளர்ச்சியில் ஏற்படும் இயல்பான நிகழ்வு தான். சில பிறழ்வுகள் மட்டுமே வைரஸ் பரவும் வேகத்தைக்கூட்டும். இந்தியாவில் இரண்டாம் அலையில் படுமோசமான உயிர்ச் சேதங்களை உண்டாக்கியதும், 120க்கும் மேற்பட்ட உலக நாடுகளில் பரவி பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தியதுமான டெல்டா வைரஸ் இதற்குச் சரியான உதாரணம். இப்போது உருமாறியுள்ள கொரோனா வைரஸும் இந்த வகையைச் சேர்ந்தது என்பதுதான் மக்கள் கவலைப்படக் காரணம்.

## கொரோனாவின் கோர முகம்

ஒமைக்ரான் வைரஸ் எப்போதுமில்லாமல் பல வழிகளில் உருமாறியுள்ளதாக அறியப்பட்டுள்ளது. இங்கு கவனிக்க வேண்டியது என்னவென்றால், இதுவரை அறியப்பட்ட வேற்றுருவக் கூர்ப்புரதங்களில் அதிகபட்சமாக இரண்டு வகை மரபணுப் பிறழ்வுகள் மட்டுமே காணப்பட்டன. மாறாக, ஒமைக்ரான்

கூர்ப்புரதத்தில் 50 வகை மரபணுப் பிறழ்வுகள் ஏற்பட்டுள் ளன. அதிலும் செல்களில் நுழை யும் கூர்ப்புரதப் பகுதியில் (RBD) மட்டும் 10 பிறழ்வுகள் காணப் படுகின்றன. டெல்டா வைரஸில் இந்த இடத்தில் 2 பிறழ்வுகள் மட்டுமே காணப்பட்டன. இப்படி மேம்பட்ட பிறழ்வுகள் மூலம் மனித செல்கள் கூர்ப்புரதப் பிணைப்புகள் கடுமையாக வலு வடைந்து, டெல்டா வைரஸை விடப் பல மடங்கு வேகமாகப் பரவும் தன்மையை இது பெற் றுள்ளது. இது தென்னாப்பிரிக்கா வில் அறியப்பட்ட சிலவாரங்களில் இதன் பரவும் வேகம் (R Value) 147-லிருந்து 193ஆக அதிகரிக் கும். நமீபியா, போட்ஸ்வானா, பெல்ஜியம், மலாவி, இஸ்ரேல், ஹாங்காங் ஆகிய நாடுகளிலும் இது பரவியுள்ளதும் இதை உறுதிப்படுத்துகின்றன.

மேலும், கொரோனாவுக்கு எதிரான தடுப்பூசிகள் பலவும் இந்த வைரஸின் கூர்ப்புரத மரபணு அமைப்பைக் குறி வைத்துத் தயாரிக்கப்பட்டவை. ஒமைக்ரான் கூர்ப்புரதத்தில் 50 வகை மரபணுப் பிறழ்வுகள் புதிதாக ஏற்பட்டுள்ளதால், இதன் மரபணு முகம் ரொம்பவே மாறியுள்ளது. தடுப்பூசிகளின் பார்வையிலிருந்து 40% வரை இது தப்பித்து விடுமளவுக்கு வீரியமிக்கதாகக் கருதப்படுகிறது. இதனால், புதியவர்களுக்குத் தொற்று வதோடு, ஏற்கனவே தொற்று ஏற்பட்டவர்களுக்கும் தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களுக்கும் கொரோனா மறு தொற்று ஏற்பட லாம் என்கின்றனர் வல்லுநர்கள். எனவே தான் கவலைக்குரிய பிரிவில் (Variant of Concern) உலக சுகாதார நிறுவனம் இதைச் சேர்த்துள்ளது. இது மக்களின் அச்சத்தை அதிகப்படுத்தியுள்ளது. தென்னாப்பிரிக்காவில் இது முதலில் அறியப்பட்ட 100 பேரும் கொரோனா தடுப்பூசி இரண்டு தவணைகள் செலுத்திக் கொண்டவர்கள் என்பது இந்த அச்சத்துக்கு வலு சேர்க்கிறது. இந்தியாவில் கொரோனா மூன் றாம் அலைக்கு வாய்ப்பில்லை என்று கருதி வந்த நிலையில் தற் போதைய ஒமைக்ரான் பரவலால் அந்தக் கருத்து வலுவிழக்கிறது. ஆகவே, ஒமைக்ரான் குறித்த கவலை தரும் கணிப்புகளுக்கும் நாம் தயாராக வேண்டியுள்ளது.

## இந்தியா என்ன செய்ய வேண்டும்?

இந்தியாவில் இதுவரை ஒமைக்ரான் தொற்று இல்லை என்றே தரவுகள் கூறுகின்றன. இனிமேலும் இது பரவாமல் இருக்க ஒன்றிய அரசு அவசர கால நடவடிக்கைகளை மேற்கொண்டி ருப்பது நம்பிக்கை அளிக்கிறது. இந்தியா வரும் வெளிநாட்டுப்

********** பேங்காக்கில் முதல்தர ஓட்டல் **********

# உட்லாண்ட்ஸ் இன் பேங்காங்



**சுவை மிகுந்த சைவ - அசைவம்**
**ஹலால் உணவகம் இணைக்கப்பட்டுள்ளது**



**குறைந்த செலவில் நிறைந்த வசதிகளுடன் தங்குவதற்கு**
**80 அறைகள் கொண்ட நவீன வசதிகள் உடைய தங்கும் இடம்**
**தமிழர்களின் மேற்பார்வையில் நடத்தப்படும் முதல் தர ஓட்டல்**

# BANGKOK WOODLANDS INN

1158/5-8, CHAROEN KRUNG ROAD, 20I 32, BANGRAK
**BANGKOK - 10500, THAILAND**
**(662) 235 66440, 235 6641, 235 3894**
**Fax : (662) 224 0805, 237 5493**
**E-mail : manager@woodlandsinn.org**

**We also Arrange sightseeing tours in Bangkok and Pattaya**

---

# மணமகன் தேவை

எல்லா வகையிலும் சிறந்த, முற்றிலும் சாலிஹான, உயர்ந்த பண்பாடுடைய **B.Sc.,Maths** படித்த **மணமகளுக்கு,** மார்க்கப்பற்றுள்ள ஸாலிஹான மிகச் சிறந்த **மணமகன் தேவை.**

**தொடர்புக்கு :**

# 9443843082

பயணிகள் தீவிரமாகக் கண் காணிக்கப்படுவார்கள் என்று அரசு அறிவித்துள்ளது. இது போதாது. பிரிட்டன், பிரான்ஸ், சிங்கப்பூர், இஸ்ரேல், இத்தாலி, ஜெர்மனி போன்ற நாடுகள் தென்னாப் பிரிக்கா உடனான விமான சேவை களை முழுமையாக நீக்கியுள்ளது போல் இந்தியாவும், தென் னாப்பிரிக்கா மற்றும் ஒமைக்ரான் தொற்றுள்ள மற்ற நாடுகள் உடனான விமான சேவைகளை முழுமையாக நீக்க வேண்டும்.

அடுத்து, வழக்கமான ஆர்.டி.பி.சி.ஆர். பரிசோதனை யில் ஒமைக்ரான் வைரஸ் தப்பித்து விடுவதாகத் தெரிய வந்துள்ளது. ஆகவே, வெளிநாட்டுப் பயணி கள் அனைவருக்கும் மரபணு பகுப்பாய்வை (Gene sequencing) கட்டாயமாக்கவேண்டும். அப் போதுதான் இந்தத் தொற்று இந்தியாவுக்கு இறக்குமதி ஆவதை ஆரம்பத்திலேயே கணித்துத் தடுக்க முடியும். இந்த செயல்பாட்டில் முதலில் விழித்துக் கொண்ட நாடு இங்கிலாந்துதான்.

தற்போது இந்தியாவில் கொரோனா வைரஸ் ஓய்ந்து விட்டது என்று மக்கள் எண்ணத் தொடங்கிவிட்டனர். முகக்கவசம் அணிவதும், தனிமனித இடை வெளியும் காணாமல் போய் விட்டன. பொது இடங்களில் கை கழுவும் கைச் சுத்திகரிப்பான் களை காண்பது அரிதாகிவிட்டது. தட்டுப்பாடின்றி தடுப்பூசிகள் கிடைக்கத் தொடங்கிய பிறகு கொரோனா அச்சம் ரொம்பவே குறைந்துவிட்டது. ஒமைக்ரான் தொற்றால் இந்திய மக்களின் விழிப்புணர்வும் எச்சரிக்கை உணர்வும் மீண்டும் முக்கியத் துவம் பெறுகின்றன. குறிப்பாக, வெளிநாட்டுப் பயணிகள் தொடர்பில் எச்சரிக்கை தேவை.

இறுதியாக, கொரோனா தடுப்பூசிகளுக்கு இது கட்டுப் படுமா என்பது இனிவரும் கள ஆய்வுகளில்தான் தெரியவரும் என்கிறது உலக சுகாதார நிறு வனம். அறிவியல் அடிப்படை யில் தற்போதுள்ள தடுப்பூசி களுக்குப் பலன் குறைவதற்கே அதிக வாய்ப்பு என்றாலும், அவை இறப்புகளைத் தவிர்ப்பது உறுதி எனவும், தடுப்பூசிகளை மேம் படுத்திப் பயன்படுத்தினால் இன்னும் பாதுகாப்பு அதிகரிக்கும் எனவும் வல்லுநர்கள் கருது கின்றனர். அண்மையில் அறிமுக மான மோல்னுபிரவிர், பேக்ஸ் லோவிட் ஆகிய கொரோனா மாத்திரை கள் வைரஸ் நகலெடுப்பதைத் தடுத்து, அதன் பரவலைத் தடுப்பதால், ஒமைக்ரான் வகை வைரஸ்களையும் கட்டுப்படுத் தும் என்றும் அவர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். ஆகவே, தகுதியுடையவர்கள் அனைவரும் தடுப்பூசிகளைச் செலுத்திக் கொள்ள முன் வர வேண்டும். அப்போது தான் கொரோனா அச்சம் முற்றிலுமாக விலகும்.

# உலகில் பேசும் மனித தோல்கள்

மவ்லவீ ஹாஃபிழ் அ. செய்யது அலீ மஸ்லஹி பாஜில் தேவ்பந்தீ

மனித தோல்கள் மறுமையில் அவனுக்கெதிராக பேசுவதை சென்ற கட்டுரையில் குறிப்பிட்டிருந்தோம். இறைவனின் கூற்று உண்மை என்பதை நிரூபிக்க மறுமை வரை காத்திருக்க வேண்டிய அவகாசமோ, அவசியமோ தேவையில்லை. இம்மையிலேயே மனித தோல்கள் பேசுவதை மருத்துவ அறிவியல் உறுதிப்படுத்துகிறது.

**உள்ளங்கை அரிப்பு**

இந்த வகையான அரிப்பு இரு உள்ளங்கைகளிலும் இலேசான தடுப்பை ஏற்படுத்தினால், இது பெருங்குடலில் கேன்சர் நோயின் ஆரம்ப நிலையாகும் என தோல் பேசாமல் பேசி உணர்த்துகிறது என்பதாகும்.

**துர்நாற்றம்**

ஒருவரிடம் கெட்டவாடை வந்தால் அவரின் கிட்னி பழுது பட்டு யூரியா இரத்தத்துடன் கலந்து உடல் முழுவதும் வீசுகிறது என தோல் அவருக்கு எச்சரிக்கை விடுக்கிறது.

**மெழுகு போன்று தோல்**

ஒருவருக்கு மெழுகு போல் தோல் இருந்தால் அவருக்கு இதய நோய்க்கான அறிகுறி உள்ளது என தோல் அவரிடம் சூசகமாக பேசுகிறது.

**அதிகமான வியர்வை**

ஒருவருக்கு சட்டை நனையும் அளவுக்கு அதிகமான வியர்வை ஊற்றெடுத்தால் அவருக்கு மாரடைப்பு ஏற்படும் அபாயம் உள்ளது என தோல் அவருக்கு சமிக்ஞை செய்கிறது.

**மஞ்சள் காமாலை**

கல்லீரலில் பித்தப்பை உண்டு. கல்லீரல் கெடும்போது பித்தப்பையில் இருக்கும் பித்த நீர் இரத்தக் குழாய்களுடன் கலந்து விடுகிறது. இரத்தத்தில் பித்த நீர் கலக்கும்போது, தோல் மஞ்சள் நிறத்தில் மாறி மஞ்சள் காமாலை நோயின் அறிகுறி அவரிடம் தென்படுவதாக தோல் அபாய எச்சரிக்கை விடுக்கிறது.

**இரத்த சோகை**

இரத்தத்தில் இரும்புச் சத்து குறைந்து போகும்போது அதைக் கண்டுபிடிக்காமல் விட்டு விட்டால் இதயம், மூளை, பேச்சு யாவும் பாதித்து விடும். உடலில் இரத்த சோகை ஏற்பட்டுள்ளது. உடனே உடலை கவனி

என உடல் தோலின் வழியாக முதலில் எச்சரிக்கை செய்கிறது.

மேற்கூறப்பட்ட ஆறுவித மான அறிகுறிகளும் ஆறுவித மான நோய்களின் எச்சரிக்கை யாகும். இந்த எச்சரிக்கை தோலின் மூலமாக விடுக்கப்படுகிறது. தோல்கள் தான் நோயின் தன்மை களை மனிதனுக்கு உணர்த்து கிறது. அவைகள் தங்களின் மொழியில் பேசுகிறது. இவற்றை நாம் கண்கூடாகப் பார்த்து வரு கிறோம். மனித தோல்களில் வியக்கத்தகு பல அற்புதங்களை இறைவன் அமைத்துள்ளான். மனிதத்தோல்களில் பல விதமான சுரப்பிகளை இறைவன் செயல்பட வைத்துள்ளான். இவற்றின் பலன்களை தெரிந்து கொள்வது அவசியமாகும்.

**வியர்வை சுரப்பி**

இது உடலின் குளிர்சாதன மாகும். வெயில் சூடாகும்போது இந்த சுரப்பிதான் வியர்வையை உடலுக்கு வெளியே அனுப்பு கிறது. வியர்வை நீர் ஆவியாகும் போது நமது உடல் ஏற்கனவே சூடாகி இருந்ததை குளிர்ப் படுத்தி சமநிலையில் வைக்கிறது.

இந்த சுரப்பி உடலிலுள்ள தேவையில்லாத நீரை வெளி யேற்றி சிறுநீரகங்களுக்கு உதவி புரிகிறது. மழைக்காலங்களில் வியர்வை சுரப்பிகளின் செயல்பாடு கள் குறைந்துவிடுகிறது. அப்போது இது சிறுநீரகங்களுக்கு உதவ முடியாமல் போய் விடுகிறது.

**எண்ணெய் சுரப்பி**

இந்த சுரப்பி அமையா விட் டால் உடலில் எண்ணெய் பசையே இருக்காது. உடல் முழுவதும் பாளம் பாளமாக வெடித்து விடும். பருவ வயதை அடையும்போது இந்த சுரப்பி தான் முகப்பரு வருவதற்கும் காரணமாகி விடுகிறது.

**வாசனை சுரப்பி**

மனித இனம் அழியாமல் இருக்க இந்த வாசனை சுரப்பி வேலை செய்கிறது. இனக் கவர்ச்சியையும், இன உணர்ச்சி யையும் உண்டாக்க இது முக்கிய காரணமாக அமைகிறது.

இந்த சுரப்பி கக்கம், இனவிருத்தி ஆகிய இரண்டு இடங்களில் மட்டுமே உள்ளது.

பாலூட்டி இனத்தைச் சார்ந்த அனைத்து உயிரினங் களுக்கும் இந்த வாசனை சுரப்பிகள் உண்டு.

இந்த வாசனை சுரப்பி கஸ்தூரி மான்களுக்கு அதிகம் உண்டு. பெண் மான்களுக்கு இன உணர்ச்சி அதிகமாகும்போது அதன் வாசனை சுரப்பி சுரந்து கிட்டத்தட்ட மூன்று கிலோ மீட்டர் அளவு வரை வனப் பகுதியையே மண மணக்க வைத்து விடும். இந்த கவர்ச்சி யால் ஆண் மான்கள் பெண் மான்களைத் தேடி, ஓடி வந்து இனவிருத்தியில் ஈடுபடும்.

இந்த வாசனை சுரப்பி ஒவ் வொரு மனிதனிடமும் உண்டு.

ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு விதமாக உண்டு. அதை வைத்து அவரிடம் நெருங்கிப் பழகுபவர்கள் பகுத்தறிந்து கொள்வார்கள்.

நபி (ஸல்) அவர்களிடமும் வாசனை சுரப்பி இருந்தது. அது அழகிய மணமிக்கதாக அமைந்திருந்தது.

**நபி (ஸல்) அவர்கள் மரணமான போது ஹள்ரத் அபூபக்ர் (ரளி) அவர்கள் வந்து அல்லாஹ்வின் தூதரைப் போர்த்தியிருந்த போர்வையை விலக்கி அவர்களை நெற்றியில் முத்தமிட்டு 'தங்களுக்கு என் தந்தையும், என் தாயும் அர்ப்பணமாகட்டும்! நீங்கள் உயிராயிருந்தபோதும் நறுமணம் கமழ்ந்தீர்கள். இறந்த நிலையிலும் மணம் கமழ்கிறீர்கள்' என்று கூறினார்கள்.**

அறிவிப்பாளர் : ஹள்ரத் ஆயிஷா (ரளி) அவர்கள்
(புகாரி 3667)

நபி (ஸல்) அவர்களின் வாசனை சுரப்பி நறுமணத்தை விட அதிகம் மணம் கமழ்ந்துள்ளது. நபி (ஸல்) அவர்கள் மரணமடைந்து மூன்று நாட்கள் கழித்த பிறகுதான் அவர்களின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டது. நபி (ஸல்) அவர்களுக்குப் பிறகு யார் ஆட்சிப் பொறுப்பை ஏற்பது? போன்ற சில சிக்கல்கள் ஏற்பட்டது. இவற்றையெல்லாம் சுமூகமான முறையில் தீர்த்து வைக்க மூன்று நாட்கள் ஆகி விட்டன. அந்த மூன்று நாட்களும் நபியின் புனித உடல் எவ்வித இரசாயனமும் சேர்த்து அதை பதப்படுத்தி வைக்கப்படவில்லை. சாதாரண நிலையில் வைக்கப்பட்டது. அப்படியிருந்தும் நபியின் இறந்த புனித உடல் உயிருடன் இருந்த உடலைப் போன்று மணம் கமழ்ந்தது. இந்த சிறப்பு நபி (ஸல்) அவர்களுக்கு மட்டுமே! பிற உடல்கள் இவ்வாறு வெறுமனே வைக்கப்பட்டால் அழுகி துர்நாற்றம் வீச ஆரம்பித்துவிடும்.

நபி (ஸல்) அவர்களின் வாசனை சுரப்பி அவர்கள் உயிருடன் இருந்தபோது அன்னாரின் உடலிலிருந்து எவ்வாறு செயல்பட்டதோ அவ்வாறே அவர்கள் இறந்தபோதும் எவ்வித சிறிய மாற்றமும் இல்லாமல் சிறப்பாக செயல்பட்டது. அவர்களின் புனித உடல் குளிர்சாதனப் பெட்டியில் வைத்து பாதுகாக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

மனிதனுக்கு இருக்கும் வாசனை சுரப்பி குறித்து இறைவன் திருமறையில் தெளிவாக பதிவு செய்கிறான் :-

**குர்ஆனின் குரல் அலுவலக அலைபேசி எண்:**
**94420 56547**

என் மக்களே! நீங்கள் சென்று யூசுபையும், அவரின் சகோதரரையும் நன்றாகத் தேடுங்கள்! அல்லாஹ்வின் அருளில் நம்பிக்கை இழக்காதீர்கள்! [ஏக இறைவனை] மறுக்கும் கூட்டத்தைத் தவிர வேறு எவரும் நம்பிக்கை இழக்க மாட்டார்கள். [என்றார் யஃகூப்] அவர்கள் அவரிடம் [யூசுபிடம்] வந்தனர். அமைச்சரே! எங்களுக்கும் எங்கள் குடும்பத்தினருக்கும் வறுமை ஏற்பட்டுள்ளது. அற்பமான சரக்குகளையே கொண்டு வந்திருக்கிறோம். எனவே எங்களுக்கு முழுமையாக உணவுப் பொருட்கள் தருவீராக! எங்களுக்கு தானமாகவும் தருவீராக! தானம் செய்வோருக்கு அல்லாஹ் கூலி வழங்குவான் என்றனர். 'நீங்கள் அறியாதிருந்தபோது யூசுபையும் அவரது சகோதரரையும் என்ன செய்தீர்கள் என்பதை அறிவீர்களா?' என்று அவர் கேட்டார். 'நீர் தாம் யூசுபா?' என்று அவர்கள் கேட்டனர்.

அதற்கவர் நான்தான் யூசுப். இவர் என் சகோதரர். அல்லாஹ் எங்களுக்கு அருள் புரிந்து விட்டான். யார் [இறைவனை] அஞ்சி, பொறுமையைக் கடைபிடிக்கிறாரோ அத்தகைய நன்மை செய்வோரின் கூலியை அல்லாஹ் வீணாக்கமாட்டான் என்று அவர் கூறினார். அல்லாஹ்வின் மீது ஆணையாக! அல்லாஹ் எங்களைவிட உம்மைத் தேர்வு செய்து விட்டான். நாங்கள் தவறிழைத்து விட்டோம் என்று அவர்கள் கூறினர்.

இன்று உங்களைப் பழி வாங்குதல் இல்லை. உங்களை அல்லாஹ் மன்னிப்பான். அவன் கருணையாளர்களில் சிறந்த கருணையாளன் என்று அவர் கூறினார்.

'எனது இந்த சட்டையைக் கொண்டு சென்று எனது தந்தையின் முகத்தில் போடுங்கள் அவர் பார்வையுடையவராக ஆவார். உங்கள் குடும்பத்தினர் அனைவரையும் என்னிடம் அழைத்து வாருங்கள்.' [என்றும் கூறினார்] ஒட்டகக் கூட்டம் புறப்பட்டபோது 'நான் யூசுபுடைய வாசனையை உணர்கிறேன். நீங்கள் என்னைப் பழிக்காதிருக்க வேண்டுமே' என்று அவரின் தந்தை கூறினார். 'அல்லாஹ்வின் மீது ஆணையாக! நீர் உமது பழைய தவறான முடிவில் தான் இருக்கிறீர்' என்று [குடும்பத்தினர்] கூறினர். நற்செய்தி கூறுபவர் வந்து, அதை அவரது முகத்தில் போட்டார். உடனே அவர் பார்வை பெற்றவராக மாறினார். 'நீங்கள் அறியாததை நான் இறைவனிடமி

**நிறைவுபெற்ற உங்களின் சந்தாக்களை புதுப்பித்து விட்டீர்களா?**

வாழ்க நலமுடன்! **11.07.21 முதல் இனிதே ஆரம்பம்** வாழ்க பல்லாண்டு!

# குட்லக் ஹெல்த் கிளினிக்

# கோட்டக்கல் ஆர்ய வைத்ய சாலா

அங்கீகரிக்கப்பட்ட டீலர்

Kottakkal
ayurveda

டாக்டர் **ரியாஸ் தய்யில்** (BAMS, FSR)

**சிறப்பு மருத்துவர், கோட்டக்கல் – கேரளா**

தங்கம் டவர், சத்தியமூர்த்தி ரோடு,

**(குட்லக் நாட்டு மருந்துகடை அருகில்),**

புதிய பஸ்நிலையம் எதிரில், **புதுக்கோட்டை** – 622001.

**சிறப்பு சிகிச்சைகள் :**

- எலும்பு சம்பந்தமான வியாதிகள்
- முதுகு வலி & கழுத்து வலி
- மூட்டு வலி
- தலைவலி
- பக்கவாதம்
- தூக்கமின்மை
- நீரழிவு மற்றும் நீரழிவு புண்
- குழந்தைகளின் நோய்கள்
- தோல் வியாதிகள்
- குழந்தையின்மை
- அனைத்து மூல வியாதி
- முடி கொட்டுதல்
- ஆண்மைக்குறைவு
- மாதவிடாய் குறைபாடு
- உடல்பருமன் மேலாண்மை
- ஆஸ்துமா, அலர்ஜி

கொரோனாவுக்கு பிந்திய விளைவுகள்

**Ayurvedic Medicines & Herbal Products Available Here**

பக்க விளைவுகள் இல்லை (எல்லா வயதினருக்கும்)

**Working Hours : 9.00 am to 1.00 pm, 4.00 pm to 8.30 pm**

# குட்லக் நாட்டு மருந்துகடை

(மொத்தம் & சில்லரை விற்பனை)

புதிய பஸ்நிலையம் எதிரில், **புதுக்கோட்டை** – 622001.

**94433 46313, 98650 48082** Email : kottakkalayurvedapdkt@gmail.com

ருந்து அறிகிறேன் என உங்களிடம் கூறவில்லையா?' என்று அவர் கூறினார்.

- அல்குர்ஆன் (12 : 87 - 96)

யஃகூப் (அலை) அவர்களுக்கும் யூசுப் (அலை) அவர்களுக்குமிடையே தூரம் ‘எட்டு நாட்கள் நடை பயண தொலை தூரம்’ என சுப்யான் தவ்ரீ, சுஃபா ஆகியோர் விளக்கம் தருகின்றனர்.

இரண்டு பேருக்குமிடையே தொலைதூரம் 80 பர்ஸக் ஆகும். ஒரு பர்ஸக் என்பது 3 மைல்கள். இந்த கணக்கின்படி தொலை தூரம் 240 மைல்கள் ஆகும். மேலும் இருவரும் பிரிந்து கிட்டத்தட்ட 80 ஆண்டுகள் கடந்து விட்டன என்றும் ஹஸன் பஸரீ (ரஹ்) இப்னு ஜீரைஜ் ஆகியோர் தெரிவிக்கின்றனர்.

அந்த ஒட்டகக் கூட்டம் மிஸ்ரி (எகிப்தி) லிருந்து பலஸ்தீனம் நோக்கிச் சென்ற போது, ஒரு காற்று வீசியது. அந்தக் காற்று யூசுப் (அலை) அவர்களின் வாசனையை யஃகூப் (அலை) அவர்களின் பக்கம் கொண்டு போய் சேர்த்தது என இப்னு அப்பாஸ் (ரளி) அவர்கள் விரிவுரை வழங்குகிறார்கள்.

ஹள்ரத் யூசுப் (அலை) அவர்கள் கொடுத்தனுப்பிய அந்த (ஆடை) சட்டை சொர்க்கத்தின் ஆடையாகும். நபி இப்ராஹீம் (அலை) அவர்களை நம்ரூத் நெருப்புக் குண்டத்தில் தூக்கி போட்டபோது, அவரின் ஆடையை கழற்றி நிர்வாணமாக போட்டான். அப்போது அந்த சொர்க்க ஆடை ஹள்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களுக்கு போர்த்தப் பட்டது. பிறகு அது ஹள்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் வழியாக இஸ்ஹாக் (அலை) அவர்களுக்கு கிடைத்தது. பிறகு இவர்களின் வழியாக ஹள்ரத் யஃகூப் (அலை) அவர்களுக்கு கிடைத்தது. இவர்களின் வழியாக ஹள்ரத் யூசுப் (அலை) அவர்களுக்கு கிடைத்தது. அந்த ஆடையைத் தான் ஹள்ரத் யூசுப் (அலை) அவர்கள் தமது தந்தை ஹள்ரத் யஃகூப் (அலை) அவர்களுக்கு அனுப்பி வைத்தார்கள். அதன் பரக்கத் தால் பறிபோன அவர்களின் பார்வைத் திறன் திரும்பக் கிடைத்தது.

அல்லாஹ்வே
மிக சக்தி வாய்ந்தவன்!

## திக்ரும், கல்வியும்

“இந்த உலகமும், உலகிலுள்ளவையும் சபிக்கப்பட்டவையாகும்; அல்லாஹ்வின் திக்ரையும், அதனைச் சார்ந்தவற்றையும் தவிர. மார்க்கக் கல்வியைக் கற்றவரையும், கற்றுக் கொடுப்பவரையும் தவிர” என ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் அருளியுள்ளார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் (நூல் : திர்மிதி)

தொடர் - 3

# ஷைகு, முரீது, பைஅத் பற்றி

## அல்லாமா "ஷைகுல்மில்லத்" முஃப்தீ

## அமானீ ஹள்ரத் (ரஹ்) அவர்களின் ஃபத்வா

### பணமே பிரதான நோக்கம்

இவர்களின் நோக்கம் நூறு கலீபாக்கள் இருந்தால் ஒவ்வொரு கலீபாவுக்கு குறைந்த பட்சம் பத்து முரீதுகள் இருந்தாலும் முரீது ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு நூறு ரூபாய் வீதம் ஹதியா ஏற்படுத்தினால் ஷைகுக்கு மாதம் ஒன்றுக்கு கமிஷன்போக 75,000 ரூபாயாக சேரும். இவ்விதம் செய்வது பணம் பறிக்கும் மாய வலையாகும்; மக்கள் அதிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். காஃபிர்களிலுள்ள ஞானிகளும் காற்றில் பறக்கின்றார்கள் என்று கேள்விப்படுகிறோம். தப்ஸீரே ஹக் கானியில் பதிவு செய்யப்பபட்டுள்ளது..

இக்காலத்தில் தொழுகை இல்லாத சில குடிகாரார்கள், கஞ்சா குடிப்பவர்கள், தீன் கெட்டவர்கள் சூபியாக்களைப் போல் வேஷமிட்டு துன்யாவை சுருட்டிக்கொள்கிறார்கள். தமக்கு சகல சக்திகளும் உண்டு என்று பறை சாற்றுகிறார்கள். சில சமயம் பிள்ளை கொடுப்பதாகவும் சில சமயம் நீண்ட வயதும், செல்வமும் கொடுப்பதாகவும் சொல்லி பணத்தை அபகரிக்கிறார்கள். நூற்றுக்கணக்கான மக்கள் எகீன் தடுமாறி முரீதாகி அவர்களை வணங்குகிறார்கள். அந்த ஷைகுகளைப் பற்றி பல கதைகள் கட்டி விடுகிறார்கள். இவையெல்லாம் ஷைத்தானின் வலைகளாகும். (மஸ்னவி) ஷைத்தானைப்போல் செயல் புரிகின்றான். தன்னை வலியாக மதிக்கின்றான். இவன் வலியாக இருந்தால் இவ்வித வலியின் மீது அல்லாஹ் உடைய லஃனத் (சாபம்) உண்டாகுக என்று தப்ஸீரே ஹக்கானியில் கூறப்பட்டு இருக்கிறது.

**கேள்வி : ருசிகரமான உணவுகள், மதுரமான கனி வர்க்கங்கள் சாப்பிடுபவர் ஷைகாக இருப்பதற்கு தகுதியா?**

பதில் : ஷைகாக உள்ளவர் ருசிகரமான சாப்பாடு, கனி வர்க்கம் முதலியவைகள் கிடைத்தால் அவைகளை சாப்பிட்டு அல்லாஹ்வுக்கு ஷுக்ர் செய்ய வேண்டும். எது கிடைத்தாலும் அதன் மீது ஷுக்ர் செய்வது அவசியமாகும். ருசிகரமானது தான் வேண்டுமென்று ஓடி திரியக் கூடாது.

**கேள்வி: தற்காலத்தில் இருக்கும்படியான முஸ்லிம்கள் அனைவரையும் காஃபிர்கள் என்று சொல்லலாமா?**

பதில்: குறைந்த பட்சம் ஆமன்து பில்லாஹி வசிஃபாதிஹி என்ற முஜ்மலான ஈமான் கொண்டிருந்தாலும் அவரை காபிர் என்று சொல்லக்கூடாது.

**கேள்வி: தற்காலத்திலுள்ள முஸ்லிம்கள் அனைவரையும் காபிர்கள் என்று சொன்னால் சொன்னவருக்கு மார்க்க சட்டம் என்ன?**

பதில்: லாயிலாஹா இல்லல்லாஹு முஹம்மதுர் ரசூலுல்லாஹ் என்று சொல்வது இஸ்லாத்திற்கு அடையாளமாகும். இவரை முஸ்லிம் என்றுதான் சொல்ல வேண்டும். தொழுவதும் முஸ்லிம் என்பதற்கு அடையாளமாகும். இத்தகையோரை காஃபிர் என்று சொன்னவரே காஃபிராவார்.

**கேள்வி : இஸ்லாமும் ஈமானும் ஒன்றா? வேறா? இதைப் பற்றி சுன்னத் வல் ஜமாஅத்தின் அகீதாபடி விபரம் என்ன?**

பதில்: ஈமானும் இஸ்லாமும் ஒன்றே! ஒரு முஃமினை முஸ்லிம் அல்ல என்றும் தீர்ப்பளிக்ககூடாது. இவ்வாறு ஷரஹ் அகாயிதே நஸபியில் கூறப்பட்டிருக்கிறது.

**அல்லாஹ் ஆலு இம்ரான் சூராவில் கூறியுள்ளான்:**

**"ஓ ஈமான் கொண்ட மக்களே! அல்லாஹ்வை பயப்பட வேண்டிய தகுதிப்படி பயந்து நடங்கள். மேலும் நீங்கள் முஸ்லிம் இல்லாத நிலையில் மவுத்தாக வேண்டாம்"** - அல்குர்ஆன்

லுகத்படிக்கு ஈமான் விசுவாசத்தைக்குறிக்கும். இஸ்லாம் விசுவாசத்துடன் தொழுகை, நோன்பு, ஜகாத், ஹஜ் இந்த ஐந்தையும் குறிக்கும். முனாபிக்குகள் ஆமன்னா என்று சொன்னார்கள். ஆனால் உள்ளத்தில் விசுவாசத்திற்குப் பகரத்தில் குஃப்ரு இருந்தது. எனவே தான் அல்லாஹுதஆலா அதை மறுத்து பொதுவாக அஸ்லம்னா என்று சொல்லுங்கள் என்று அறிவித்தான். ஏனெனில் அஸ்லம்னா என்பது குறிப்பு இல்லாமல் பொதுவாக ஐந்திற்கும் சொல்லப்படும். ஆமன்னா என்றால் லுகத்படி விசுவாசத்திற்கு சொல்லப்படும். வாஸ்தவத்தில் விசுவாசம் இல்லாமல் விசுவாசம் இருப்பதாக சொன்னதால் அதை மறுத்து அஸ்லம்னா என்று சொல்லுங்கள் என்றான். இது முனாபிக்குகளுடைய விளக்கத்திற்கு தோதான பதிலாகும். ஆனால் பொதுவாக ஈமான் என்றாலும் இஸ்லாம் என்றாலும் ஒன்றுதான் முஃமினை முஸ்லிம் என்று சொல்ல வேண் டும். அல்லாஹ்விடத்தில் மார்க்கம் இஸ்லாம் தான். இக்காலத்தில் இஸ்லாம் இருக்கிறது. ஈமான் இல்லை என்று சொல்வது கூடாது. ஆனால்

பெரும்பாலும் ஈமான் இருந்து அமல் இல்லாமல் இருப்பது. சகஜமாக இருக்கிறது. மேற்கூறப்பட்ட லுகத் அர்த்தப்படி ஈமான் இருக்கிறது. இஸ்லாம் அதாவது வெளிரங்க அமல் இல்லை என்று சொல்ல முடியும். ஆனால் ஷரீ அத் சட்டப்படி முஸ்லிமை முஃமின் என்றும், முஃமினை முஸ்லிம் என்று தான் சொல்ல வேண்டும். முனாபிக்குகளுடன் பேசியது போல் நாம் பேசக்கூடாது. (அகாயிதுந் நஸஃபி - பக்கம்-95)

## லாயிலாஹா இல்லா அன

**கேள்வி : தரீகா உடையவர்கள் என்று பெயர் வைத்துக் கொண்டு (லாயிலாஹா இல்லா அன) என்று திக்ர் செய்வது கூடுமா? அப்படிப் பட்டவர்கள் ஜனங்களுக்கு இமாமாக இருந்து தொழ வைக்கலாமா?**

பதில்: (லாயிலாஹ இல்லா அன) என்று யாரும் திக்ர் செய்யக் கூடாது. அப்படி திக்ர் செய்வது குஃப்ரை உண்டாக்கும். ஸுலூக்கில் இருப்பவர்கள் தன் சுய அறிவு அற்ற சமயத்தில் உண்மையிலேயே ஜத்பு ஏற்பட்டு சொல்லி இருந்தால் அவர்கள் மஃதூரானவர்களாக பாவிக்கப்படுவார்கள். அவர்கள் தன்னையும் தன் சிபத்தையும் பனா செய்தவர்கள். அவர்கள் மன்னிக்கப்படுவார்கள். என்றாலும் அது ஷரீ அத்திற்கு விரோதமானதாகும். குஃப்ரை வருத்தி


Shalom CONSTRUCTION
We Prove our Ability

உங்கள் கனவை நனவாக்க நாங்கள் இருக்கிறோம்!

தேக்கு கதவு & வேம்பு கதவுகள்
2 x 2 டைல்ஸ் ரூ.35
ஏசியன் பெயிண்ட்ஸ்
ஆர்பிட் ஸ்விட்ச் & வயர்கள்
வேறெந்த கட்டணமும் இல்லை
பர்ரிவேர் சானிட்டரி
கோரமண்டல் சிமெண்ட்

**கட்டுமான செலவு**
**ஒரு சதுரஅடிக்கு**
இண்டர்லாக்கிங் பிளாக் : ரூ.1499/-
கான்கிரீட் பிளாக் : ரூ.1650/-
செங்கல் : ரூ.1850/-

தொடர்புக்கு : +91 97101 44000
shalomconstruction.in

வைக்கும்; பாமர மக்கள் லாயிலாஹா இல்லல்லாஹு என்றுதான் திக்ர் செய்ய வேண்டும். ஏனெனில் திக்ரிலே சிறந்தது லாயிலாஹா இல்லல்லாஹு வாகும்; சாதாரண நிலையில் நிதானத்துடன் இருக்கும்போது அனல் ஹக் என்று திக்ர் செய்வது குஃப்ராகும். நிதானம் தவறி அப்படி வாயில் வந்துவிட்டால் அவர் மன்னிக்கப் படுவார். அந்த நேரத்தில் வாளை அவர் முகத்தில் வீசினாலும் அவருக்கு தெரியக்கூடாது. இந்த நிலை இல்லாத நேரத்தில் லாயிலாஹா இல்லா அன என்று திக்ர் செய்வது குப்ரை உண்டாக்கும். இப்பேர்ப்பட்டவர் இமாமத்திற்கு லாயக்கில்லை. அவர் மனைவி தலாக் ஆகிவிடுவாள். தவ்பா செய்து நிகாஹ்வை புதுப்பிக்க நேரிடும்.

**கேள்வி: ஜத்பு என்று கூறுகிறார்களே அந்த நிலை எவ்வாறு இருந்தால் அதற்கு ஜத்பு என்று கூறப்படும்:**

பதில் : சிலர் ஜத்பு என்று தாவா செய்கிறார்கள் சரீய்யுஸ் ஷகதீ (ரஹ்) அவர்கள் கூறுவதாவது : கூர்மையான வாளை எடுத்து ஜத்பு வந்தவனின் முகத்தில் வீசினால் அவனுக்கு தெரியக்கூடாது. அது தான் உண்மையான ஜத்பு மன்சூரிப்னு ஹல்லாஜ் (ரஹ்) அவர்கள் அனல் ஹக் என்று சொன்னபொழுது அதைப்பற்றி காஜி அபூ அம்ர் ஜுனைத் பக்தாதி அவர்கள் அக்காலத்திலுள்ள புகஹாக்களிடத்தில் பத்வா கேட்டதற்கு அனல் ஹக் என்று கூறுவது குப்ர் என்று தீர்ப்பளித்தார்கள். மேலும் முதல் தீர்ப்பில் ஆயிரம் சாட்டையடி அடிக்கும்படியும் அதில் அவர் இறக்காவிட்டால் மேலும் ஆயிரம் அடிகள் அடிக்கும்படியும், அதிலும் அவர் இறக்காவிட்டால் இரண்டு கால் இரண்டு கைகளை வெட்டும் படியும், அதிலும் அவர் இறக்கா விட்டால் கழுத்தை அறுக்கும் படியும் தீர்ப்பளித்தார்கள். இந்த சம்பவம் ஹிஜ்ரி 309-ல் நடைபெற்றது. அவர் நிதானம் தவறி மஃதூராக இருந்தும் அவருக்கு இவ்வாறு தண்டனை கொடுக்கப்பட்டது. ஏனெனில் உண்மையான ஜத்பு இல்லாமல் பகட்டாக நடிக்க கூடியவர்கள் அனல் ஹக் என்று சொல்லி மக்களை ஏய்க்க முடியும். மேலும் உண்மையான ஜத்பு இருக்கிறதா? இல்லையா? என்று இலேசில் கணிக்கமுடியாது. ஆகவே மேற்படி தண்டனையைப்போல் இப்படி கொன்றவர்களை தண்டிப்பது அவசியமாகும். இஸ்லாமிய அரசாங்கம் இருந்தால் மேற்படி தண்டனை நடத்த வசதியாக இருக்கும். அது இல்லாததால் ஒவ்வொருவனும் மனம் போன போக்கில் நடக்கின்றான். அவர்களின் ஒருவனுக்கு மேற்படி தண்டனையை கொடுத்து பார்த்தால் அப்போது மற்றவர்கள் அனல் ஹக் என்று திக்ர் செய்கிறார்களா? விட்டு விடுகிறார்களா? என்பது தெரியும். அப்போது தான் இந்த கோஷ்டியின் குட்டு வெளியாகும்.

(தொடரும்)

## குருத்துவாராக்களில் முஸ்லிம்கள் தொழுகை நடத்த அனுமதி!

ஆர்.எஸ்.எஸ். அமைப்பின் எதிர்ப்பை துச்சமாக மதித்து குருத் துவாராக்களில் முஸ்லிம்கள் தொழுகை நடத்த அனுமதி யளித்து மத வெறியர்களுக்கு சீக்கியர்கள் பாடம் புகட்டியுள்ளனர்.

புதுடெல்லியையொட்டியுள்ள அரியானா மாநிலத்தின் குருகிராம் நகரிலுள்ள எட்டு மஸ்ஜிதுகளில் தொழுகை நடத்த நகராட்சி நிர்வாகம் அனுமதி மறுத்துள்ளது. இதனையடுத்து சதர் பஜார் பகுதியிலுள்ள சீக்கிய வழிபாட்டுத் தலமான குரத்வாராவில் வெள்ளிக் கிழமைகளில் முஸ்லிம்கள் தொழுகை நடத்திக் கொள்ள குருத்வாரா நிர்வாகம் அனுமதி யளித்துள்ளது.

2014ஆம் ஆண்டு பாரதீய ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்ததி லிருந்தே முஸ்லிம்களுக்கு எதி ரான நடவடிக்கையில் இந்துத்துவ அமைப்பினர் ஈடுபட்டு வந்தனர். முக்கியமாக பாரதீய ஜனதா கட்சி ஆளும் அரியானாவில் முஸ்லிம்கள் அகதிகளாக விரட்டப்பட்டனர்.

அரியானா மாநிலத்தில் தொழுகை நடத்துவதால் பள்ளி யில் படிக்கும் மாணவர்களுக்கும் அலுவலகம் செல்பவர்களுக்கும் பெரிதும் இடைஞ்சலாக உள்ளது என்றும் அவர்கள் நடத்தும் தொழுகையின் காரணமாக போக்குவரத்து நெரிசல் ஏற்படு கிறது என்றும் தொடர்ந்து கூறி போராட்டம் நடத்தினர். 2018-ஆம் ஆண்டு ரம்ஜான் தொழுகை யின்போது தொழுகையில் ஈடு பட்ட முஸ்லிம்கள் பஜ்ரங்தள் அமைப்பினர் தாக்குதல் நடத்தினர். இதனையடுத்து மத மோதல்கள் ஏற்படும் என்று கூறி இந்துத்துவ வெறியர்களுக்கு ஆதரவாக குருகிராம் நகராட்சி நிர்வாகம் தொழுகை நடத்த அனுமதி கொடுக்க முடியாது என்றும் மஸ்ஜிதில் தொழுகை நடத்தக் கூட தங்களின் அனுமதி கேட்க வேண்டும் என்று உத்தரவிட்டது.

அப்படி தொழுகை நடத்த அனுமதி கேட்டால், இந்த பகுதி யிலுள்ள மஸ்ஜிதுகள் இங்குள்ள மாற்று மதத்தைச் சேர்ந்தவர் களுக்கு பெரும் தொல்லையாக இருப்பதாக கூறி இங்கு தொழுகை நடத்த அனுமதி வழங்க மறுத்த தோடு காவல் துறையினரை விட்டு மிரட்டல் விடுத்து வந்தனர்.

இந்த நிலையில் இந்துப் பகுதி யில் வசிக்கும் சிலர் காலியாக இருக் கும் தங்களுக்குச் சொந்தமான

இடங்களில் தொழுகை நடத்திக் கொள்ள அனுமதி வழங்கினர்.

இதனையடுத்து குருகிராம் பகுதி வாழ் சீக்கியர்கள் தங்களின் அனைத்து சீக்கிய குருத்துவாராக் களில் முஸ்லிம் தோழர்களுக்கு தொழுகை நடத்த அனுமதி அளித்திருக்கிறது. இதற்கு இந்து அமைப்புகள் கடுமையான எதிர்ப்பை தெரிவித்துள்ளனர்.

அதுகுறித்தெல்லாம் அச்சப் படாமல் குருத்துவாரா எங்களின் வழிபாட்டுத் தலம் அங்கு இந்துத்துவ அமைப்புகளின் மிரட்டல் செல்லாது. கொரோனா கட்டுப்பாடுகள் இருப்பதால் சமூக இடைவெளியுடன் சிறு சிறு குழுக்களாக வந்து தொழுகை நடத்திக் கொள்ள அனுமதி அளித்திருக்கிறோம்.

மேலும், நகராட்சி நிர்வாகம் எங்கள் குருத்துவாராவிற்கு வந்து தொழுகை நடத்துவதை தடுக்க முடியாது. அவர்களுக்கு உரிமை யும் இல்லை என்று குருத்துவாரா நிர்வாகம் கூறியுள்ளது.

## மத அவமதிப்பு தடைச்சட்டம் கொண்டு வர வேண்டும்

பன்முகக் கலாச்சாரம் கொண்ட இந்தியாவுக்கு பொது சிவில் சட்டம் பொருந்தாது. புனிதமிகு தலைவர்களை இழிவு படுத்தி பேசும் விஷமிகளைத் தண்டிக்க மத அவமதிப்பு தடைச் சட்டம் கொண்டு வர வேண்டும் என்றும் ஷரீஅத்திற்கு விளக்கம் அளிப்பதிலிருந்து அரசுகள், நீதிமன்றங்கள் விலகி இருக்க வேண்டும் என்றும் கான்பூரில் நடைபெற்ற அகில இந்திய முஸ்லிம் தனியார் சட்ட வாரிய கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அகில இந்திய முஸ்லிம் தனியார் சட்ட வாரியத்தின் 27வது பொதுக்கூட்டம் உத்தர பிரதேச மாநிலம் கான்பூர் மாவட்டத்தில் ஜஸ்மா பகுதியில் இரண்டு நாட்கள் நடைபெற்றன. இதில் நாடு முழுவதிலுமிருந்து 200 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். 35 ஆண்டுகளுக்குப் பிறகு கூட்டம் நடைபெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

### வாரிய தலைவர் தேர்வு

முதல் நாள் கூட்டத்தில் இந்த வாரியத்தின் தலைவராக மவ்லானா செய்யது முஹம்மது ரபீ ஹசன் நத்வி மீண்டும் ஒரு மனதாக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார். மவ்லானா வாலி ரஹ்மானி மறைவையொட்டி காலியான பொதுச் செயலாளர் பதவிக்கு மவ்லானா காலித் ஷபியுல்லாஹ் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

### செயற்குழு உறுப்பினர்கள்

1. டாக்டர் அஸ்மா ஜெஹ்ரா (ஹைதராபாத்) 2. பேராசிரியர் மோனிஷா புஷ்ரா (மும்பை)

3.ஜனாபா பாத்திமா முஸப்பர் (சென்னை) 4. ஜனாபா நிஹாத் பர்வீன் கான் (லக்னோ) 5. ஜனாபா ஆதியா சித்திகா (டெல்லி) ஆகிய ஐந்து பெண்கள் அதில இந்திய முஸ்லிம் தனியார் சட்ட வாரியத்தின் செயற்குழு உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

### பொது சிவில் சட்டம்

இரண்டாம் நாள் நடைபெற்ற கூட்டத்தில் பொது சிவில் சட்டம் மற்றும் இதர விவகாரங்கள் குறித்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அந்த தீர்மானத்தில் பல்வேறு மொழிகள் மற்றும் மதங்கள் பன்முகக் கலாச்சாரத்தைக் கொண்ட இந்தியா போன்ற நாட்டிற்கு பொது சிவில் சட்டம் எந்த வகையிலும் பொருந்தாது. மேலும், எந்த பலனும் தராது அரசியலமைப்புச் சட்டம் வழங்கிய உரிமையின்படி குடிமக்கள் அவர்கள் விரும்பும் எந்த மதத்தையும் பின்பற்றலாம். மேலும், பிரச்சாரம் செய்யலாம். பொது சிவில் சட்டம் இந்த அடிப்படை உரிமையை பறிக்கிறது.

### முஹம்மது நபி (ஸல்) அவர்கள்

நம் உயிரினும் மேலான முஹம்மது நபி (ஸல்) அவர்கள் குறித்து சில விஷமிகள் அவதூறு கருத்துக்களை கூறி வருகின்றனர். இவர்களுக்கு எதிராக அரசு எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை என்பது வேதனையாக உள்ளது. மத வெறி சக்திகளின் இந்த அணுகுமுறையை ஏற்க முடியாது. இது நாட்டில் இணக்கமில்லாத சூழ்நிலையை உருவாக்கும். இதுதேசபக்தி மற்றும் நாட்டுப்பற்றுக்கு எதிரான நடவடிக்கைகள் கண்மணி நாயகம் (ஸல்) அவர்களை இழிவுப்படுத்தி பேசுவது உலகம் முழுவதும் உள்ள முஸ்லிம்களின் உணர்வுகளை காயப்படுத்தும். மேலும், உலக அளவில் இந்தியாவின் நன்மதிப்புக்கு பாதிப்பை ஏற்படுத்தும்.

இந்து, சீக்கிய மற்றும் இதர முஸ்லிமல்லாத கல்விமான்கள் மற்றும் அறிஞர்கள் முஹம்மது நபி (ஸல்) அவர்களின் மகத்துவத்தை உணர்ந்துள்ளார்கள். நபி நாயகம் (ஸல்) அவர்களை இழிவுபடுத்தி பேசுவதை முஸ்லிம்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இதர மதத் தலைவர்களை இழிவுபடுத்தி பேசுவதிலிருந்து முஸ்லிம்கள் விலகியே இருக்கிறார்கள்.

### மத அவமதிப்பு தடைச் சட்டம்

எனவே புனிதமிகு தலைவர்களை இழிவுபடுத்தி பேசும் மத வெறியர்களை தண்டிக்க மத அவமதிப்பு தடைச் சட்டத்தை கொண்டு வரவேண்டும்.

சமூக வளைதளங்களில் மத வெறியைத் தூண்டும் வகையில் வெளியிடும் பதிவுகளை தடை செய்யவும் மற்றும் இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் மீது சட்டப்பூர்வமான நடவடிக்கையையும் எடுக்க வேண்டும்.

**ஷரீஅத் சட்டம்**

முஸ்லிம்கள் தங்கள் உயிரினும் மேலாக பதிக்கும் ஷரீஅத் சட்டம் மற்றும் புனித வேதங்கள் குறித்து கருத்து கூறுவதிலிருந்து அரசாங்கங்கள் மற்றும் நீதித்துறை விலகி இருக்க வேண்டும். மார்க்க அறிஞர்களுக்கு மட்டுமே ஷரீஅத் குறித்துகருத்துக் கூற தகுதியுள்ளது. வேறு யாரும் இந்த விஷயத்தில் தலையிடக் கூடாது. மற்றவர்கள் தலையிடுவது குடிமக்களின் மத உரிமைகளில் குறுக்கிடுவதாகும்.

**மத மாற்றம்**

மதம் மாறுபவர்கள் எந்த புகாரும் அளிக்கப்படாத நிலையிலும் மார்க்க அறிஞர்கள் மீது தவறான வழக்குகள் புனையப்படுகின்றன.

**வரதட்சணை**

நாட்டில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிகரித்து வருவது குறித்து இந்த வாரியம் தனது கவலையைத் தெரிவித்துக் கொள்கிறது. வரதட்சணை மரணங்களும் அதிகரித்த வண்ணம் உள்ளன. எனவே, பெண்கள் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கும் வகையில் புதிய சட்டங்களை ஒன்றிய அரசு கொண்டு வர வேண்டும்.

**சிறுபான்மையினர்**

சிறுபான்மையினர்களை பாதுகாப்பது அரசின் கடமை. அண்டை நாடான வங்காள தேசத்தில் கோவில்களை சேதப்படுத்திய சம்பவத்திற்கு இந்த வாரியம் தனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

திரிபுரா மாநிலத்தில் முஸ்லிம்கள் மீது நடத்தப்பட்டு வரும் வன்முறை தாக்குதல்களுக்கும் இந்த வாரியம் தனது கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறது.

இதுபோன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## 25 ஆயிரம் அனாதை சடலங்களை அடக்கம் செய்து சேவையாற்றிய முஹம்மது ஷெரீஃபுக்கு பத்மஸ்ரீ விருது!

கடந்த 28 ஆண்டுகளில் 25 ஆயிரத்துக்கும் அதிகமான அனாதை சடலங்களை அடக்கம் செய்ய முன்வந்த முஹம்மது ஷெரீஃபின் சேவைகளை கவுரவிக்கும் வகையில், அவருக்கு பத்மஸ்ரீ விருதை குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் வழங்கினார்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற விழாவில் இந்த விருது வழங்கப்பட்டது. இந்த விருது பொது மக்களின் சேவையைப் பாராட்டி ஒன்றிய அரசால் வழங்கப்படும் நான்காவது மிகப் பெரிய விருது என்பது குறிப்பிடத்தக்கது.

உத்தரபிரதேசம் அயோத்தியாவில் ஷெரீஃப் சாச்சா என்று பாசமாக அழைக்கப்படும் இவரின் மகன் (ரஹீஸ் பாபரி மஸ்ஜித்

# பள்ளிவாசல் மற்றும் மதரஸா கட்டடம் உருவாகிட
# அள்ளித் தாருங்களேன்!

**"யார் ஒருவர் அல்லாஹ்வின் வீட்டை கட்டுகிறாரோ அவருக்கு சுவனத்தில் அல்லாஹ் ஒரு மாளிகையைத் தருவான்"**

**– நபி (ஸல்) அவர்கள்**

கண்ணியமிகு சகோதர சகோதரிகளுக்கு அஸ்ஸலாமு அலைக்கும்...

சென்னை முகப்பேர் ஏரி ஸ்கீம் ஏரியா "தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம்" முகப்பேர் கபருஸ்தான் பின்புறம், அம்பேத்கார் நகர் 2வது தெரு, நம்பர் 1 என்ற இடத்தை பள்ளிவாசல் மற்றும் மதரஸா கட்டுவதற்காக ¼ கிரவுண்ட் இடத்தை 25 லட்சத்திற்கு பேசி, 10 லட்சம் ரூபாயை அட்வான்ஸாக கொடுத்து, மீதி பணத்தை ஆறு மாதத்தில் செலுத்து வதாக அக்ரிமெண்ட் போட்டுள்ளோம். பள்ளிக்காக கீழ்தளம் மற்றும் மூன்று மாடி கட்டுவதற்கு 35 லட்சம் ஆகிறது. மஹல்லாவாசிகளும், ஸ்கூல் படிப்புடன் உள்ள **அல் மதரஸத்துல் நூரிய்யா** ஹிஃப்ழு மதரஸா மாணவர்களும், புதிதாக இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் சகோதரர்கள் தங்கி தொழுவதற்காகவும், ஓதுவதற்காகவும் இந்தப் பள்ளிவாசல் மற்றும் மதரஸாவை இன்ஷா அல்லாஹ் உருவாக்கி வருகிறோம். இச்செய்தியை பார்க்கின்ற அத்துணை நல்லுள்ளம் படைத்தவர்களின் பணம், உழைப்பு, முயற்சி இருக்க வேண்டும் என விரும்புகிறோம்.' **குறிப்பாக உங்களின் துஆ கண்டிப்பாக இருக்க வேண்டும்.** இந்தப் பள்ளி கட்டுவதற்கு உங்களால் முடிந்த அதிகப்படியான உதவிகளை செய்யுங்கள். அல்லாஹ் நிச்சயம் அதற்கு உண்டான கூலியை இவ்வுலகிலும், மறுமையிலும் தருவான். ஆமீன்.

**தொடர்புக்கு :** தலைவர் : மவ்லவீ அல்ஹாஃபிழ் அல்ஹாஜ்

**G. நூர் முஹம்மது ஆமிரி சிராஜி** அலைபேசி : **9444273674**

செயலாளர் : ஜனாப் **M.காதர் மஸ்தான்** B.A., அலைபேசி : **9962320242**

பள்ளிவாசல் அக்கவுண்ட் நம்பர்

Name : **MASJIDUN NOOR AND MADARASA TRUST**

Bank : **Karur Vysya Bank**

A/C.No : **1289135000013292**

Branch : **Arumbakkam** Ifsc : **KVBL0001289**

Swift Code: **KVBLINBBIND** G.Pay : **9444273674**

இடிப்பைத் தொடர்ந்து ஏற்பட்ட மதக் கலவரம் உச்ச நிலையில் இருந்தபோது சுல்தான்பூருக்கு செல்லும் வழியில் மதக் கலவரத்தில் பலியானார். ரயில்வே தண்டவாளங்களில் அனாதையாக கிடந்த அவரது ஜனாஸாவை தெருநாய்கள் கடித்துக் குதறிய காட்சிகள் முஹம்மது ஷெரீஃபுக்கு பெரும் வேதனையையும் சோகத்தையும் ஏற்படுத்தியது.

தனது மகனைப் போல இனிமேல் யாரும் இறுதிச் சடங்குகள் கூட செய்யாமல் அனாதைச் சடலமாக ஆகக் கூடாது என்று 1992ஆம் ஆண்டிலிருந்து சமூக சேவையை தொடங்கினார்.

மருத்துவமனை பிணவறை ரயில் தண்டவாளத்தில் பிணமாக கிடப்பவர்கள் அவரவர் மத சம்பிரதாயப்படி அடக்கம் செய்ய காவல்துறைக்கு உதவியுள்ளார். கடந்த 28 ஆண்டுகளில் 25,000க்கும் அதிகமான அனாதை சடலங்களை அடக்கம் செய்ய முன்வந்த முஹம்மது ஷெரீஃபின் சேவைகளை கவுரவிக்கும் வகையில் பத்மஸ்ரீ விருது வழங்கப்பட்டுள்ளது.

பெற்ற மகனை இறந்த நிலையிலும் இறைவன் மீது நம்பிக்கை வைத்து அழகிய பொறுமையை கடைப்பிடித்ததுடன் அரியதொரு சமூகசேவையில் ஈடுபட்டுள்ளதால் முஹம்மது ஷெரீஃபுக்கு நாட்டின் மிகப்பெரிய கௌரவமான பத்மஸ்ரீ விருது கிடைத்துள்ளது.

## ஒரே பிரசவத்தில் பிறந்த ஒன்பது குழந்தைகள் பராமரிப்புச் செலவு மட்டும் ரூ.10.3 கோடி!

ஒரே நேரத்தில் ஒன்பது குழந்தைகளைப் பெற்றெடுத்து உலக சாதனையை முறியடித்துள்ளார் மாலி நாட்டைச் சேர்ந்த பெண். கடந்த மே மாதம் ஆப்பிரிக்கா நாடான மாலியில், ஹலிமா சிஸ்ஸே என்ற கர்ப்பிணிப் பெண்ணுக்கு ஒரே பிரசவத்தில் 9 குழந்தைகள் பிறந்தன. ஸ்கேன் செய்து பார்த்தபோது வயிற்றில் ஏழு குழந்தைகள் இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். ஆனால், பிரசவத்தில் 4 ஆண் குழந்தைகள் மற்றும் 5 பெண் குழந்தைகள் என மொத்தம் 9 குழந்தைகள் பிறந்தன. அமெரிக்காவில் கடந்த 2009ஆம் ஆண்டு ஒரு பெண் எட்டுக் குழந்தைகளை பெற்றெடுத்ததே இதுவரை கின்னஸ் உலகச் சாதனையாக இருந்த நிலையில், ஹலிமா சிஸ்ஸே அச்சாதனையை முறியடித்தார். ஹலியா சிஸ்ஸேவுக்கு மெரோக்கோ நகரில் ஒரே பிரசவத்தில் ஒன்பது குழந்தைகள் பிறந்தது குறித்து தகவலறிந்த மாலி நாட்டு அரசு அங்கு மருத்துவக் குழுவினர்களை அனுப்பி தேவையான உதவிகளைச் செய்து வருகிறது.

இந்நிலையில் ஒன்பது குழந்தைகளை வளர்ப்பதில் இருக்கும் சவால்கள் குறித்து

ஹலிமா சிஸ்ஸே கூறுகையில், "இந்தகாலத்தில்ஒரு குழந்தையை வளர்ப்பதே பெரும் கடினம். ஆனால் ஒன்பது குழந்தைகளை யும் வளர்ப்பது என்பது கற்பனை செய்ய முடியாதது. அவர் களைப் பராமரிப்பதில் ஈடுபடும் வேலையின் அளவு மலைக்க வைக்கிறது. இதற்காக எனக்கு உதவிவரும் மருத்துவக் குழு வினருக்கும் நிதியுதவி அளித்து வரும் மாலி அரசுக்கும் நான் நன்றி கூறுகிறேன்" என்றார். ஆண் குழந்தைகளுக்கு உமர், எல்ஹாட்ஜி, பா, முஹம்மது எனவும் பெண் குழந்தைகளுக்கு அடாமா, ஓமமு, ஹவா, கதிடியா, ஃபடூமா எனவும் பெயர் சூட்டி யிருக்கிறார் ஹலிமா சிஸ்ஸே. நாளென்றுக்கு 100 நாப்கின்கள் மாற்றுவதாகவும், 6 லிட்டர் பால் தேவைப்படுவதாகவும் கூறுகிறார். குழந்தைகளை பராமரிக்க 24 மணி நேரமும் தனக்கு செவிலியர் களின் உதவி தேவைப்படுவதா கவும் அவர் கூறினார்.

பிரசவ அனுபவம் குறித்து நினைவுகூர்ந்த ஹலிமா சிஸ்ஸே "ஒவ்வொரு குழந்தையாக வெளியே வரும்போது என் மனதில் பல கேள்விகள் ஓடிக் கொண்டிருந்தன. என்ன நடக் கிறது என்பதை நான் நன்றாக அறிந்திருந்தேன். முடிவில்லாத பிரசவம் போல் குழந்தைகள் ஒன்றன்பின் ஒன்றாக வந்து கொண்டே இருந்தன. என் சகோதரி என் கையைப் பிடித்துக் கொண்டிருந்தாள். நான் குழந்தை களை எப்படி வளர்க்கப் போகி றேன்? யார் எனக்கு உதவுவார்கள்? என்பதை நினைத்து அப்போது கவலைப்பட்டேன். இப்போது ஐந்து மாதங்கள் கடந்து விட்டது. ஒன்பது குழந்தைகளும் நலமாக இருக்கிறார்கள்" என்றார் அவர்.

ஒன்பது குழந்தைகளின் பராமரிப்புச் செலவுகளை மாலி அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள் ளது. ஹலிமா சிஸ்ஸேவுக்கு ஏற்கனவே இரண்டரை வயதில் ஒரு பெண் குழந்தை உள்ளது. அவரை குடும்ப உறுப்பினர்கள் கவனித்து வருகின்றனர்.

## ஆழாப்புழா நகரில் ஜும்ஆ பிரசங்கத்தை பார்வையிட அனைத்து மதத் தலைவர் களுக்கும் அழைப்பு!

கேரள கோட்டயம் மாவட்டம் ஆழாப்புழா நகரில் உள்ள மார்க்ஸ் மஸ்ஜிது இமாம் ஹக்கீம் பனவல்லி என்பவர் வெள்ளிக் கிழமை ஜும்ஆ தொழுகையில் ஒரு முன்னுதாரணமான அரிய காரியத்தைச் செய்திருக்கிறார்.

சமீபத்தில் கேரளாவில் சில பகுதிகளில் முஸ்லிம்கள் பற்றிய உண்மைக்குப் புறம்பான செய்தி களை பரப்பி வந்துள்ளனர். லவ் ஜிஹாத், யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வு ஜிஹாத், கல்லூரித் தேர்வு ஜிஹாத், ஹலால் மட்டன் சர்ச்சை என்று அவரவர் மனதில்

தோன்றியதையெல்லாம் பேசியும், எழுதியும் பிரச்சாரம் செய்தும் கேரளாவில் தொன்று தொட்டுப் பாதுகாத்து வரும் சமூக நல்லிணக்கம் பிரச்சனைக்குரியதாக மாற்றும் சைத்தானிய முயற்சிகள் தொடர்ந்து நடக்க ஆரம்பித்துள்ளன.

இத்தகைய தீய முயற்சிகளைத் தடுத்து நிறுத்துவதற்கு சர்வ மதத் தலைவர்கள் சந்தித்து, கூட்டறிக்கை கொடுத்து, சமுதாய நல்லிணக்கத்தை நிலை நிறுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இது ஒரு பகுதியில் நடந்து வருகிறது.

இத்தகைய நல்லிணக்க முயற்சியை இன்னொரு வகையில் ஆழப்புழா பள்ளி இமாம் ஒரு நூதன முறையைக் கையாண்டு சிறப்பாகப் பிரச்சாரம் செய்து அனைவருடைய பாராட்டையும் பெற்றிருக்கிறது.

வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகைக்கு ஆழப்புழாவிலுள்ள அனைத்துமதத் தலைவர்களையும் பள்ளிக்கு அழைத்திருக்கிறார்கள். ஜும்ஆ குத்பா பிரசங்கம் நடப்பதையும் அதில் என்ன பேசப்படுகிறது என்பதையும் சகோதர மதத் தலைவர்கள் கேட்பதுடன், முஸ்லிம்கள் எப்படி தொழுகிறார்கள் என்பதை நேரடியாகப் பார்க்கும்படியாக அவர்கள் அனைவருக்கும் பள்ளி வளாகத்தில் நாற்காலிகள் போடப்பட்டு அவர்களை இருக்க வைத்து பள்ளி ஜும்ஆவில் நடத்த அத்தனை நிகழ்வுகளையும் பார்க்கும்படியும் கேட்கும்படியும் செய்துள்ளார்கள்.

தொழுகைக்குப் பின்னர் சகோதர மதத் தலைவர்கள் பள்ளியில் உரை நிகழ்த்தக் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

சுவாமி அஸ்பரா நந்தா தன்னை அழைத்ததற்கும் ஜும்ஆவில் முஸ்லிம்கள் என்ன செய்கிறார்கள் என்பதை நேரில் காணுமாறு செய்ததற்கும் முஸ்லிம்களின் தொழுகை முறையை முதன்முறையாகப் பார்த்ததாகவும் கூறி தனது மகிழ்ச்சியையும், நன்றியையும் தெரிவித்தார்.

ஆழப்புழா மஸ்ஜிது இமாம் அவர்களின் இந்த முயற்சி எல்லாச் சமுதாய மக்கள் மத்தியிலும் பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கிறது.

சமீபத்தில் ஹரியானா மாநிலம் குர்கவான் பகுதியில் ஜும்ஆ தொழுவதற்கு பள்ளிகள் இல்லாததால் சாலை ஓரங்களில் ஜும்ஆ தொழுத முஸ்லிம்கள் பற்றிய செய்தி பத்திரிகைகளில் வெளி வந்தது. சாலையோரங்களில் முஸ்லிம்கள் தொழுவதற்கு எதிர்ப்பும், கலவரமும் ஆர்.எஸ்.எஸ். மற்றும் விஸ்வ ஹிந்து பரிஷத்தினர் செய்தனர் என்றும், இதைக் கண்டித்து, சீக்கியத் தலைவர்கள் தங்களின் குருத்துவராக்களைத் திறந்து விட்டு முஸ்லிம்களை ஜும்ஆ தொழுவதற்கு அனுமதி வழங்கினார்கள் என்றும் செய்திகள் வந்தன.

# உங்கள் படைப்புகள் புத்தகமாக வேண்டுமா?

தரமான அச்சில் நேர்த்தியான புத்தகங்கள்



80 பக்கங்கள்
200 பிரதிகள்

ISBN
கட்டணம் இல்லை

DTP
கட்டணம் தனி

தாள் உள்பட
ரூ.7500/-
மட்டுமே

NEWSMAN *Publications*

## நியூஸ்மேன் பிரிண்டர்ஸ்

43, யுனிகார்ன் காம்ப்ளக்ஸ்,
அரவிந்த் கண் மருததுவமனை அருகில், மதுரை 625020

Ph: 0452-4396667 | 7397033493
Email: newsmanbooks@gmail.com


---


வாழ்த்துக்களுடன் ...!

☎ 04175 - 223786
222528 (E)

## மலைவலம் வரும் நகரில் கலை நயம் பொருந்திய

# பூம்புகார்

## துணியகம் & ஆடையகம்!

55 தேரடி வீதி திருவண்ணாமலை - 606 601

"ஸாரே ஜஹான்ஸே அச்சா ஹிந்துஸ்தான் ஹமாரா" என்பதன் அடையாளம் இதுதான்! இதற்கு வலிமை சேர்க்கும் விதமாக ஆழப்புழா மக்கள் மஸ்ஜிது நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது என்று கூறலாம்.

## அரக்கோணத்தில் ஆலிம்களை சிறப்பிக்கும் விழா!

அரக்கோணம் வட்டார ஜமாஅத்துல் உலமா சபையும், அரக்கோணம் ஜாமிஆ மஸ்ஜித் நிர்வாகமும் இணைந்து மீலாது நபி (ஸல்) அவர்கள் விழா மற்றும் மூத்த உலமா பெருமக்களை கண்ணியப்படுத்தும் பெருவிழா கடந்த 12.12.2021 ஞாயிற்றுக்கிழமை அஸர் தொழுகைக்குப் பின் அரக்கோணம் ஜாமிஆ கம்யூனிட்டி ஹாலில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இந்த பெருவிழாவில், தமிழ்நாடு ஜமாஅத்துல் உலமா வின் மாநில தலைவர் மவ்லானா மவ்லவீ அல்ஹாஜ் P.A.காஜா முயீனுத்தீன் பாகவி ஹள்ரத் அவர்களும், ஆந்திரா நெல்லூரைச் சார்ந்த மவ்லானா மவ்லவீ அல்ஹாஜ் K.முஹம்மது இக்ராம் அலீ பாகவி ஆமிரீ ஹள்ரத் அவர்களும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

அப்பொழுது அரக்கோணம் ஜாமிஆ மஸ்ஜிதில் சுமார் 55 ஆண்டுகளாக தலைமை இமாமாக பணியாற்றி வருகிற மவ்லானா மவ்லவீ அல்ஹாஜ் V.M.கமாலுத்தீன் பாஜில் லத்தீபீ ஹள்ரத் அவர்களுக்கும், அரக்கோணம் கிருஷ்ணாம்பேட்டை முபாரக் பள்ளிவாசலில் சுமார் 47 ஆண்டுகளாக இமாமாக பணியாற்றி ஓய்வுபெற்ற உடன்குடி மவ்லானா மவ்லவீ அல்ஹாஜ் Y.முஹம்மது ஹஸன் பாஜில் ஜமாலி ஹள்ரத் அவர்களுக்கும், இவ்வாறே நீண்ட காலம் பணியாற்றி வருகின்ற மற்ற இமாம்களுக்கும், முஅத்தின்களுக்கும் அதிகளவில் நினைவு பரிசுகளும், பண முடிப்புகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டன. அந்த விழாவில் அரக்கோணம் ஜமாஅத்தார்களும், வேலூர் மாவட்ட உலமாபெருமக்களும் பெருமளவில் கலந்து சிறப்பித்தனர்.

## பள்ளபட்டி கல்லூரி மாணவிக்கு தங்கப்பதக்கம்!

கரூர் மாவட்டம் பள்ளபட்டி உஸ்வத்துன் ஹஸனா மகளிர் கல்லூரி மாணவி ஆயிஷா நவ்ஷீன் (த/பெ ஜாபர் அலீ, இடையகோட்டை) B.Com (CA) தேர்வில் பல்கலைக்கழக முதலிடம் பெற்று தமிழக ஆளுநரிடமிருந்து தங்கப் பதக்கம் பெற்றுள்ளார். மாஷா அல்லாஹ்!

கல்லூரிக்கும், ஊருக்கும் பெருமை சேர்த்த மாணவிக்கும் உறுதுணையாய் இருந்த கல்லூரி பேராசிரியைகளுக்கும் வாழ்த்துக்களோடு துஆவும் செய்கிறோம்.

தொகுப்பு :

**பாவா. ஜே.அப்துஸ் ஸலாம்**




Customer Care: 9962 99 4444 | Missed Call: 9543006000

மாவட்ட வாரியான உதவிக்கு : • சென்னை : 7823997001, 7823997004, • பாண்டிச்சேரி - விழுப்புரம் : 7823997003, • வேலூர் - திருப்பத்தூர் : 7823997013 • மதுரை திண்டுக்கல் - காரைக்குடி : 7823997002 • சேலம் - ஓசூர் : 7823997005 • கோவை : 7823997007 • ஈரோடு - திருப்பூர் : 7823997006 • திருச்சி - தஞ்சாவூர் - புதுக்கோட்டை : 7823997015 • திருநெல்வேலி - நாகர்கோவில் : 7823997010

## இஸ்லாமிய சகோதரிகள் ஜன்னத்துல் ஃபிர்தௌஸை தங்களின் இருப்பிடமாக ஆக்கிக்கொள்ள ஓர்

# பொன்னான வாய்ப்பு!

**இந்தியாவில் பார்வையற்ற மாணவிகளுக்காக தங்கும் வசதியுடன் உலக, மார்க்கக் கல்வியின் முதல் நிறுவனம்!**

இஸ்லாமிய மார்க்கத்தின் வளர்ச்சியில் பெண்கள் முக்கிய பங்கு வகித்துள்ளனர் என்பதற்கு வரலாறே சாட்சியாகும். மார்க்கப்பற்றுள்ள பெண்மணிகள் இஸ்லாமிய மார்க்கத்தை பாதுகாப்பதிலும் முக்கிய அம்சமாக இருந்துள்ளனர்.

இஸ்லாத்தின் வளர்ச்சிக்காக பள்ளிவாசல்கள், மதரஸாக்கள், ஆதரவற்றோர் இல்லம் மற்றும் பெண்கள் மதரஸா போன்றவற்றிற்கு உதவியதுடன் மட்டுமல்லாமல், போர்க்களத்திலும் பெண்கள் தனியாகவும், குழுவாகவும் தங்களுடைய பங்களிப்பை சிறப்பாக அளித்துள்ளனர். அல்ஹம்து லில்லாஹ்!

**பெண்கள் ஸதகா செய்வது பற்றிய ஹதீஸ்:**

ஹள்ரத் அபூ ஸயீத் (ரளி) அவர்கள் கூறுகிறார்கள் : நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பெருநாளன்று ஈத்காவிற்கு வந்தார்கள். அப்பொழுது பெண்கள் குழுமி யிருந்த இடத்தை கடந்து செல்லுகையில் அவர்களை நோக்கி, "நீங்கள் தான தர்மங்களை மிக அதிகமாக செய்யுங்கள்; நான் பெண்களை மிக அதிகமாக நரகில் இருக்கக் கண்டேன்" என உபதேசித்தார்கள். இதைச் செவியுற்ற பெண்கள், "நாயகமே! இதற்குக் காரணம் என்ன ?" என்று விசாரித்ததற்கு, நபி (ஸல்) அவர்கள் "பெண்கள் அதிகமாக சாபமிடுகிறார்கள் (பதுஆ செய்கிறார்கள்). மேலும், கணவருடன் நன்றி கேடாக நடந்து கொள்கின்றார்கள்" என்று பதிலளித்தார்கள்.

நபி (ஸல்) அவர்கள் அவ்வாறு உபதேசித்துக் கொண்டிருக்கையில், ஹள்ரத் பிலால் (ரளி) அவர்களும் உடனிருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் பலமான இப்பிரசுத்த போதனையை கேட்டதும் ஸஹாபிய பெண்மணிகள், தமது காதணிகளை யும், கழுத்தில் அணிந்திருந்த நகைகளையும் கழற்றி கழற்றி ஹள்ரத் பிலால் (ரளி) அவர்கள் சந்தா வசூலிக்க விரித்திருந்த துணியில் போடலானார்கள். (நூல்: மிஷ்காத்)

**பார்வையற்ற பெண்களுக்கு மார்க்கக் கல்வி அளிப்பதின் அவசியம்:**

இஸ்லாமிய மார்க்கத்தின் பலஹீனமான மற்றும் சமுதாயத்தில் பின் தங்கிய சமூகமாக கருதப்படும் பார்வையற்ற பெண்களுக்கு மார்க்கக் கல்வியை கற்பிப்பது காலத்தின் கட்டாயமாகும். மார்க்கக் கல்வியின்மையின் காரணத்தால் பல முஸ்லிம் பெண்கள் இஸ்லாத்திலிருந்து விலகி விடுகின்றனர்.

**பார்வையற்ற பெண்களுக்காக மதரஸாயே இம்தாதியா (தஃலிமுல்பனாத்)-ன் சேவைகள்:**

முழு இந்தியாவில் பார்வையற்ற மாணவிகளுக்காக விடுதி வசதியுடன் செயல்படும் முதல் மற்றும் ஒரே நிறுவனமான எங்கள் மதரஸா தமிழ்நாட்டின் மேல்விஷாரத்தில் உள்ளது. எங்கள் மதரஸாவில் பிரெய்லி முறையில் குர்ஆனை மனனம் (ஹிப்ளு) செய்தும், மார்க்கக் கல்வியுடன் உலகக் கல்வியையும் பயின்று வருகின்றனர்.

**பார்வையற்ற பெண்கள் மதரஸாவிற்காக சொந்த இடம் தேவை:**

தற்போது கூரை கட்டிடத்தில் மதரஸா செயல்பட்டு வருகிறது. இதில் 70 மாணவிகளுக்கு ஒரே குளியலறை மற்றும் ஒரே கழிவறை உள்ளது. வெயில், குளிர், மழைக் காலங்களில் மிகவும் சிரமம் ஏற்படுகிறது.

**மதரஸாவிற்காக சொந்த இடம் வாங்குவதற்கான விவரம் :**

2021 ஜூலையில் நடைபெற்ற மதரஸாவின் ஆலோசனைக் கூட்டத்தில், மேல்விஷாரத்தின் அப்பாபிள்ளை தெருவில் கட்டிடத்துடன் உள்ள 2800 சதுர அடி இடத்தை ரூ.72 லட்சத்திற்கு வாங்குவதற்காக முடிவு செய்யப்பட்டுள்ளது. இதில் ரூ.25 லட்சம் ஏற்கனவே உள்ளது. மீதமுள்ள ரூ.47 லட்சத்தை டிசம்பர் 2021 வரை செலுத்த ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

**பெண்கள் சுவனத்தை தங்களின் இருப்பிடமாக ஆக்கிக் கொள்ள பொன்னான வாய்ப்பு :**

மார்க்கப்பற்றுள்ள தாய்மார்கள் மற்றும் சகோதரிகளிடம் ஒரு பணிவான வேண்டுகோள் என்னவென்றால், பெண்கள் மதரஸாவுக்காக சொந்த இடம் வாங்க உதவுவதன் மூலம் சுவனத்தை தங்களின் இருப்பிடமாக ஆக்கிக் கொள்ளுங்கள்.

இன்ஷா அல்லாஹ்! பெண்களின் இந்த உதவிக்கு பகரமாக, அல்லாஹ் சுவனத்தில் ஒரு மாளிகையை கட்டுவான் என அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்வோம். அல்லாஹ் தங்களையும், தங்கள் சந்ததிகளையும் உலக வாழ்வின் அனைத்துவிதமான துன்பங்களிலிருந்தும் பாதுகாப்பானாக! மேலும், மறுமையிலும் இதற்கான நற்கூலியை வழங்குவானாக! ஆமீன்.

தாங்கள் தங்களுக்காகவும், மறைந்த முன்னோர்களின் நன்மைக்காகவும், தங்களின் பொருளாதாரத்தை கொண்டு மதரஸாவின் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கின்றோம். அல்லாஹ் உங்கள் அமல்களை ஏற்றுக் கொள்வானாக! ஆமீன்.

**மதரஸாவிற்காக வாங்கும் இடத்திற்கான விவரம் :**

Total Area = 2800 sq.ft Estimated Cost = Rs.72 Lakhs
Amount Available = 25 Lakhs Amount Needed = Rs.47 Lakhs
Due Deadline = December 2021

G Pay
AIN EDUCATIONAL AND CHARITABLE TRUST
Scan and pay with any BHIM UPI app
BHIM | UPI

**Note: Use This Bank Account only for Building Purchase**

**BANK DETAILS:** State Bank of India

| | | |
|---|---|---|
| Account Name | : | AIN EDUCATIONAL AND CHAIRTABLE TRUST |
| A/C Number | : | 38940876861 |
| IFSC CODE | : | SBIN0003783 |
| BRANCH | : | MELVISHARAM |

G Pay PhonePe Paytm

**Mobile no. +91 9080241203**
**Ain Educational And Charitable Trust**


اَلْمَدْرَسَةُ الْاِمْدَادِيَةُ لِلْمَكْفُوْفِيْنَ بِمِيلْ وِشَارَمْ تَمِلْ نَادُوْ اَلْهِنْدُ
MADRASA-E-IMDADIYA FOR THE BLIND
Run By : Imdadiya Educational & Charitable Trust
4-7/A Old Eidgah Street, Melvisharam, Ranipet Dist (T.N) - 632509
E-mail : imdadiya.wes@gmail.com Web : imdadiyaforblind.org
Contact : +91-9952120340 Telephone : 04172 268500
Regd. No:59/2014
Estd: 1431-H/2010

“இறைவா ! உனையன்றி எங்களை காக்கவோ
வலிமை தரவோ வேறு யாருமில்லை”

الحسام

AL HUSSAM

www.alhussam.in


# AL HUSSAM

## Travel & Tours India (P) Ltd

*Experience makes the difference*

ஹஜ்ஜையும், உம்ராவையும் அல்லாஹ்வுக்காக நிறைவேற்றுங்கள்...

- அல்குர் ஆன் - 2 : 196



**யா அல்லாஹ் ! எங்களுக்கு நிறைவான செல்வத்தையும் நோயற்ற வாழ்வையும்
தந்து ஹஜ்ஜை நிறைவேற்றக்கூடிய பாக்கியத்தை தந்தருள்வாயாக !... ஆமீன்**

**Admin Office:** No: 3, 3rd Floor, Balfours Road, Kilpauk, Chennai - 600 010,

**Booking Center:** No: 49-1/25, Sarangapani South Street,
Periya Pallivasal Complex, Kumbakonam - 612 001.

Ph: 7299460725 / 9551004088 / 9941372228 / 9941372229
E-mail:alhussamchennai@gmail.com / alhussamkumbakonam@gmail.com

இங்கு குறிப்பிட்ட முகவரியில் சென்னை, கும்பகோணம் தவிர வேறெங்கும் கிளைகள் கிடையாது.

ஹஜ் மற்றும் உம்ரா சேவையில் முதல் தரம், முதலிடம் அதுவே அல்ஹுஸாமின் தனிச்சிறப்பு...

# வக்ஃபு வாரியம் முஸ்லிம்களுக்கு என்ன செய்திருக்கிறது?

புதுமடம் ஜாபர் அலீ

தமிழ்நாட்டில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர் பாபு அந்தத் துறையில் பெரும் சீர்திருத்தம் ஏற்படுத்த பல கட்ட முயற்சிகளை எடுத்து வருகிறார். கோவில்களுக்கு சொந்தமான நிலங்கள், தனியார் வசம் ஆக்கிரமிப்பில் இருப்பதை மீட்டு, கோவில் வசம் சேர்க்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறார். இந்நிலையில், முஸ்லிம் மக்களின் கல்வி, தொழில், பொருளாதார வளர்ச்சிக்காக ஏற்படுத்தப்பட்ட வக்பு வாரியம், பள்ளிவாசல்களுக்கு என்று கொடுக்கப்பட்ட பல்வேறு வகையான நிலங்கள் ஆக்கிரமிப்பில் இருப்பதை மீட்டு, அதனுடைய முழுமையான பணிகளை விரைந்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கை முஸ்லிம் மக்களிடையே எழுந்திருக்கிறது.

விஷயத்திற்குப் போகும் முன் வக்ஃபு வாரியம் எதற்காக ஏற்படுத்தப்பட்டது என்பதை தெரிந்து கொள்வது அவசியம். வெகு காலத்திற்கு முன் முஸ்லிம் செல்வந்தர்களும், முஸ்லிம் மன்னர்களும் தங்கள் கட்டுப்பாட்டில் இருந்த ஏராளமான சொத்துக்களை இறைவனுக்காக தானமாகக் கொடுத்தனர். இப்படிப்பட்ட சொத்துக்கள் தான் வக்ஃபு வாரியத்தின் சொத்துக்கள் என்று சொல்லப்படுகின்றன. இந்த சொத்துக்களிலிருந்து கிடைக்கும் வருவாயைக் கொண்டு வக்ஃப் செய்தவர்களின் எண்ணப்படி முஸ்லிம் மக்கள் நலனுக்கான காரியங்களை, ஏழை - எளியோர் பயன்பெறும் வகையில் செய்ய வேண்டும் என்பதுதான் அடிப்படை நோக்கம். பள்ளிவாசல் பராமரிப்பு, தர்கா பராமரிப்பு, முஸ்லிம் மக்களின் கல்வி மேம்பாடு போன்றவற்றுக்காகச் செலவிட வேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு இப்படிப்பட்ட சொத்துக்கள் பழங்காலத்தில் தானமாக வழங்கப்பட்டன.

தானமாக வழங்கப்பட்ட இடங்களில் பராமரிப்பையும், கண்காணிப்பையும் வக்ஃபு வாரியம் செய்தாலும், இடங்களை வழங்கிய குடும்பத்தைச் சேர்ந்தவர்களே பல காலமாகச் சொத்துக்களைப் பராமரித்து வந்தார்கள். அதிலிருந்து கிடைக்கும்

வருமானத்தை வக்ஃபு வாரியத்திடம் சேர்த்தார்கள். இப்படிச் சொத்துக்களைப் பராமரிப்போரை முத்தவல்லிகள் என்று குறிப்பிடுகின்றனர். இந்த முத்தவல்லிகளை அறங்காவலர்கள் என்றும் குறிப்பிடுகின்றனர்.

முற்காலத்தில் இந்த சொத்துக்களெல்லாம் பரந்த நோக்கங்களுக்காகத் தானமாக வழங்கப்பட்டாலும் தானமாக வழங்கிய பெரியோர்களின் வாரிசுகளே அந்த சொத்துக்களை தங்கள் பெயருக்கு மாற்றிக் கொண்டதும் பிறருக்கு விற்பதும் சில இடங்களில் நடந்தது.

இப்படிப்பட்ட செயல்பாடுகளைக்கண்காணித்து, முத்தவல்லிகளை ஒழுங்காகச் செயல்பட வைக்க 1954-ல் உருவாக்கப்பட்டதுதான் வக்ஃபு வாரியம், ஒன்றிய-மாநில அரசுகள் இணைந்து உருவாக்கியிருக்கும். இந்த வக்ஃபு வாரியம், முஸ்லிம் பெரியவர்கள் இறைப் பணிக்காக வழங்கிய பெரும் சொத்துக்களைப் பராமரித்துக் கண்காணிக்கும் பொறுப்பை ஏற்றது.

வக்ஃபு வாரியம் மாநில அரசுகளின் நேரடிக் கட்டுப்பாட்டில் இல்லை. இருந்தாலும் அது ஒரு அரசு சார்பு நிறுவனமாக இயங்குகிறது. அதே நேரத்தில் அது மாநில அரசு சொல்லும் எல்லாவற்றையும் கேட்டு நடக்க வேண்டும் என்பதில்லை. வக்ஃபு வாரியம் கூடி என்ன முடிவெடுக்கிறதோ அதுதான் முடிவு. அரசு இதில் சட்டரீதியாகத் தலையிட்டு, எந்த முடிவையும் எடுக்க வைக்கவோ, எடுத்த முடிவை மாற்றவோ முடியாது. வக்ஃபு வாரியம் தன்னிச்சையான அமைப்பு என்று சொல்லப்பட்டாலும், அதன் நிர்வாகச் செலவுக்கு இன்று வரை அரசை எதிர்பார்த்தே உள்ளது.

வக்ஃபு வாரியம் கட்சி சாரா அமைப்பு என்று சொல்லப்பட்டாலும் வாரியப் பதவிகள் அனைத்தும் ஏலம் விடப்படாத குறைதான் என்ற குற்றச்சாட்டு நிலவுகிறது. வாரியத் தலைவர் பதவிக்கு ஆட்களை நியமனம் செய்யும் விஷயத்தில் ஆண்டாண்டு காலமாக அரசியல் தலையீடு இருப்பதாகவும் நிறைய குற்றச்சாட்டுக்கள் உள்ளன. இப்படிப்பட்ட சூழ்நிலையில் தி.மு.க. அரசு ஒரு தெளிவான முடிவெடுத்திருக்கிறது. முறைகேடுகள் நடப்பதாகக் கூறப்படும் வக்ஃபு வாரியத்தை திறம்பட நடத்திச் செல்வதற்காக நிர்வாகத்தில் அனுபவம் பெற்ற முன்னாள் எம்.பி. அப்துல் ரஹ்மானை வக்ஃபு வாரியத் தலைவராக நியமித்திருக்கிறது. பொறுப்பேற்ற பின் அப்துல் ரஹ்மான் நிர்வாகச் சீர்திருத்தங்களுக்காகப் பல்வேறு முயற்சிகள் எடுத்து வருவது நம்பிக்கை வெளிச்சத்தைத் தருகிறது.

இந்தியாவின் சிறுபான்மை மக்களின் நலன்கள் பாதுகாப்புக்

# புதுகை மாநகரில் ஓர் மஸ்ஜித் புதுப் பொலிவு பெறுகிறது!

புதுக்கோட்டை டவுன் காமராஜபுரம் பகுதியில் சுமார் 40 ஆண்டு காலமாக "**மஸ்ஜித் முஹம்மது இப்ராஹீம்**" என்ற பெயரில் ஜும்ஆ பள்ளிவாசல் ஒன்று இயங்கி வருகின்றது. மஹல்லாவாசிகள் அனைவரும் தொழுகுவதற்கு போதிய இட வசதியில்லாத காரணத்தால், பள்ளிக்கு சேகரமான பக்கத்து இடத்தினை தற்சமயம் வாங்கியும், பழைய பள்ளி கட்டிடத்தினை இடித்தும் 3600 சதுர அடி பரப்பில் புதிய பள்ளிவாசல் இரு தளங்களாக கட்டுவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. அல்ஹம்து லில்லாஹ்!

இந்நிலையில், இப்பள்ளி மஹல்லாவாசிகளிடம் போதிய நிதி வசதியின்மையால், சமுதாய தனவந்தர்களிடமிருந்து நிதி உதவி பெற்று கீழ் தளம் மட்டும் அமைக்கும் பணி வேகமாக நடைபெற்றுக் கொண்டு வருகிறது.

இன்ஷா அல்லாஹ் இதே வேகத்தில் முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் கட்டிடப் பணி துவங்குவதற்கும் அல்லாஹ்வின் நல்லடியார்களிடமிருந்து கட்டிட பணிக்கான உதவிகள் கோரப்படுகிறது. அல்லாஹ்வின் நல்லடியார்களாகிய சமுதாய தனவந்தர்களிடமிருந்து உதவியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

இப்படிக்கு : **நிர்வாகிகள், "மஸ்ஜித் முஹம்மது இப்ராஹீம்" ஜும்ஆ பள்ளிவாசல்,**
காமராஜபுரம் ஒன்பதாவது தெரு, புதுக்கோட்டை -622 001.

## வங்கி விபரம் :

Account Name : **JUMMA MAZJID KAMARAJAPURAM**
Current Account No : **510101005523881**
Bank : **UNION BANK OF INDIA**
IFSC Code : **UBIN0911241** Micr Code: **622026008**
Branch : **PUDUKKOTTAI.** Tamilnadu. India.

## தொடர்புக்கு :

தலைவர் : ஹாஜி **அப்துல்லாஹ்** - 9715265709
செயலாளர் : ஹாஜி **ஏ.ஆர். முஹம்மது மீரா** - 9443346313
பொருளாளர் : ஜனாப் **பி.எஸ்.எம். முஹம்மது அப்துல்லாஹ்** - 9486265728

காக அமைக்கப்பட்ட சச்சார் கமிட்டி (2006) வக்ஃபு வாரியச் சொத்துக்களின் நிலை குறித்தும் ஆராய்ந்தது. வாரியத்தின் சொத்துக்கள் பலவும் ஆக்கிரமிக்கப் பட்டிருப்பதை அந்த கமிட்டி கண்டறிந்தது. இந்த சொத்துக் கள் அனைத்தும் முறையாக மீட்கப்பட்டால் வாரியம் என்ன நோக்கத்துக்காக ஏற்படுத்தப் பட்டதோ, அது நிறைவேறும் என்று கமிட்டி தன் அறிக்கையில் சுட்டிக்காட்டியது. இதன் மூலம் கல்வி நிறுவனங்கள், சுகாதார மையங்கள், சமுதாய நலக்கூடங் கள் போன்றவற்றை ஏற்படுத்தி, ஏழை எளிய முஸ்லிம்களுக்கு உதவ முடியும் என்பது கமிட்டியின் பரிந்துரை.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரை 7,452 வக்ஃபு நிறுவனங் களுக்குச் சொந்தமான 53,834 சொத்துக்கள் இருக்கின்றன. இவற்றின் மதிப்பு பல லட்சம் கோடி கள் என்கிறார்கள். தமிழ்நாட்டின் பெருநகரங்களில் ஆக்கிரமிக்கப் பட்டிருக்கும் வக்ஃபு வாரியச் சொத்துக்களை மீட்க முடியாமல் வழக்குகள் போடப்பட்டு நிலுவை யில் உள்ளன. சில இடங்களில் அரசு சார்ந்த நிறுவனங்களே ஆக்கிரமித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இதையெல்லாம் மீட்க வாரியத்துக்குப் போதுமான சட்ட அதிகாரம் இல்லை. ஆகவே, வலுவான சட்டப் பாதுகாப்புடன் வக்ஃபு வாரியம் கட்டமைக்கப் பட வேண்டும். இப்படிப்பட்ட சொத்துக்களையெல்லாம் மீட்டு, அவற்றிலிருந்து வருவாய் வரத் துக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இப்படி செய்யும் பட்சத்தில் கோடிக் கணக்கான ரூபாய் வருவாய் கிடைக்கும். வாரிய நிர்வாகத்தை நடத்துவதற்கு அரசிடம் கையேந்த வேண்டியதில்லை.

வக்ஃபு வாரியம், வேறெந்த சமூகமும் பெற்றிருக்காத அளவுக்குச் சொத்துக்களைப் பெற்றிருக்கிறது. ஆனால், வறியவர்கள் அதிகம் இருக்கும் சமூகம் என முஸ்லிம் சமூகம் அடையாளம் காட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. கல்வி, வேலை வாய்ப்பு உள்ளிட்டவற்றில் மிகவும் பின்தங்கிய சமூகமாக முஸ்லிம் சமூகம் வைக்கப்பட்டி ருக்கிறது. பள்ளிகள், தொழிற் சாலைகள், குடிநீர், சுகாதாரம், சாலை வசதிகள் உள்ளிட்டவை எங்கெல்லாம் குறைவாக இருக் கின்றனவோ அங்கெல்லாம் முஸ்லிம்கள் அதிகம் வாழ்கிறார் கள் என்று ஆய்வுகள் கூறுகின்றன.

முஸ்லிம் சமூகத்தை அரசும், பொதுச் சமூகமும் கைவிடக் கூடாது என்பது ஒரு புறமிருக்க, முதலில் சமூக மக்களின் மேம் பாட்டுக்காக வக்ஃபு வாரியம் தலைமையேற்றுச் செயல்பட வேண்டும் என்ற ஏக்கம் எல்லா முஸ்லிம்களிடமும் இருக்கிறது.

# தாயின் கருவறையின் உள்ளே...

"தமிழ் மாமணி" அல்ஹாஜ் டாக்டர்
**பீ.ஹாமிது அப்துல் ஹை,** எம்.பி.பி.எஸ்.,டி.ஸி.ஹெச்.,

பிறகு, குறிப்பிட்ட உறுப்புகள் அவைகள் இருக்க வேண்டிய இடம் நோக்கி நகர்ந்து வளர்ச்சியை தொடர்கின்றன. இம்முறை கேஸ்ட்ருலேஷன் (Gastrulation) எனப்படும்.

3 முதல் 8 வாரம் வரை உருவநிலை (Shaping Stage) தொடரும். இப்பொழுது கருவின் தோற்றம் இரத்தம் உறிஞ்சும் அட்டை (Leech) போல் காணப்படும்.

**"அவ்விரத்தக்கட்டியை மாமிசப் பிண்டமாகச் செய்தோம்"**

- அல்குர்ஆன் (23 : 14)

4வது வாரம், கருவின் தோற்றம் மென்ற தசைபோல் தோன்றும்.

5வது வாரத்தில் இளநிலை எலும்பும் தசையும் வளரத் தொடங்கும்.

7வது வாரத்தில் எலும்புகள் முழு வளர்ச்சியடைந்து மனித உடலின் தோற்றத்தைத் தரும். கண்கள், காதுகள் தோற்றம் தரும்.

8வது வாரத்தில் தசைகள் நன்கு வளர்ந்து எலும்புகளைச் சுற்றிப் போர்த்திக் கொள்கின்றன. இவ்வார இறுதியில் முழு வளர்ச்சிடையவில்லை என்றாலும் மனிதக் குழந்தையின் தோற்றம் காணப்படும். உடல் தோலால் மூடப்படும்.

9வது வாரத்தில் இன உறுப்புக்கள் தோன்றத் தொடங்கி ஆண் - பெண் உறுப்புகளின் வேறுபாட்டைக் காண முடியும்.

40 நாட்களிலேயே உடலின் முக்கிய உறுப்புகள் நன்கு வளர்ச்சியடையும்.

4 மாதத்தில் மனித முகத் தோற்றத்தையும், உறுப்புகளின் அங்க அடையாளங்களையும் காண முடியும்.

5வது மாதத்தில் மெல்லிய பூனை முடி (lanuga) உடலை மறைக்கிறது. தலைமுடிகளும் தோன்றுகின்றன.

இப்பொழுது, கர்ப்பப்பையில் குழந்தை அசைவதை தாய் உணருவார்.

6வது மாதத்தில் உடல் ஒல்லியாகத் தோன்றினாலும்,

குழந்தை முழு வளர்ச்சி பெற்று விடும். இம்மாத இறுதியில் நுரை யீரல்களும், மற்ற பிற உறுப்பு களும் நன்கு வளர்ந்து, குறை மாதத்தில் பிறந்தாலும் அது உயிர் வாழத் தகுதி பெற்று விடும்.

**“அவள் கர்ப்பமானதிலி ருந்து இவன் பால்குடி மறக்கும் வரையில் 30 மாதங்கள் [மிக்க கஷ்டத்துடன்] செல்கின்றன.”**

- அல்குர்ஆன் (46 : 15)

**“[அவன் பிறந்த] பிறகும் இரண்டு வருடங்களுக்குப் பின்னரே அவனுக்கு பால் மறக்கடித்தாள்.”**

- அல்குர்ஆன் (31 : 14)

தாய்ப்பாலை, குழந்தைக்கு 24 மாதங்களுக்கு ஊட்டுமாறு குர்ஆன் குறிப்பிடுகிறது.

தாயின் கஷ்டம் 30 மாதங்கள் என்றும் கூறுகிறது.

ஆகவே 30 - 24 = 6 மாதங் கள். 6 மாதக் குழந்தை உயிர் வாழத் தகுதி பெற்று விடுகிறது.

## கருவறையினுள்ளே....

தாயின் கர்ப்பத்தில் நடை பெறும் நடவடிக்கைகள் இன்று நன்கு அறியப்பட்டுள்ளன.

விஞ்ஞான முன்னேற்றம் இதற்கு பெரிதும் உதவுகிறது. அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன் மூலம் சிறிய திரையில் கருவறை நிகழ்ச்சிகளை பார்க்க முடிகிறது. சிறிய ஒலிபெருக்கிக் கருவியை தாயின் கர்ப்பப்பைக்குள் செலுத்தி அதனுள் ஒலிக்கும் சப்தங்களை யும் கேட்க முடிகிறது.

கர்ப்பக் காலத்தின் கடைசி சில வாரங்களில் கருப்பையின் நிகழ்வுகள் பற்றித் தெரிந்து கொள்வோம்.

கருப்பையினுள்ளே வளரும் குழந்தையைப் பாது காக்க 'அம்னியாடிக்திரவம்' அதைச் சூழ்ந்திருக்கும்; அதில் குழந்தை மிதக்கும். கடந்த 8 மாதங்களாக வளரும் சிசு அதன் பிரத்தியேகக் கடலில் மிதந்து திரிகிறது.

காலையில் எழுந்து கண் விழிக்கிறது. கொட்டாவி விட்டுக் கொண்டு, கால்களை பலமுறை உதைத்துக் கொள்ளும். தொப்புள் கொடியைப் பிடித்து உலுக்கும். சிறிது நேரம் அதனுடன் விளையாடும். தனது கைகளை வாய்க்குக் கொண்டு வரும்; பெருவிரலை சூப்பும்.

தாயின் இதயத் துடிப்பு குடல்களில் எழும் ஒலிகளுக்கு மேலே தனது தாயும் தந்தையும் பேசும் பேச்சொலியை கேட்கும். பெற்றோர் குரலொலியைக் கேட்கும் ஆர்வத்தில் விரல் சூப்புவதை நிறுத்திக் கொள்ளும். நடக்க ஆரம்பித்து அந்த அசைவு மென்மையாகத் தூக்கத்தில் ஆழ்த்தி விடும்.

பிறந்து வெளிவந்தபின் செய்யக்கூடிய கொட்டாவி, விரல் சூப்புதல், பிடித்தல், உடலை நீட்டுதல், கண் விழித்தல், முக

பாவணை காட்டுதல் முதலிய வற்றை கருவறையில் குழந்தை செய்வதைக் காணலாம்.

கருவறையில் அதிக ஒலியை குழந்தை செவியுறும். இதயத் துடிப்பு, நுரையீரல், குடல்கள் முதலிய தாயின் உறுப்புகளி லிருந்து எழும் ஒலிகளுக்கிடை யில் குழந்தை வளர்கிறது. வெளியிலிருந்து வரும் அதிக ஒலி பாதிப்பை ஏற்படுத்தலாம்.

## பிளாசென்ட்டா (Placenta)

இது தாயின் கருப்பையில் கர்ப்பத்தின்போது வளரும் ஒரு மெல்லிய உறுப்பாகும். கருப்பையின் உள்பகுதியின் மெல்லிய சவ்வின் மீது வலு வாக இணைக்கப்பட்டிருக்கும் ஒரு மென்மையான பையாகும்.

தண்ணீரில் மிதக்கும் படகு, கரையில் கயிற்றினால் கட்டப்பட்டிருப்பது போல தொப்புள் கொடி மூலம் வளரும் குழந்தை பிளாசென்ட்டாவுடன் இணைக்கப்பட்டிருக்கும்.

இதன் மூலம் தாயின் இரத்தம் குழந்தைக்கு பாய்ந்து பிராண வாயுவும் சத்துப் பொருட் களும் குழந்தைக்கு கிடைக்கும். குழந்தையின் இரத்தக் கழிவுகள் தாயின் இரத்த ஓட்டத்திற்கு வந்து சேரும். ஈஸ்ட்ரஜன் (Estrogen) புரொஜெஸ்ட்ரோன் (Progesterone) மனித கோரி யானிக்கோனொடோட்ரொஃபின் (Human chorionic gonadotropin) முதலிய சுரப்பி நீர்களை (ஹார்மோன்கள்)ச் சுரக்கும்.

கர்ப்பத்தின் ஆரம்ப நாட் களில் மனித கோரியானிக் கோனொடோட்ரொஃபின் ஹார்மோன் அதிகளவில் தாயின் சிறுநீரில் காணப்படும். ஆகவே, சிறுநீர் சோதனையின் மூலம் இதனளவு கணிக்கப்பட்டு கர்ப்பம் உறுதி செய்யப்படுகிறது. குழந்தை பிறந்தவுடன் பிளாசென்ட்டா கருப்பையிலி ருந்து வெளியேற்றப்படும். தொப்புள் கொடியும், குழந்தை யிடமிருந்து பிரிக்கப்பட்டு விடும்.

கருப்பையில் குழந்தை தனது ஒரு காலைக் கொண்டு பட்டுப் போன்ற மென்மையான தலை யணையொத்த பிளாசென்ட் டாவை தடவிப் பார்க்கும். தான் மிதக்கும் அம்னியாடிக் திரவ நீரைக் கொஞ்சம் குடித்துக் கொள்ளும். ஆகவே விக்கல் தூண்டப்படும். இதனை அடுத்தடுத்து பாயும் மெல்லிய அலை போல தாய் உணருவார்.

விக்கல் நின்றவுடன் குழந்தை விரும்பும் அமைப்பில் தாயின் நெஞ்சு வரிச்செலும்பு களுக்குக் கீழ் தனது பிட்டத்தை வைத்து கருப்பையின் இடது பக்கம் உடலை நீட்டி, மீண்டும் தூங்கி விடுகிறது.

பிறந்த பின்பு மேற்கொள்ள வேண்டிய செயல்களுக்கு ஒத்திகை செய்வது போல செயல்படுகிறது.

குழந்தைக்கு சுவாசிக்க வேண்டியத் தேவையில்லை என்றபோதிலும் சுவாச உந்து தசை (diaphragm) செயல்படுத்தப் படுகிறது. (உந்து தசை, நுரையீரல் களையும், வயிற்றையும் பிரித்து வைக்கும் சுவாச உறுப்பாகும்).

உண்பதோ, குடிப்பதோ குழந்தைக்கு தேவையில்லை. ஆனால் அம்னியாடிக் திரவத்தை குடித்துக் கொள்ளும்.

அம்னியாடிக் திரவம் குழந்தையை சூழ்ந்துள்ளது. இத்திரவம் அதிர்ச்சி எதுவும் குழந்தையைத்தாக்கி விடாமல் பாதுகாப்பதோடு வெப்பத்தை யும் கட்டுப்படுத்துகிறது. மேலும், இத்திரவம் வழவழப்பாக மசகு போல் உராய்வுகளிலிருந்தும் (lubrication) குழந்தை உடலைப் பாதுகாக்கிறது. ஆகவே எவ் விதத் தடுப்புமின்றி குழந்தை இயங்குகிறது. இவ்வியக்கம் அதன் எலும்புகள், தசைகள் வளர்ச்சிக்கு உதவுகிறது.

பிளசென்ட்டா தாய்க்கும், வளரும் குழந்தைக்குமிடை யிலுள்ள பாதுகாப்பு அரண் அல்ல. சிகரெட் புகை, மது, மருந்துகள் ஆகியவற்றிலிருந்து பெறப்படும். விஷப் பொருட்கள், பிளாசென்ட்டா வழியாக தாயின் இரத்த ஓட்டத்திலிருந்து உட் சென்று தொப்புள் கொடி வழி யாக குழந்தைக்குள் சென்று விடுகின்றன. தாயின் சுரப்பு நீர்களும் சென்றடையும்.

பூனைக் கழிவு, சமையல் செய்யப்படாத இறைச்சி ஆகிய வற்றிலிருந்து வெளிப்படும் நோய்க் கிருமிகள், ருபெல்லா (Rubella - German measles) டாக்ஸோபிளாஸ்மோசிஸ் (Toxoplasmosis) முதலிய அதிக பாதிப்பு ஏற்படுத்தாத நோய் களைத் தூண்டி தாயைத் தாக்கும் போது அவை வளரும் குழந்தைக்குப் பாதிப்பு ஏற்படுத்தி அதன் வளர்ச்சிக்கு இடையூறு செய்யலாம். வீட்டில் அல்லது பணியிடத்திலுள்ள இரசாயனப் பொருட்கள் பலவும் தீங்கு செய்யலாம்.

வளரும் குழந்தைக்கு பசி அல்லது தாகம் ஏற்படுவதில்லை. ஆனால், தாய் போதிய ஊட்டச் சத்துள்ள உணவை உட்கொள் ளாதபோது, குழந்தையும் பாதிக்கப் படும். அதிகமாகப் புகைப்பிடிக்கும் தாயின் இரத்த ஓட்டம் பிளசென்ட் டாவிற்கு உரிய அளவு பாய்வ தில்லை. அப்போது ஊட்டச்சத்துப் பெறாத குழந்தையின் நெஞ்சும், தொண்டையும் அழுகையின் இயக்கத்தைக் காட்டும்.

வானொலியிலிருந்து வரும் பாட்டொலி, பின்னதிர்வு குழந்தையைத் தூண்டும். கண்கள் விரியும். முக பாவனை காட்டும்; பிறகு இசையின் மீது அதற்கு ஆர்வம் ஏற்படும்.

வெளியுலகிற்கு நெருக்க மாக தனது செவியைக் கொண்டு வருவதற்காக குழந்தை தலை

பர்மா நாட்டின்- இரங்கூன் நகரில் 1911-ல் துவங்கி 1936-ல் வெள்ளி விழா கண்ட
"நவீனகதா புத்தக சாலை"-யின் வாரிசுகளால் நடத்தப்படும் நிறுவனம்

CityAds BOOKS

உங்களுக்கு என்ன புத்தகம் வேண்டும் ?
எங்களிடம் கேளுங்கள்- உங்கள் இல்லம் வந்து சேரும்.

www.cityadsbooks.com/islam புத்தகங்கள் வி.பி.பி மூலம் பெறலாம்

இஸ்லாமிய மற்றும் தமிழ் பதிப்பகங்களின் புத்தகங்கள்
தேவைகளுக்கு Call/Whatsapp: 98410 16016

அரபி பாடப் புத்தகங்களும் அனுப்பித் தருகிறோம்

| இஸ்லாமிய புத்தகங்கள்: | | படிக்க-பரிசாக கொடுக்க தன்னம்பிக்கை புத்தகங்கள்: | |
|---|---|---|---|
| ரியாளுஸ்ஸாலிஹீன் | -Rs.400/- | உலகைப் புரட்டிய ஒரு நொடிப் பொறிகள் | -Rs.66/- |
| அல்லுஃலுவுல் வல்மர்ஜான் | -Rs.600/- | உன்னை அறிந்தால் உலகை நீ ஆளலாம் | -Rs.127/- |
| அல்அதபுல் முஃப்ரத் | -Rs.350/- | தொழிலதிபர்கள் வணிகர்களுக்கான நினைவாற்றல் | -Rs.77/- |
| இஸ்லாமிய இல்லறம் | -Rs.300/- | வெற்றிக்கு வேண்டும் தன்னம்பிக்கை | -Rs.155/- |
| கலீஃபாக்கள் வரலாறு | -Rs.300/- | பணத்தைக் குவிக்கும் நேர நிர்வாகம் | -Rs.155/- |
| முத்தும் பவளமும் | -Rs.400/- | வேகமாக படிக்க-Rs.111/- Google-சுந்தர் பிச்சை | -Rs.133/- |
| பத்து சஹாபாக்கள் | -Rs.250/- | அச்சம் தவிர்-ஆளுமை கொள் | -Rs.150/- |
| சஹாபாக்கள் வரலாறு | -Rs.300/- | பிசினஸ் வெற்றி ரகசியங்கள் | -Rs.110/- |

உங்கள் விளம்பரங்களை தமிழ்/ English நாளிதழ்களில் வெளியிட-
குர்ஆனின் குரலில் விளம்பரம் செய்ய-சந்தாவில் பெற

CityAds ½,St. Mary's Rd, Mandaveli, Chennai-28
Email: ads@cityadschennai.com
Cell: 98410 16016

"மக்களிடம் நெருக்கமாகவும், மென்மையாகவும், எளிமையாகவும் நடப்பவருக்கு நரகம் ஹராமாக்கப்பட்டுவிட்டது" என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அறிவிப்பாளர் : ஹள்ரத் இப்னு மஸ்ஊது (ரளி) அவர்கள் (நூல் : அஹ்மது)

பாவா மெடிக்கல்ஸ்

53/4, பெரிய தெரு,
பட்டுக்கோட்டை-1.

04373-254354; 253339; 99444 54354

யைத் திருப்பிக் கொள்ளும் தாயார் தனது வயிற்றின் மேல் வைத்துக் கொண்டு படிக்கும் புத்தகத்தின் அழுத்தத்தைக் கவனிக்கும். ஆகவே அதன் மீது காலால் உதைக்கும். தாய் சிரிப்பது, மந்தமான எதிரொலி யாக குழந்தை உணரும். தாய் அந்த இடத்தை கையால் தட்டிக் கொடுக்கும்போது, விளை யாட்டில் ஈடுபடுவது போன்று குழந்தை திரும்ப அந்த இடத்தின் மீது உதைக்கும். இது சிறிது நேரம் தொடரும். பிறகு இவ்விளை யாட்டில் ஆர்வம் குறைந்து மீண்டும் உறங்கச் சென்று விடும்.

கர்ப்பத்தின் கடைசி சில வாரங்களில் எல்லா உணர்வு களையும் குழந்தை செயல்படுத்த முடியும். கருப்பையினுள் பார்வை புலன் அதிக முக்கியமில்லை என்ற போதிலும் தாயின் வயிற்றின் மீது துணியின்றி நன்றாக ஒளி படும்போது குழந்தை கண்களை அகலத் திறந்து முகத்தைத் திருப்பி மங்கிய ஒளியைப் பார்க்கும்.

கர்ப்பம் முடிவடையும் போது சுவை அரும்புகள் நன்கு (Taste Buds) வளர்ச்சி பெற்று விடும். இனிப்புச் சுவையை குழந்தை பெரிதும் விரும்பும். சாக்கரின் (saccharine - சர்க்கரை யில்லாத இனிப்பான வேதியல் பொருள்) என்ற பொருளையும், வர்ணத் திரவத்தை (dye)யும் கலந்து கருப்பைக்குள் செலுத்தி ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. அத்தாயின் கருப்பையில் அதிக ளவு அம்னியாட்டிக் திரவம் ஏற் கனவே, இருந்ததால் ஆராய்ச்சிக்கு அப்பெண் தேர்ந்தெடுக்கப் பட்டார். ஆகவே குழந்தை அதிக அளவு அம்னியாட்டிக் திரவத்தைப் பருகும் என எதிர்ப் பார்க்கப்பட்டது. அதிகத் திரவம் தாயின் இரத்தத்தில் கலந்து விட் டதும் தாயின் சிறுநீரில் உட் செலுத்தப்பட்ட வண்ண திரவம் வெளியேறியதும் தெரிய வந்தன. குழந்தையும் இனிக்கும் அம்னி யாட்டிக் திரவத்தைப் பருகி, திருப்தியுற்று மேற்கொண்டு பருகுவதை நிறுத்திக் கொண்டது!

தாயின் குரல் ஒலியை அடிக்கடி கேட்பதால் அதனை குழந்தை நன்கு அறிந்து கொள்ளும். ஆனால் தந்தையின் குரல் அடிக்கடி ஒலிப்பதில்லை என்பதால் அதை அறிந்து கொள் வதில்லை. ஆனால் பிறந்து இரண்டு வாரங்களுக்குப்பின் தந்தையின் குரலொலிக்கும் பழக்கப்பட்டு விடும். தாய் மொழி யின் ஓசை நயம் (Cadence) ஒத்திசைவு நயம் (Rhythm) ஆகியவற்றையும் பழகிக் கொள் ளும் தாய் மொழியுடன் மற்றொரு மொழியையும் இணைத்து ஆராய்ச்சி மேற்கொண்டபோது தாய்மொழி ஓசைக்கே கவனம் செலுத்தியது.

(தொடரும்)

# காளான் (MUSHROOM)

மவ்லவி ஹாஃபிழ் அ. முஹம்மது அலீ ஜின்னாஹ் சிராஜி

நமது உடலில் நோய்க் கிருமிகளை எதிர்த்துப் போராடும் வல்லமை கொண்டது வெள்ளை அணுக்கள் தான். இந்த வெள்ளை அணுக்கள் எந்த அளவுக்கு அதிகமாக ஒருவரின் உடலில் உள்ளதோ அந்த அளவுக்கு அவர் ஆரோக்கியம் பெற்றவராக இருப்பார். இந்த வெள்ளை அணுக்களை அதிகரிக்கச்செய்து நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்குவதில் காளான் (MUSHROOM) முக்கியப் பங்கு வகிக்கிறது.

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

**"பனீ இஸ்ரவேலர்களுக்கு வானில் இருந்து அற்புதமாக இறக்கப்பட்ட மன்னு எனும் சிறப்பு உணவைச் சார்ந்ததாக காளான் இருக்கிறது. அதன் நீர் கண் நோய்க்கு மருந்தாகும்"**

(புகாரீ 4478)

விளக்கம் : பனீ இஸ்ராயீல் சமூகம் ஃபிர்அவ்னிடமிருந்து காப்பாற்றப்பட்டபின் பாலை வனத்தில் தவித்தபோது அவர்களுக்குப் பல உதவிகளை அல்லாஹ் அற்புதங்களாக அருளினான். அவற்றில் ஒன்று தான் மன்னு என்னும் உணவாகும், பாலை விட வெண்மையாகவும், தேனை விட இனிப்பாகவும் இருக்கும். இவைகள் அங்குள்ள மரங்களின் இலைகள் மீது விழும். அவற்றை எடுத்துப் புசிப்பார்கள். அதுபோல் ஸல்வா என்பது பறவையின் இறைச்சியாகும். இந்தப் பறவைகளும் அங்கு வந்து அமரும். அவற்றை அறுத்து சமைத்து சாப்பிடுவார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது. ஆனால் இவற்றை ஒரு நாளுக்கு மேல் சேமிக்கக்கூடாது என அல்லாஹ் கட்டளையிட்டிருந்தான். அதையும் மீறி சேமித்தார்கள். அதனால் அந்த அருட்கொடையை அல்லாஹ் பறித்தான். அதற்கு முன்பு வரை இறைச்சிக்கு கெட்டுப்போகும் தன்மை என்பது இருக்கவில்லை. இவர்கள் செய்த பாவத்தால் இறைச்சிக்கு கெட்டுப் போகும் தன்மையை அல்லாஹ் அமைத்து விட்டான்.

(தஃப்ஸீருல் குர்துபீ)

நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் :

"பனீ இஸ்ராயீல் சமூகம் மட்டும் இல்லா விட்டால் (அவர்கள் தவறு செய்திருக்கா விட்டால்)

இறைச்சிக்கும், உணவுக்கும் கெட்டுப்போகும் தன்மை என்பது இருந்திருக்காது" (முஸ்லிம்)

## காளான் உண்ணுவதின் நன்மைகள்

இரத்தத்தில் கலந்துள்ள கொழுப்பை கரைத்து இரத்தத்தை சுத்தப்படுத்தும். இதயத்தைப் பாதுகாப்பதில் காளானின் பங்கு அதிகம். இதயத்தின் செயல்பாடு சீராக இருப்பதற்கு பொட்டாசியம் சத்து தேவை. இதை நாம் உணவுகள் மூலம் பெற முடியும். அந்த வகையில் பொட்டாசியம் சத்து அதிகமுள்ள உணவுகாளான் தான். 100 கிராம் காளானில் 447மி.கி பொட்டாசியம் சத்து உள்ளது.

மேலும் காளானில் தாமிரச் சத்து உள்ளதாகவும் கண்டறியப் பட்டுள்ளது. தாமிரச்சத்து இரத்த நாளங்களில் ஏற்படும் பாதிப்பை சீர் செய்யும்.

100 கிராம் காளானில் 35 சதவீதம் புரதச்சத்து உள்ளது. எனவே குழந்தைகளின் உடல் வளர்ச்சிக்கு சிறந்த ஊட்டச்சத் தாக இது அமைகிறது. எளிதில் ஜீரணமாகும் தன்மை கொண்டது.

---

## கூடாது!

* ஒளுவின்றி குர்ஆனை தொடக் கூடாது.
* பள்ளிவாசலில் உலகப் பேச்சுக்களைப் பேசுவது கூடாது.
* கழிவறையில் ஸலாம் சொல்வதோ, பதிலுக்கு ஸலாம் சொல்வதோ கூடாது.
* ஆண்கள் பட்டாடை அணியக் கூடாது.
* ஆண்கள் தங்க மோதிரம், அணிகலன் அணியக்கூடாது.
* ஒட்டு முடி (சவுரி முடி) அணியக்கூடாது.
* நரை முடியை பிடுங்கக் கூடாது.
* மருதாணிச் சாயத்தைத் தவிர வேறு பொருளைக் கொண்டு முடியின் நிறத்தை மாற்றம் செய்யக்கூடாது.
* தலையை மறைத்தும், கால்களில் செருப்பு அணிந்தும் கழிவறைக்குள் செல்ல வேண்டும்.
* நின்று கொண்டு சிறுநீர் கழிப்பது கூடாது.
* கிப்லாவின் திசையை நோக்கி கால் நீட்டி உட்காருவதும், கால் நீட்டி படுப்பதும் கூடாது.
* ஒருவர் தொழும்போது அவர் முன்பாக செல்வது கூடாது.
* வட்டிக்கு பணம் கொடுப்பதோ, வாங்குவதோ கூடாது.

**தருபவர் : அன்வர் ஜீ,** சேலம் – 5.

# விஞ்ஞான விநோதங்கள்!

மவ்லவீ **வி.அப்துல் ரஷீத்** ஃபாஸில் ஜாமியா நிஸாமியா
எம்.ஏ., பி.டிஹெச்.,

தெரியாத விஷயங்கள் உலகத்தில் எவ்வளவோ இருக்கின்றன. அவைகளை உலகத்தில் உள்ளவர்கள் தெரிந்து கொள்வதற்காக பல மருத்துவ பத்திரிகைகள் பல அற்புதமான விஷயங்களை வெளியிடுகின்றன. இதை படித்து உலக மக்கள் பயன்பெற வேண்டும் என்பதற்காக அவர்கள் உலக அளவில் மருத்துவம் மற்றும் விஞ்ஞான ரீதியான விஷயங்களை ஒன்று திரட்டி உலக மக்களின் பார்வைக்கு கொண்டு வருகிறார்கள்.

இதற்காக உலக அளவில் பல டிரஸ்ட்டுகள் நிறுவப்பட்டு பல கோடிக்கணக்கான பணத்தை செலவழித்து உலக மக்களுக்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துகிறார்கள்.

இப்படிப்பட்ட மருத்துவம் மற்றும் விஞ்ஞான ரீதியான விஷயங்கள் நம் ஆரோக்கியத்தை பாதுகாப்பதற்கு உதவுகின்றன. பல விஷயங்கள் சுவாரஸ்யமாக இருப்பதுடன், புதிய பல அற்புதமான விஷயங்களை தெரிந்து கொள்ளும் வாய்ப்பும் நமக்கு கிடைக்கிறது.

## பெண்கள் ஆண்களை விட வேகமாக பேசுகிறார்கள்!

பெண்கள் ஆண்களை விட வேகமாக பேசுகிறார்கள் என்று ஆராய்ச்சியில் கண்டறிந்துள்ளார்கள். பெண்களுக்கு இருக்கும் மூளையின் அமைப்புதான் இதற்கு காரணமாகும்.

மூளையில் ப்ரீப்ரண்டல் கார்டெக்ஸ் (Prefrontal Cortex) என்ற ஒரு பகுதி இருக்கிறது. இந்தப் பகுதி மூளையின் முன் பக்கத்திலேயே அமைந்திருக்கிறது.

சமூக தொடர்புகள், சமூகத்தில் ஒருவரோடு ஒருவர் கருத்துக்களை பரிமாற்றம் செய்து கொள்ளுதல் ஆகிய செயல்பாடுகளுக்கு ப்ரீப்ரண்டல் கார்டெக்ஸ் என்ற மூளையிலுள்ள இந்த பகுதியே காரணமாக இருக்கிறது.

ப்ரீப்ரண்டல் கார்டெக்ஸ் என்ற மூளை பகுதி ஆண்களை விட பெண்களுக்கு பெரியளவில் இருப்பதாக ஓபன் அனாடமி ஜார்னல் (Open Anatomy Journal) என்ற மருத்துவ பத்திரிகையில் ஆய்வு ஒன்றை வெளியிட்டிருக்கிறார்கள்.

இதனால் தான் பெண்கள் சமூக கூடங்களில், சமூக நிகழ்ச்சிகளில் கூடும்போது தங்கள் கருத்துக்களை மிக வேகமாக பரிமாறி கொள்கிறார்கள் என்று விஞ்ஞானிகள் கருத்து தெரிவிக்கிறார்கள்.

மேலும் ப்ரீப்ரண்டல் கார்டெக்ஸ் என்ற மூளை பகுதி பெண்களுக்கு பெரிய அளவில் இருப்பதால் இவர்களிடம் ஆளுமை வெளிப்பாடு - (Personality expression) என்ற திறமையும் இவர்களிடம் அதிகமாக இருக்கின்றது.

இதனால் தான் இவர்கள் திருமணம், மணவிருந்து போன்ற வைபவங்களுக்கு போகும் போது பிறர் பாராட்டும் வகையில் தங்களை அலங்கரித்துக் கொள்கிறார்கள்.

இது மட்டுமல்லாமல் ஃபாக்ஸ் பி2 ப்ரோடீன் (FoxP2 Protein) என்ற புரதம் பெண்களின் மூளையில் அதிகளவில் இருப்பதாகவும் 2013ம் ஆண்டில் நடந்த ஆய்வில் கண்டறிந்துள்ளார்கள்.

பெண்களின் மூளையில் அதிகளவில் இருக்கும் ஃபாக்ஸ் பி2 ப்ரோடீன் என்ற புரதம் இவர்களுக்கு சரளமாக பேசும் மொழி வன்மையை கொடுக்கிறது.

இதனால் தான் பெண்கள் ஆண்களைவிட அதிகமாகவும், மிக வேகமாகவும் பேசும் திறன் படைத்தவர்களாக இருக்கிறார்கள் என்று விஞ்ஞானிகள் கருத்து தெரிவிக்கிறார்கள்.

மேலும், சூழ்நிலைக்கு தகுந்தவாறு தங்களின் பேச்சுக்களில் பொருத்தமான வார்த்தைகளை பயன்படுத்தி பேசுகின்ற திறமை பெண்களிடம் அதிகமாக இருக்கிறது என்று மேரிலேண்ட் பல்கலைக்கழகம் (University of Maryland) நடத்திய ஆய்வில் ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளார்கள்.

பெண்களின் மூளையில் அதிகளவில் இருக்கும் ஃபாக்ஸ் பி2 ப்ரோடீன் என்ற புரதம்தான் இவர்களின் பேச்சு திறமைக்கு காரணம் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கருத்து தெரிவிக்கிறார்கள்.

பெண்கள் எப்போதும் எதைப் பற்றியாவது பேசிக் கொண்டே இருப்பதற்கு காரணமும் இவர்களின் மூளையில் அதிகளவில் இருக்கும் ஃபாக்ஸ் பி2 ப்ரோடீன் என்ற புரதம்தான் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கருத்து தெரிவிக்கிறார்கள்.

## குளவி கொட்டியதால் பக்கவாதம்!

ஜர்னல் ஆஃப் எமர்ஜன்சி மெடிசின் (Journal of Emergency Medicine) என்ற மருத்துவ பத்திரிகையில் ஒரு செய்தி வெளியாகி இருக்கிறது. 44 வயதுடைய ஒருவரை குளவி கொட்டிய ஒரு மணி நேரத்திற்கு பின் அவர் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டார்.

ஆனால் அவருக்கு தகுந்த சிகிச்சை கொடுத்து அவரை பக்கவாதத்திலிருந்து மருத்துவர்கள் காப்பாற்றிவிட்டனர்.

குளவி கொட்டுவதால் பக்கவாதம் ஏற்படுமா என்று மருத்துவர்கள் சிந்திக்க ஆரம்பித்தனர். குளவியின் விஷம் அவருடைய இரத்தக் குழாயில் இரத்தக் கட்டியை (Clot) உருவாக்கி இருக்கலாம்.

இதனால் மூளைக்கு போதிய அளவு இரத்தம் போகாமல் அவருக்கு பக்கவாதம் ஏற்பட்டிருக்கும் என்று முடிவு செய்தனர்.

மேலும் குளவியின் விஷத்திலுள்ள மூலக்கூறுகள் (Venom molecules) இரத்தக் குழாயை குறுக (constrict) செய்வதாலும் மூளைக்கு போதிய அளவு இரத்தம் போகாமல் அவருக்கு பக்கவாதம் ஏற்பட்டிருக்கும் என்றும் முடிவு செய்தனர்.

ஆண் தேனீக்களுக்கு கொடுக்கு இல்லாததால் அவைகளால் கொட்ட இயலாது. பெண் தேனீக்களே கொட்டும். தேனீ கொட்டும் போது ஃபெரமோன் (Pheromone) என்ற ஒரு வகையான இரசாயனத்தை வெளியிடுகிறது. ஃபெரமோன் காற்றில் கலக்கும்போது அந்த வாசனையை நுகரும் மற்ற தேனீக்களும் அங்கு கூட்டமாக வந்து ஒரு மனிதரையோ அல்லது விலங்கையோ கொட்டுகிறது.

மகரந்தச் சேகரிப்பிற்காக கூட்டுக்கு வெளியே பறக்கும் தேனீக்கள் பொதுவாக கொட்டுவதில்லை. அவைகளின் கூட்டிற்கு அபாயம் வரும்போது மட்டுமே அவை கொட்டுகின்றன.

இராணி தேனீயை தவிர மற்ற தேனீக்களால் ஒரு முறை மட்டுமே கொட்ட முடியும். ஏனெனில் கொட்டும்போது தேனீயின் கொடுக்கு யாரை கொட்டுகிறதோ அவரின் உடலில் சிக்கிக் கொள்ளும். பொதுவாக இராணி தேனீ கூட்டை விட்டு வெளியே வராது.

தேனீ கொட்டும்போது அதனுடைய கொடுக்கு மூலம் நச்சுப் பொருட்கள் மனித உடலுள் செலுத்தப்படுகின்றன. ஆகவே உடலில் சிக்கி இருக்கும் கொடுக்கை உடனடியாக எடுத்துவிட வேண்டும். இதனால் நச்சு

**குர்ஆனின் குரலின் விற்பனை முகவராக உங்களையும் ஈடுபடுத்தி முழு உம்மத்தும் ஹிதாயத் பெற வழி செய்யுங்களேன்.**

மேலும் உடலுக்குள் செல்வதைத் தடுத்து விடலாம். மருத்துவ உதவியை உடனே நாட வேண்டும். தேனீகொட்டிவிட்டால் அதற்காக சில பாரம்பரிய வைத்திய முறைகளும் உள்ளன. அவற்றையும் கடை பிடிக்கலாம். ஆனால், மருத்துவ உதவியை நாடுவது பாதுகாப்பானதாகும்.

ஆனால், குளவிகளால் ஒருவரை பலமுறை கொட்ட முடியும். பெண் குளவிகளின் வால் முனைப் பகுதிகளில் விஷக் கொடுக்குகள் இருக்கின்றன.

குளவி கொட்டிய இடத்தை சோப்பினாலும், தண்ணீராலும் கழுவினால் விஷம் நீக்கப்படும். கொட்டிய இடத்தை சுத்தமாகவும், உலர்ந்த நிலையிலும் வைத்து கொண்டால் தொற்றுகள் (infections) ஏற்படுவது குறையும். மருத்துவ உதவியை உடனே நாட வேண்டும்.

ஆகவே மரங்கள், செடிகள் அடர்ந்த பகுதிகளிலும், தோட்டம் துறவு ஆகிய பகுதிகளிலும் செல்லும் போது துணியால் உடலை நன்றாக மூடி கொண்டு செல்வது பாதுகாப்பாக இருக்கும்.

இதைப் போல் மரங்கள், செடிகள் அதிகமான பகுதிகளில் உங்கள் வீடுகள் இருந்தால், ஜன்னல்களுக்கு மெல்லிய கம்பிகள் கொண்ட வலைகள் பொருத்துவது குழந்தைகளுக்கு பாதுகாப்பாகும்.

**துர்நாற்றமில்லா வியர்வை!**

பல சமயங்களில் உடலில் வியர்க்கும் வியர்வை துர்நாற்றம் அடிக்கும் அல்லது வேறு விதமான வாசனை வீசும். ஆனால் வியர்வையில் எந்தவிதமான வாசனையும் கிடையாது. ஆகவே வியர்வை துர்நாற்றத்திற்கு காரணமானது.

நம் உடலில் எக்ரைன் (eccrine) என்றும், அப்போக்ரைன் (apocrine) என்றும் இரண்டு விதமான சுரப்பிகள் இருக்கின்றன. இந்த இரண்டு விதமான சுரப்பிகள் இரண்டு விதமான வியர்வையை சுரக்கின்றன.

உடலில் வெப்பம் அதிகமாகும் போது எக்ரைன் (eccrine) என்ற சுரப்பி ஒருவிதமான திரவத்தை சுரப்பதால் அந்த திரவம் நம் சருமத்தின் மேற்பரப்பில் படர்கிறது. இந்த திரவத்தில் தண்ணீரும், உப்பும் கலந்திருக்கிறது. இந்த திரவம் நம் உடலை குளிர செய்கிறது. இந்த திரவம் ஆவியாகி காற்றில் போய் விடுகிறது. இந்த திரவம் ஒரு வகையான வியர்வையாகும்.

அப்போக்ரைன் (apocrine) என்ற சுரப்பிகளிலிருந்து சுரக்கும் வியர்வை வேறு விதமானது.

கைகளின் அக்குள் பகுதிகளிலும், மார்பகத்திலிருக்கும் காம்புகளிலும், மூக்கில் மேற்பகுதியில் பக்கவாட்டில் விரிந்து மடிந்திருக்கும் பகுதிகளிலும்,

வாய் மணக்க
தாம்பூலம் சிறக்க...!

NIZAM BETELNUT

# நிஜாம் பாக்கு

உரிமையாளர் :

**S.A.சபியுல்லா & கோ**
தபால் பெட்டி எண் : 14,
புதுக்கோட்டை - 622 003. தமிழ்நாடு.

கண்ணிமைகளிலும், காது வெளி புறத்திலிருந்து காது நடு பாகம் வரை செல்லும் குழாயிலும், இன்னும் பிற இடங்களிலும் அப்போக்ரைன் என்ற சுரப்பிகள் அமைந்திருக்கின்றன.

பதட்டம், மன அழுத்தம், பயம், வலி, பாலியல் உணர்வு ஆகியவை ஏற்படும்போது அப்போக்ரைன் என்ற சுரப்பி களிலிருந்து ஒரு விதமான வியர்வை சுரக்கிறது. இந்த வியர்வையில் எந்த விதமான வாசனையோ அல்லது நாற்றமோ இருப்பதில்லை.

இந்த வியர்வையில் தண்ணீர், புரத சத்து (protein) சியாலோமியூசின் (sialomucin) எனப்படும் கார்போஹைட்ரேட் ஆகியவை கலந்திருக்கின்றன.

சியாலோமியூசின் என்பது க்ளைகோபுரோடீன் (glycoprotein) எனப்படும் சர்க்கரை கலந்த இனிப்பான புரத சத்தாகும். நம் உடலில் இருக்கும் பல பாக்டீரியாக்களுக்கு இனிப்பு என்றால் மிகவும் பிடிக்கும்.

ஆகவே இந்த பாக்டீரியாக் கள் சியாலோமியூசின் எனப்படும் சர்க்கரை கலந்த புரத சத்தை இவைகளின் சக்திக்காக பயன் படுத்தி கொள்கின்றன. பாக்டீரியாக்களின் இப்படிப் பட்ட செயல் முறைகளினால் வியர்வையில் துர்நாற்றம் ஏற்படுகிறது.

நம் கைகளின் அக்குள் பகுதிகளிலும் அப்போக்ரைன் என்ற சுரப்பிகள் இருப்பதால், கைகளின் அக்குள் பகுதிகளில் உண்டாகும் வியர்வை துர்நாற்றத்தை வீசுகிறது.

மேலும் அக்குள் பகுதிகளில் இருக்கும் முடிகளில் வியர்வை ஒட்டிக் கொள்வதாலும், பாக்டீரியாக்கள் முடிகளில் அதிகப் படியாக சேர்ந்து விடுவதாலும் வியர்வை துர்நாற்றம் அதிகப்படி யாக வீசுகிறது.

ஆகவே அக்குள் போன்ற வேண்டாத இடங்களில் முடிகளை எடுத்து சுத்தப்படுத்தி கொள்ள வேண்டும். தினமும் குளிக்க வேண்டும். இரவில் படுக்க போகும் முன் உடலில் தண்ணீர் ஊற்றி நன்றாக கழுவி விட்டு தூங்குவது ஆரோக்கியமாகும்.

## மீனை உண்பதனால் அறிவு கூர்மையாகிறது!

பென்சில்வானியா பல்கலைக்கழகம் (University of Pennsylvania) நடத்திய மருத்துவ ஆராய்ச்சியில் மீனை உண்பத னால் மாணவ, மாணவிகளுக்கு அறிவு கூர்மை அதிகமாகும் என்று கண்டறிந்துள்ளார்கள்.

மீன் குழந்தைகளுக்கு நல்ல உறக்கத்தை தருகிறது. அறிவை யும் கூர்மையாக்குகிறது என்று பென்சில்வானியா நாட்டிலுள்ள பொது மக்களின் ஆரோக்கிய

மையத்தின் (Penn's Centre for Public Health Initiatives) நிர்வாக இயக்குனர் பின்டோ - மார்ட்டின் கூறியிருக்கிறார்.

இந்த ஆராய்ச்சியில் தலைமை வகித்த பென்சில்வானியா பல்கலைக்கழக நோய்த் தொற்றியல் மருத்துவ துறை பேராசிரியை (Professor of epidemiology in Penn Medicine) வயோலா மாகில்னெஸ் இரண்டு வயது முதல் குழந்தைகளுக்கு வாரம் ஒரு முறையாவது மீனை உண்பதற்கு கொடுத்தால் குழந்தைகளின் அறிவு வளர்ச்சி அபரிமிதமாக இருக்கும் என்று அறிவுரை கூறியிருக்கிறார்.

**பாடங்களை சப்தம் போட்டு படிக்க வேண்டும்!**

படிக்கின்ற பாடங்கள் மனதில் நன்றாக பதிய வேண்டும் என்றால் அவற்றை சப்தம் போட்டு படிக்க வேண்டும் என்று வாட்டர்லூ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த உளவியல் துறையின் தலைவர் காலின் மெக்லியாட் என்பவர் கூறுகின்றார்.

சப்தம் போட்டு படிக்கின்ற போது இரண்டு விதமான செயல்பாடுகள் நடைபெறுகின்றன. ஒன்று வார்த்தைகளை வாயால் சொல்வது. இரண்டாவதாக அந்த வார்த்தைகளை காதால் கேட்பது. இதனால் படிக்கின்ற பாடங்கள் ஆழமாக மனதில் பதிகின்றன.

## மருத்துவம்

* தேன், வெங்காயச்சாறு ஆகியவற்றை தண்ணீரில் கலந்து குடித்து வந்தால் இரவில் நன்கு தூக்கம் வரும்.
* பலாப்பழத்துடன் சிறிது கருப்பட்டி சேர்த்து சாப்பிட்டால் உடல் அசதி நீங்கும்.
* உங்கள் உடல்நிலை ஆரோக்கியமாக இருக்க வேண்டுமா? தினமும் அரை மணி நேரம் சைக்கிள் ஓட்டிப் பாருங்களேன்!
* தினசரி இரண்டு பேரீத்தம்பழம் சாப்பிட்டு, அத்துடன் பசும்பாலும் குடித்து வந்தால் குளுக்கோஸ் சத்து நேரடியாக உடலுக்கு கிடைக்கும்.
* நல்லெண்ணெயில் தும்பை பூவை போட்டு காய்ச்சி தலையில் தேய்த்து குளித்தால் தலைபாரம் குறையும்.
* நெல்லிக்காயை தேனில் ஊற வைத்துச் சாப்பிட்டு வந்தால் நுரையீரல் பலப்படும்.

**தருபவர் : தென்காசி மஸ்ஊது**

# வரலாற்றில் ஓர் ஏடு

**"தாவூதையும், சுலைமானையும் [எண்ணிப் பார்ப்பீராக] ஒரு சமூகத்தாரின் ஆடுகள் [மற்றொரு சமூகத்தாரின்] விளை நிலத்தில் இரவில் மேய்ந்த [வழக்கின்] போது அவ்விருவரும் தீர்ப்பளித்தனர். நாம் அவர்களின் தீர்ப்பை கவனித்துக் கொண்டிருந்தோம்"** - அல்குர்ஆன் (21 : 78)

வரலாற்றில் ஒரு நாள் : -

ஹள்ரத் மஸ்ரூக் (ரஹ்) அவர்கள் கூறியதாவது :

இதில் ஆடுகள் மேய்ந்த விளைநிலம் என்பது ஒரு திராட்சை தோட்டமாகும். அதனுள் புகுந்த ஆடுகள் எதையும் விட்டு வைக்காமல் அனைத்தையும் தின்று தீர்த்து விட்டன. பாதிக்கப்பட்டவர்கள் ஹள்ரத் நபி தாவூத் (அலை) அவர்களிடம் வழக்கை கொண்டு வந்தார்கள். அன்னார் ஆடுகளை அவர்களுக்கு வழங்கித் தீர்ப்பளித்தார்கள்.

அப்போது ஹள்ரத் நபி சுலைமான் (அலை) அவர்கள் இல்லை; ஆடுகளைப் பிடித்து தோட்ட உரிமையாளர்களிடம் கொடுக்க வேண்டும். அவர்கள் ஆட்டிலிருந்து பால் மற்றும் வேறுவகைப் பயன் களை அடைந்து கொள்வார்கள். அத்தோட்டம் ஆடுகளின் உரிமை யாளரிடம் அளிக்கப்பட வேண்டும். அவர்கள் தோட்டத்தை செப்பனிட வேண்டும்; ஆடுகள் மேய்ந்த இரவில் இருந்ததைப் போன்று தோட்டம் ஆகும் வரை அதை அவர்கள் பராமரிக்க வேண்டும்.

அதன்பின்னர், ஆடுகளை அதன் உரிமையாளரிடமும், தோட்டத்தை அதன் உரிமையாளர்களிடமும் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று தீர்ப்பளித்தார்கள்.

அடுத்த வசனத்தில் (21 : 79) **"நாம் அதனை சுலைமானுக்கு விளங்க வைத்தோம்"** என்று உயர்ந்தோன் அல்லாஹ் குறிப்பிடுகின்றான்.

ஆதாரம் : தஃப்ஸீர் இப்னு கஸீர்
தொகுதி 5 / பக்கம் 899 & 900

தருபவர் : **ப.பீர்இலாஹி** B.Sc., உத்தமபாளையம்.

# வரலாற்றில் ஒரு நாள்!

ஹிஜ்ரி 557ஆம் ஆண்டு அப்பாஸிய கிலாபத் பலஹீனமடைந்திருந்த காலக்கட்டம் உலகில் கிருஸ்தவ பலம் ஓங்கியிருந்தது. இன்றைய காலம் போலவே அன்றும் முஸ்லிம் நாடுகள் பிரிந்து கிடந்தது.

அப்போது கிருஸ்துவர்கள் மதீனாவுக்கு இரண்டு மனிதர்களை அனுப்பி வைத்தனர்.

இவர்களின் நோக்கம் பூமானின் உடலை தோண்டியெடுத்து அதை கிருஸ்துவர்களிடம் ஒப்படைப்பது.

அவ்விருவரும் பெருமானார் (ஸல்) அவர்களின் முபாரக்கான அறைக்கு அருகே தங்கினர். இவர்கள் இறையச்சமுடையவராகவும், சீர்திருத்தவாதிகளாகவும், ஏழைகளுக்கு உதவி செய்பவர்களாகவும் தங்களை காட்டிக் கொள்வதுடன், தவறாமல் ஜன்னத்துல் பகீஃயான முஸ்லிம்களின் பொது கப்ருஸ்தானுக்கும், பெருமானார் (ஸல்) அவர்களின் ரவ்ளா ஷரீபுக்கும் ஜியாரத் செய்து வந்தனர்.

அதன் மூலம் தங்களின் திட்டத்தை நிறைவேற்ற நோட்டமிட்டனர்.

இவர்களின் வெளித்தோற்றத்தைப்பார்த்து மக்களும் இவர்களை நம்பினர். இவர்கள் தங்களின் திட்டத்தை செயல்படுத்தும் வேலையில் இறங்கினர். இவர்கள் தங்கிருந்த வீட்டில் பெரும் குழிதோண்டி அதன் வழியாக நாயகத்தின் ரவ்ளாவை அடைய முயற்சித்தனர்.

கொஞ்சம் கொஞ்சமாக நீண்டகாலம் யாருக்கும் சந்தேகம் வராமல் தோண்டி இறுதியில் நபி (ஸல்) அவர்களின் கப்ரை அடைந்து விட்டனர். இது ஒரு புறமிருக்க -

மறுபக்கத்தில் சிரியாவில் முஸ்லிம் அரசரான நூருத்தீன் சன்கி (ரஹ்) அவர்கள் தங்களின் கனவில் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை கண்டார்கள்.

அதில் நபி (ஸல்) அவர்கள் அந்த இரு திருடர்களின் பக்கம் சுட்டிக்காட்டி இவர்களிடமிருந்து தன் உடலை பாதுகாக்கச் சொல்லி உத்தரவிட்டார்கள்.

திடுக்கிட்டு விழித்த அரசர் -

ஒளு செய்து தொழுதுவிட்டு மீண்டும் தூங்கினார்கள். அப்போதும் அதே கனவை கண்டார்கள். இப்படி மூன்று தடவை கண்டு, இக்கனவில் ஏதோ உண்மை இருப்பதாக அறிந்து, தன்னுடைய அமைச்சர் ஜமாலுத்தீன் அவர்களிடம் தான் கண்ட கனவை பற்றி கூறினார்கள்.

அதைக்கேட்ட அமைச்சர் ஜமாலுத்தீன் அவர்கள் "கலீபா அவர்களே! மதீனாவில் ஏதோ ஆபத்து சூழ்ந்திருப்பதாக தெரிகிறது. எனவே தாங்கள் இரகசிய பயணமாக யாரிடமும் கூறாமல் உடனடியாக மதீனா புறப்படுங்கள்" என்றார்.

இருபது பேர்களுடன் நிறைய பொருட்களுடன் அரசர் மதீனா வந்து சேர்ந்தார். மஸ்ஜித் நபவியில் நுழைந்து, ரவ்ளா ஷரீபில் தொழுது விட்டு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கும், அன்னாரின் அருமை தோழர்களான ஹள்ரத் அபூபக்கர் (ரளி), ஹள்ரத் உமர் (ரளி) ஆகியோர்களுக்கும் ஸலாம் உரைத்துவிட்டு அங்கேயே அமர்ந்துவிட்டார்கள்.

இப்போது என்ன செய்வது? எப்படி அவ்விருவரை கண்டுபிடிப்பது?

எதுவும் தெரியவில்லை. அப்போது அமைச்சர் அரசரிடம் "கனவில் நீங்கள் கண்ட அவ்விருவரை நேரில் கண்டால் அடையாளம் கண்டு கொள்வீர்களா?" என கேட்க "ஆம்!" என்று அரசர் பதில் கூறினார்.

உடனே அரசர் தன்னுடன் நிறைய பொருள்களை கொண்டு வந்துள்ளார். ஆகவே தாங்கள் வந்து அதை பெற்றுச் செல்லுங்கள் என மக்களுக்கு அமைச்சர் அறிவிப்புச் செய்தார்.

மக்கள் எல்லோரும் வந்தனர். ஆனால் அரசர் எதிர்பார்த்த அவ்விருவர் வரவில்லை.

"வேறுயாரும் மீதமிருக்கிறார்களா?" என கேட்க, மக்கள் இல்லை என்று கூறினர்.

"நன்றாக யோசித்தச் சொல்லுங்கள்" என அரசர் சொன்னபோது-

"மேற்குலகைச் சேர்ந்த இரு ஸாலிஹீன்கள் வரவில்லை. அவர்கள் யாரிடமும் எதுவும் தேவையாக மாட்டார்கள்" என்றபோது அரசர் சந்தோஷப்பட்டார்.

உடனே அவ்விருவரை தன்னிடம் அழைத்துவரும்படி உத்தர விட்டார். அவ்விருவரும் வந்தபோது நபி (ஸல்) அவர்கள் கனவில் சுட்டிக்காட்டிய அதே இருவர்கள்தான்.

"நீங்கள் எங்கிருந்து வந்துள்ளீர்கள்?" என்று அரசர் கேட்டார்.

"நாங்கள் மேற்குலக நாடுகளிலிருந்து ஹஜ்ஜுக்கு வந்தோம். பின்னர் மதீனா வந்த நாங்கள் இவ்வாண்டு முழுவதும் நாயகம் (ஸல்) அவர்களின் அருகில் தங்கிவிடலாம் என்று முடிவு செய்து தங்குகிறோம்" என்றனர்.

**குர்ஆனின் குரல் அலுவலக அலைபேசி எண்:**
**94420 565547**

"இவர்கள் இருவரின் வீடு எங்கே இருக்கிறது?" என அரசர் கேட்க, மக்கள் அதைக் காட்டினர். வீட்டிற்குள் நுழைந்து பார்த்த போது உள்ளே நிறைய பொருட்கள். இரண்டு குர்ஆன், நிறைய நூற்கள் இருந்தன.

அங்கே ஓரிடத்தில் பாய் விரிக்கப்பட்டிருந்தது. அதற்கு கீழே ஒரு பலகை போடப்பட்டிருந்தது. அந்த இடத்தில் அரசர் அவர்களுக்கு சந்தேகம் வரவே, அதை எடுத்துப்பார்த்தபோது அதிர்ச்சியடைந்தார்.

காரணம் பலகைக்கு கீழே நபி (ஸல்) அவர்களின் அறையின் பக்கமாக ஒரு பெரிய பள்ளம் தோண்டப்பட்டிருந்தது. அதைக் கண்ட மக்களும் கடும் அதிர்ச்சியுற்றனர். பின்னர் அவ்விருவரையும் கொண்டு வந்து கடுமையாக விசாரிக்கப்பட்டபோது -

தாங்கள் கிருஸ்துவர்கள் என்றும், மேற்கத்திய ஹாஜிகளுடன் தங்களை கிருஸ்துவர்கள் அதிகமான பணம் கொடுத்து அனுப்பி வைத்தனர் எனவும், முஹம்மது (ஸல்) அவர்கள் உடலை திருடி அங்கு கொண்டு செல்ல வேண்டும் என தங்களுக்கு உத்தரவிடப்பட்டதாகவும் கூறினர்.

அதை செவியுற்ற அரசர் நூருத்தீன் (ரஹ்) அவர்கள் கடுமையாக அழுதார். பின்னர் அவ்விருவரின் தலையை நாயகம் (ஸல்) அவர்களின் அறைக்கு அருகே துண்டிக்கச் சொல்லி உத்தரவிட்டார்கள். அவ்வாறே நிறைவேற்றப்பட்டது.

பின்பு அரசரின் உத்தரவுக்கிணங்க நபி (ஸல்) அவர்களின் புனித ரவ்ளாவை சுற்றி பள்ளமாக தோண்டி சுற்றிலும் ஈயத்தை காய்ச்சி ஊற்றி ஒரு பாதுகாப்புச் சுவர் அமைத்தனர்.

அல்லாஹுதஆலா அரசர் சுல்தான் நூருத்தீன் (ரஹ்) அவர்களின் மண்ணறையை வெளிச்சமாக்கி வைப்பானாக.

அதே போல் இன்றும் யூதர்களின் கை பொம்மைகள் நபி (ஸல்) அவர்களின் உடலை இடம் மாற்றுவதற்கும், இடிப்பதற்கும் துடிக்கிறார்கள். நிச்சயம் அல்லாஹ் அவர்களை நாசப்படுத்தி விடுவான்.

கண்மணி நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள் :–

" 'சுப்ஹானல்லாஹ் வபி ஹம்திஹி' (அல்லாஹ்வைப் போற்றி புகழ்ந்து துதிக்கிறேன்) என்று யார் ஒரு நாளில் நூறு முறை சொல்வாரோ அவரின் தவறுகள் அழிக்கப்பட்டு விடுகின்றன. அவை கடலின் நுரை போன்று (மிகுதியாக) இருந்தாலும் சரியே!"

அறிவிப்பாளர் : ஹள்ரத் அபூஹுரைரா (ரளி) அவர்கள் (புகாரி 6405)

# நாயகமே! எங்கள் நாயகமே!

**அத்தாவுல்லாஹ்**

புகழ்வார் அமரர்களும்
புகழும் உம்பெயரைப்
புகழ்ந்து ஸலாம் சொல்லிப்
புகழ்ந்தேத்தும் நாயகமே....!

புகழுக் குரியவனே
புகழ்ந்து போற்றியபின்
புகழுக் குறைவுண்டோ
புகழான நாயகமே...!

புகழும் புகழ் விளக்கும்
புகழ்வோன் புகழ்ந்துரைக்கும்
புகழைப் புகழுவதால்
புகழன்றோ நாயகமே...!

புகழ்வார் பயன்தெரிவார்
புகழும் நயந்தெரிவார்
புகலுமிரு வாழ்க்கையினைப்
புகழாக்கும் நாயகமே...!

புகழின் வழி நில்லா
பொல்லா மனிதரையும்
புகழும்படி சமைத்த
பூமானே! நாயகமே...!

புகழுக் குரியவனால்
புகழப் பட்டவராம்
புகழும் புகழ்பெறுமே
புகழ் பெயரால் நாயகமே...!

புகழும் தலைமுறையின்
போற்றுகிற இபுறாஹீம்
புகழும் பிரார்த்தனையின்
பதிவான நாயகமே....!

மண்ணொளியும் விண்ணொளியும்
மறைவாகக் கடன்வாங்கும்
பொன்னொளிரும் மேனியரே
பூமானே நாயகமே...!

கண்ணிமைகள் கைதொட்டுக்
கனிந்துவரும் ஸலவாத்தின்
கண்மணியே... கண்ணியமே
காசிம் நபி நாயகமே...!

சொல்லவொரு மொழியில்லா
சுத்தமிகு சத்தியத்தின்
நல்லவடிவானதொரு
நற்குணத்து நாயகமே...!

கம்பம் மவ்லானா
பி.எம். பீர் முஹம்மது பாகவி ஹள்ரத்தின்

# அண்ணல் நபிகளாரின் அழகிய வரலாறு

கம்பம் மவ்லானா பி.எம்.பீர்முஹம்மது பாகவி ஹள்ரத் அவர்கள் எழுதிய நபி (ஸல்) அவர்களின் அழகிய வரலாற்றை கூறும் நூலின் ஒரு பகுதி, ஏற்கனவே நம் குர்ஆனின் குரலில் வெளியாகி வாசக நேயர்களின் பரவலான பாராட்டைப் பெற்றது. இந்த இதழிலிருந்து நபி (ஸல்) அவர்களின் வரலாற்றை கூறும் மற்ற பகுதி இன்ஷா அல்லாஹ் தொடர்ந்து இடம் பெறும்.

**இறைத்தூதரின் திருப்பாதத்தில் ஒரு சிறு முள் தைப்பதையும் பொறுக்கேன்!**

"குபையே! உனது கொள்கையின் உறுதியை மெச்சுகிறேன். பரவாயில்லை. நீ இஸ்லாத்தைத் துறக்க வேண்டாம். நான் நிற்கும் இந்தக் கழு மரத்தில் அந்த முஹம்மது நின்றால் நான் மகிழ்வேன்" என்று மட்டும் சொல். உன்னை விட்டு விடுகின்றோம் என்றார் தலைவர்.

"என்ன சொல்கிறீர்? நான் நின்று கொண்டிருக்கும் இந்த இடத்தில்எங்கள் உயிரினும்இனிய உத்தமரா? நினைக்கவே நெஞ்சம் கனக்கிறதே! எங்கள் உயிர்... உடமை... பெற்றோர்... பிள்ளை... மனைவி... உலகம் அனைத்தைக் காட்டிலும் நாங்கள் அதிகமாக நேசிக்கும் அண்ணலின் பாதத்தில் ஒரு சின்ன முள் தைப்பதையும் என்னால் பொறுக்க முடியாது. அப்படி "முள்" எதுவும் குத்தி விட்டால் அந்த முள்ளை எடுப்பதற்காக என் உயிரையும் கொடுக்கத் தயங்க மாட்டேன்" குபைப் (ரளி) உணர்ச்சிப் பிழம்பாய் மாறினார்.

இறக்கப் போகும் இவர், நமது எதிரியாம் அந்த முஹம்மத்தை பற்றி நம் முன்னிலையில் இப்படி சிறப்பாகப் பேசுகின்றாரே... என எண்ணி, பொறுக்க முடியாத அந்தப் புல்லர்கள் வெறியின் சூறாவளியாய் ஆயினர். "குபையே... இனி உன்னை நாம் சும்மா விடப் போவதில்லை. எங்கள் பொறுமையைச் சோதித்து விட்டாய்! எங்களின் கோபத்தைக் கிளறிவிட்டாய்! உன்னைக் கடும் சித்ரவதை

செய்து இப்போதே கொல்லப் போகிறோம்; உன் உன்னத உயிர் உன்னை விட்டும் செல்லப் போகின்றது."

"உயிர் இனியதுதான்.. அரியது தான்... போனால் வராதுதான். ஆனால் அது இறைவனுக்காக - இறைநெறியை ஏற்றதற்காக - இறைப்பாதையில் செல்வது சாதாரணமானது" என்றார் குபைப் (ரளி).

"வீரர்களே! அதிகப் பிரசங்கித் தனமாக நம்மை எதிர்த்துப் பேசும் இந்தத் திமிர் பிடித்தவனை இனி யும் விட்டு வைக்காதீர்கள். கை களையும், கால்களையும், உடலை யும் இன்னும் நன்றாக இறுகப் பிணைத்துக் கட்டுங்கள். நான் சொல்லும் விதத்தில் இவனைக் கொல்லுங்கள்" என்று குதித்துக் குமுறினார் அபூஸுஃப்யான்.

சுற்றிலும் நாற்பது அம்பு வீரர்கள் வில்லில் அம்பேற்றி குபைபைக் குறி பார்த்திருந்து கொண்டிருந்தனர். பத்ருப்போரில் உங்கள் தந்தையரை வெட்டிக் கொன்றவர் இவர்தான் என அவர் களுக்கு வெறியூட்டப்பட்டி ருந்தது. தலைவனின் வெறித்தன கட்டளை புறப்பட்ட மாத்திரத் தில் அத்தனை அம்பு வீரர்களும் ஒரே நேரத்தில் குபைப் (ரளி) அவர்களின் மீது வில்லை இழுத்து அம்புகளைப் பாய்ச்சினர்.

இறைநம்பிக்கை - இறை நெறியில் உரமேறி இருந்த அறிஞர் குபைப் (ரளி) அவர்களின் தூய உடலை, விரைந்து வந்த அனைத்து அம்புகளும் துளைத்துச் சல்லடையாக்கின. இரத்தம் பீறிட்டு வெளிப்பட்டது. இறக்கப் போகின்றோம் எனும் அச்சம் இதயத் துள் துளியும் இல்லாததால் குருதி உறையாது பொங்கி வழிந்தது.

"லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் வணங்குதற்குரிய இறைவன் அல்லாஹ் ஒருவனைத் தவிர வேறு யாருமில்லை. நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர் கள் இறைவனின் திருத்தூதராக இருக்கின்றார்கள்" எனும் இறை நம்பிக்கையின் எழில் வாசகத்தை (கலிமா) மொழிந்து பெருமித முற்றார். அந்நிலையிலும் அவரால் எப்படித்தான் நிலை குலையாமல் இருக்க முடிந்ததோ! இறைவனே அறிவான்.

குத்தீட்டிகளை வைத்துக் கொண்டிருந்த சிறுவர்களும் தடியர்களும் குபைபின் உடலில் கண்மண் தெரியாமல் கண்டபடி குத்தத் துவங்கினர். அவர்களின் வெறியும் ஆவேசமும் எல்லை மீறியிருந்தன. காட்டு ஓநாய் களிடம் மாட்டிக் கொண்ட கவின் மிகு மானைப்போல குபைப் ஆனார். கடித்துக்குதறிய வெறி நாய்களின் கோரத் தாக்குதலுக்கு இரை யாகிக் கொண்டிருந்த அப்பெரு மகன் சிறுகச் சிறுக கீழே சரிந்தார்.

பாலையில் நடக்கும் இந்தப் -
பயங்கரம் தன்னைக் கண்டே
காலமே உருகி நின்ற -
காட்சியும் என்னே நெஞ்சே!

கவித்துவம் வாய்ந்திட்ட அந்த இறைநெறி அழைப்பாளர், உயிர் பிரிந்து கொண்டிக்கும்போது இவ்வாறு செய்யுள் செய்தார்.

"நான் மடிகின்றேன்.. இதற் காக நான் வருந்தவில்லை. இதைப் பொருட்படுத்தவு மில்லை. ஏனெனில் நான் உண்மை இறைநெறியை ஏற்ற முஸ்லிமாய் இறக்கின்றேன்! நான் எத்தனை துண்டுகளாக வெட்டப்பட்டாலும் அதற்காக நான் கவலைப்படமாட்டேன். ஏனெனில், எல்லாம் வல்ல அல்லாஹ்வுக்காக வல்லவா நான் வெட்டப்படுகின்றேன்" என உள்ளம் உருகப் பாடினார். பாகவியார் செஞ்சொல்லால் இப்படி வடிக்கின்றார்

நான் ஒரு முஸ்லிம் என்ற -
நலத்தினில் மாண்டால் அந்தப்
பாண்மையே போதும் என்று -
பாடிடலானார் நெஞ்சே!

கொன்றாலும் என்னை நீவீர் -
கொடுமைகள் செய்தபோதும்
என்றும் நான் மாறேன் என்றே -
எடுத்திசைத்தாரே நெஞ்சே!

மனத்துளே பதிந்துவிட்ட -
மாசிலாக் கொள்கை தன்னைக்
கணமும் நான் மாற்றேன் என்றே -
கவிதைதான் செய்தார் நெஞ்சே!

என்முனை இடமில்லாமல் -
எதிரிகள் துளைக்கும் போதும்
உள்ளொளி குபைபார் ஆங்கே -
உரைத்ததைக் கேளாய் நெஞ்சே!

ஒன்றேதான் இறைவன்; அந்த -
ஒருவனின் தூதே அண்ணல்
என்றவர் சொல்லிச் சேர்ந்த -
ஏற்றமும் என்னே நெஞ்சே!

இறக்கும் இறுதிநேரம். புனிதமிகு இறையாலயமாம் கஃபாவை நோக்கிய கிப்லா திசையின் பக்கம் தனது முகத்தை குபைப் (ரளி) ஆக்கினார். இறுதி வேளையிலும் இறைநெறியைப் பின்பற்றித் தொழும் திசைக்கு முக்கியத்துவம் தந்த அவரது எண்ணத்தைப் பொறுக்க மாட்டாத அக்கயவர்கள் அவரது முகத்தை வேற்றுத்திசையின் பக்கம் திருப்பினர். அப்போது அவர் "கிழக்கு மேற்கு யாவும் அல்லாஹ்வுக்கே உரியன. எனவே நீங்கள் எங்குத் திருப்பி னாலும் அங்கு அல்லாஹ்வின் திசை இருக்கின்றது. நிச்சயமாக அல்லாஹ் மிக விசாலமானவன். மிக அறிந்தவன்" (2 : 115) எனும் திருக்குர்ஆனின் திரு வசனத்தை ஓதினார். "இறைவா! நின் திருத்தூதர் எங்களின் அருமை நபி அண்ணல் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு எனது இறுதி ஸலாமை நல் வாழ்த்தை - சாந்தியைச் சேர்த்து விடு" எனப் பிரார்த்தித்தார். கலிமா மொழிந்த நிலையில் அவரது உயிர் பிரிந்தது.

பழிவாங்கும் வெறி அடங்கா அந்தப் பாவிகள் அதற்குப் பிறகும் உயிரற்ற அந்த உடலைப் படுத்திய பாட்டை, செய்திட்ட கோரத்தை எழுத முடியவில்லை.

குபைப் (ரளி) அவர்களின் இறுதி விருப்பத்தை ஏற்றிட்ட இறைவன் வானோர் தலைவர் ஜிப்ரயீல் வழி மதீனாவிலிருந்த இறுதித்தூதருக்கு ஸலாம் சேர்த்தான். உள்ளம் உருக பதிலளித்த உத்தம நபிகளார் குபைபின் மரணம் குறித்து தோழர்களுக்குத் தெரிவித்தார்கள்.

## அநியாயமாகச் செய்யப்பட்ட அராஜகப் படுகொலைகள்

இறைப்பாதையில் குபைப் (ரளி) அவர்கள் கொல்லப்பட்ட முறையானது, வரலாற்றில் இதய மற்றவர்களால் செய்யப்பட்ட மிகப் பெரும் கொடூரமாகும். சிறைப்பிடிக்கப்பட்டிருந்தவரான ஸைது (ரளி) அவர்களையும் அந்தப் பாவிகள் இவ்வாறே கொல்லத் துணிந்தனர். இறுதி விருப்பமாக இரண்டு ரக்அத் தொழுது முடித்த இவரை கழுமரத்தில் ஏற்றிக் கட்டி வைத்துக் கொன்றனர். எந்தெந்த வகையில் சித்ரவதை செய்ய முடியுமோ அந்தந்த வகையில் எல்லாம் துன்புறுத்தி இறைநெறியை விடுமாறு வற்புறுத்தினர்.

"ஏற்றிட்ட கொள்கையில் கடுகளவும் மாற்றமில்லை" எனக் கூறி, இறுதிவரை சாதித்து இறைக் கலிமா கூறி இறப்பெய்தினார் அந்த இலட்சியவாதி. இருவரின் கொள்கை உறுதி எதைப் பற்றியும் நினையாமை - இறப்புக்கு அஞ்சாது இறைவன் மீதும் இறைத் தூதர் மீதும் கொண்டிருந்த ஆழமான அன்பு - அழியாப் பாசம் கண்டு அந்த எதிரிகளே வியந்தனர். வியப்புடன் பேசிக் கொண்டனர். அடேயப்பா! அந்த முஹம்மதின் மீது அவர்களின் தோழர்கள் வைத்திருக்கும் அன்பும் பாசமும் ஒரு தந்தை கூட தனது மகனின் மீது வைக்க முடியாததாகும்" என்றார் குறைஷித் தலைவர்களின் ஒருவரான அக்னஸ் பின் ஷரீக் என்பவர்.

இன்றைக்கு உலகம் முழுவதிலும் இஸ்லாம் இயம்பும் இனிய இறைநெறி பரவி இருக்கின்றது. வளர்ந்து வருகின்றது. அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் அதன் வளர்ச்சி அபரிமிதமானது. அமெரிக்காவில் அதிகமாகப் பரவி வளர்ந்து வரும் சமயமாக இஸ்லாம் இருக்கின்றது என சென்ற நோன்புப் பெருநாள் முஸ்லிம்களுடனான சந்திப்புப் பெருவிழாவில் அமெரிக்க அதிபர் பில்கிளிண்டன் மனம் திறந்து பாராட்டிப் பேசி இருக்கின்றார்.

இறைநெறியாம் இஸ்லாம் அறிவுக்கும் சிந்தனைக்கும் ஏற்றதாக மட்டுமல்ல. நன்னெறி கட்டுப்பாடு - மனிதநேயம் - ஒழுக்கவியல் - மறுமைக் கோட்பாடு போன்ற வாழ்வியலின் அனைத்து அம்சங்களுக்கும் தெளிவான வழிகாட்டுகின்றது. அமைதி - நிம்மதி - நிறைவான மகிழ்ச்சியைத் தருகின்றது. இறைநெறி மரம் தரும் இந்த

கனிகளும் நிழலும் இன்றைக்கு நேற்றுக் கிடைக்கவில்லை. பன்னெடுங்காலமாக இவ்வுல கிற்கு கிடைத்துக் கொண்டே வருகிறது. பயன்படுத்துவோர் பயனடைகின்றனர். கனிகளின் சுவையையும் நிழலின் அருமை யையும் அனுபவித்துத் தெரி கின்றனர். உணர்கின்றனர்.

முதல் மனிதரும் மனுஷி யும் இந்த பூமியில் தடம் பதித்த காலம் தொடுத்தே இறைநெறி அவர்களுக்கு தரப்பட்டுவிட்டது. மனிதர்களின் முன்னோடி களான - நம் தாய் தந்தைக்குத் தரப்பட்ட அடிப்படை இறை நெறி வழிகாட்டுதல், பின்னர் அவ்வக்காலத்தின் தேவை களுக்கேற்ப எல்லாம் வல்ல இறைவனால் அறிவிக்கப்பட்டு தூதர்கள் (நபி ரஸூல்) வழி விரிவாக்கம் பெற்று வந்தது. அவ்வாறு வந்த திருத்தூதர் களின் தொடரில் இறுதியானவரா கவும் இறைநெறியை நிறை வாக்க வந்தவருமாகத் திகழ்பவர் தான் அண்ணல் நபிகள் நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள்.

எந்த ஓர் ஆரம்பத்திற்கும் முடிவு இருக்கவேண்டுமல்லவா? எந்த ஒரு தொடக்கத்திற்கும் நிறைவு இருக்க வேண்டு மல்லவா? இது உலக நியதியும், மரபும் அல்லவா? தூதர்களின் நெடிய தொடரின் முடிவாகவும், முத்திரையாகவும் முஹம்மது


நம்பகமான சேவையில்
நம்பிக்கையான மருந்தகம்

# பாவா மெடிக்கல்ஸ்

294/1, சாலை தெரு,
இராமநாதபுரம் - 623 501.

போன் : 04567–224500, 228500
செல் : 9443255158

நபி (ஸல்) அவர்கள் திகழ்கின்றார் கள். இனி வேறெந்த தூதரும் தேவையில்லாத அளவுக்கு அவர்களின் அழைப்புப்பணி - அறவுரை - முன்மாதிரி - சேவை - செயல்பாடுகள் அமைந்திருக் கின்றன. அனைத்துக்கும் வேரா கவும், நீராகவும், உரமாகவும் அண்ணலின் வாழ்வும் அவர்களது அன்புத் தோழர்களின் தியாக மும் அர்ப்பணிப்பும் திகழ்கின்றன.

நாட்டுப்புறத்து நாடோடிக் கூட்டத் தலைவரான குஸைமை என்பவரின் மகளார் ஸைனப் (ரளி) அவர்கள் பத்ருப் போரில் தனது கணவர் உபைதா (ரளி) அவர்களை இழந்து விதவை யாகி இருந்தார்கள். இயல் பாகவே ஏழை எளியோர் மீது மிகுந்த இரக்கமும் பரிவும் கொண்டு வாரி வாரி வழங்கி உதவிடும் பண்பாளரான அவர் ஏழைகளின் தாய் (உம்முல் மஸாகீன்) எனப் போற்றப்பட்டார். ஈகையுள்ளங் கொண்ட அத் தூயவரை மனமுவந்து இறைத் தூதர் மணந்து புதுவாழ்வைத் தந்தார்கள். அவரது கோத்திரத் தார் இறைநெறியை ஏற்றிடும் வாய்ப்பு உருவானது.

இவரது குலத்தைச் சார்ந்த பெரியவர், தலைவர் அபூபரா என்பவர் இறைத்தூதரிடம் வந்து "தனது கிளையினருக்கு இஸ் லாத்தை எடுத்துரைக்க சிலரை அனுப்புமாறு கோரினார். உங்கள் பகுதி அச்சுறுத்தலாகவும், பாது காப்பற்றதாகவும் இருக்கின்றதே! எவ்வாறு என் தோழர்களை அனுப்புவேன்? என அண்ணல் வினவினார்கள். கோத்திரத் தலைவன் நான் இருக்கின்றேன். என்னை மீறி எதுவும் நடக்கப் போவதில்லை. உங்கள் தோழர் களின் உயிருக்கும் உடமைக்கும் நான் பொறுப்பேற்றுக் கொள் கிறேன்" என உறுதி தந்தார். அண்ணலின் மனம் அமைதி யடையவில்லை. ஏனெனில், இவரது பகுதி எப்போதுமே மதீனாவுக்கு மிரட்டலாக அச்சுறுத்தலாக இருந்தது.

அழைப்புப் பணிக்கு அறிஞர்கள் கேட்கின்றாரே!.. அனுப்பாமலிருப்பது சரியல்லவே... என்றெண்ணிய அண்ணலார் இறையச்சம் - மார்க்க அறிவு இனிய பண்டு - திறன்மிகு சொல்லாற்றல் மிக்க நாற்பது தோழர்களை ஹள்ரத் முன்திர் பின் அம்ரு (ரளி) அவர்களின் தலைமையில் (அமீர்) அனுப்பினார்கள்.

அபூபராவுக்கு அவரது கோத்திரத்தில் பெரும் எதிர்ப்பு கிளம்பி இருந்தது. அவரது மருமகனே அவருக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்தார். தலைமைத் துவத்தைப் பறித்திட முனைப் புடன் செயல்பட்டு வந்தார். இயல்பாகவே பதவி மோகம் வெறிகொண்டிருந்த அவன் இறைத்தூதர் கடிதத்துடன் அனுப்பிய தூதர் ஒருவரைக்

காரணமில்லாமல் கொன்று விட்டான். தூதரைக் கொல்லுதல் அக்காலத்திலும் கொடுமை யாக-பெரும் அநீதியாகவே கருதப் பட்டது. எனினும், பகைமைத் தீயில் எரிந்து கொண்டிருந்த செல்வாக்கு மிக்க அந்தப் பாவி அதுபற்றியெல்லாம் கவனத்தில் கொள்ளவில்லை. வந்து கொண்டி ருக்கும் முஹம்மதின் தோழர் களைக் கொன்று விடுமாறு பனி ஆமீர்களான தனது கோத்திரத் தாருக்கு உத்தரவிட்டான். "தம் முதுபெரும் தலைவர் அபூபராவால் அபயமளிக்கப்பட்ட அவர்களைக் கொல்லப் போவதில்லை" என அக்கோத்திரத்தார் மறுத்து விட்டனர்.

ஏமாற்றமுற்ற அந்தக் கொலைக்காரப் பாவி முஸ்லிம் களை எதிரியாகக் கருதி, அவர் களுக்கு எதிராக பகைமைத் தீ வளர்த்து சதித்திட்டங்கள் தீட்டி விரோத குரோதங்களில் ஈடு பட்டு வந்த ஸுலைம் கோத்திரத் தாரை வெறியூட்டி ஆசை காட்டி தூண்டி விட்டான். இறைநெறி அழைப்புக்கென நெடுந்தூரம் பயணப்பட்டு மதீனாவிலிருந்து வந்து 'பிஃர்மஊனா' எனும் பள்ளத் தாக்கில் இளைப்பாறி ஓய் வெடுத்துக் கொண்டிருந்தனர். பக்தியும் பண்பாடும் பகுத்தறி வும் மிக்க இஸ்லாமிய அறிஞர்கள்.

அறிவுமணம் - ஞானதேன் - சிந்தனைக்கனிகள் - மனிதநேய நிழல் பண்புச் சுவை அனைத்தையும் மனிதர்களுக்கு நல்கும் கள்ளங்கபடமில்லா வெள்ளை மலர்த்தோட்டத்தை எழில்மிகு சோலையை அந்த நல்லோர்களை 'ஸுலைம்' குலத் தினர் வெறிநாய்களைப் போல் திடீரெனப் பாய்ந்து தாக்கி சிறிது நேரத்தில் அத்தனைப் பேரையும் படுகொலை செய்து விட்டனர்.

## இறைத்தூதரின் இதயத்தைப் பிழிந்திட்ட எல்லையில்லாத் துயர்

இறைச் சிந்தனையைத் தவிர வேறெந்தச் சிந்தனையும் அவர்களுக்கில்லை. இறைநெறி அழைப்பைச் செய்வதற்கென்றே புறப்பட்டு வந்திருந்த அந்தப் பெருமக்கள் மீது திடீரெனத் தாக்குதல் தொடுத்தனர். அம்புகளா லும், வாட்களாலும் அத்தனைப் பேரையும் குத்தினர். வெட்டினர். கிஞ்சிற்றும் எதிர்பாராத இந்தத் தாக்குதலால் முற்றிலும் நிலை குலைந்துபோன அந்த சான்றோர் செய்வதறியாது திணறினர். அங்கும் இங்கும் சிதறினர்.

சிலமணித் துளிகளில் நிகழ்ந்திட்ட இந்தக் கொடூரப் படுகொலையில் தலை வேறு அங்கங்கள் வேறாக வெட்டி துண்டிக்கப்பட்டு அத்தனை பேரும் இறந்தனர். இறை நெறியை இதயத்தில் சுமந்து, அருள்மறையின் திருவசனங் களை அழகுற ஓதி, அறிவார்ந்த

முறையில் அழைப்புப் பணி செய்த அந்த சாந்திமயமான சமாதானப் புறாக்கள் சண்டாளர்களால் துண்டாடப்பட்டன. இரத்த வெள்ளத்தில் துடித்துத் துடித்து உயிரடங்கிப் போயினர் அந்த உத்தமர்கள். இரத்த வெறி பிடித்த ஓநாய்களான 'பனூ ஸுலைம்' பாவிகள் ஓடி மறைந்தனர்.

ஒட்டகங்களை மேய்த்து வருவதற்கெனச் சென்றிருந்த இரு நபித் தோழர்கள் மட்டுமே தப்பினர். தங்கியிருந்த இடத்திற்கு ஒட்டகங்களை ஓட்டி வந்த இருவரும் காற்றில் கலந்து வந்த இரத்த வாடையை நுகர்ந்தனர். பாலைவனக் கழுகுகளும், காகங்களும், பருந்துகளும் வட்ட மடித்துக் கொண்டிருந்ததைப் பார்த்து அதிர்ந்தனர். என்னவோ ஏதோவெனப் பதறியடித்து ஓடி வந்து பார்த்தனர். அவ்வளவுதான் அவ்விருவரின் இதயங்களும் சுக்குநூறாகி நொறுங்கின.

இறைநெறிப் பணியாற்ற வந்த தோழர்களனைவரும் அறுக்கப்பட்ட ஆடு, ஒட்டகங்களைப் போல வெட்டப்பட்ட - கொத்தப்பட்ட இறைச்சியைப் போல் உயிரற்றுக் கிடந்திட்ட அந்தக் கோரக்காட்சி அவ்விருவரின் உள்ளங்களை உலுக்கியது. பார்க்கப் பார்க்க வேதனையும், ஆத்திரமும், துயரமும் அணையுடைத்த வெள்ளமாய். ஆர்ப்பரிக்கும் பேரலையாய்க் குமுறிவந்தன. ஹாரித் (ரளி) வாளை உருவிய வண்ணம் உணர்ச்சிப் பிழம்பாய் மாறி சென்று கொண்டிருந்த கொலைகாரப்பாவிகள் மீது பாய்ந்து இருவரைக் கொன்றார். சிறை பிடிக்கப்பட்டார். பின்னரும் இருவரைக் கொன்றார். பின்பு பகைவர்களால் கொலை செய்யப்பட்டார்.

அபூபக்கர் (ரளி) அவர்களின் பணியாளராக இருந்து அண்ணலுடன் மக்காவிலிருந்து ஹிஜ்ரத் புறப்பட்டு வந்த ஆமிர் பின் புஹைறா (ரளி) அவர்களும் கொல்லப்பட்டவர்களில் ஒருவராவார். இறைத்தூதரின் இனிய தோழராக - கண்ணியமிக்கப் பண்பாளராக இருந்த இவரை எதிரிகளில் ஒருவராகிய ஜப்பார் என்பார் கூரிய ஈட்டி கொண்டு முதுகில் அழுத்திக் குத்திய போது நெஞ்சைத் துளைத்துக் கொண்டு வெளிவந்தது. அக்கணமே அவரது திருவாயிலிருந்து அல்லாஹ்வின் அருட்பெயரால் நான் திட்டமாக வெற்றி பெற்றுவிட்டேன் எனும் வாசகம் வெளிப்பட்டது. இந்தத் திருவாசகம் குத்தியவரை வியக்க வைத்தது.

எஞ்சியிருந்த ஒரே ஒருவர் அம்ரு (ரளி) மதீனா வந்தடைந்து நிகழ்ந்தவைகளை அண்ணலிடம் உள்ளம் குமுற, உதடுகள் துடிக்க விவரித்தார். தோழர்களின் உயிரற்ற பொன்னுடல்களை நேரில் பார்த்து

இன்பமான இனிய இல்லறத்திற்கு

பக்க விளைவுகள் கிடையாது

# ஜிங்கா கோல்டு™

ஆண்களின் சக்திக்கு
மூலிகை மந்திரம்

**4 கேப்சூல்ஸ் ரூ.600/- மட்டுமே**

அப்போலோ, மெட்பிளஸ் மற்றும்
அனைத்து மருந்து கடைகளிலும் கிடைக்கும்

**Customer Care - 9962664444**

www.jingagold.com info@jingagold.com



سِتَار سِتَيْشَنِيرِي كُمْفَنِي سِنْدِيرِين بَرحَد

STAR

Estd:1964

# STAR STATIONERY CO SDN. BHD.

(32068-D)

**OFFICE STATIONERS, COMPUTER MEDIA SUPPLIERS & DIARY DISTRIBUTORS**

MAIN OFFICE : 1218, 2nd FLOOR, SELANGOR MANSION,
JALAN MASJID INDIA, **50100 - KUALA LUMPUR.**

RETAIL CENTRE : 1015 GROUND FLOOR, SELANGOR MANSION, **KL.**

E-mail : starstco@gmail.com

Tel : 03-2698 5066, (H/L) 2698 5220 & 2698 5236; Fax : 03-26930392

வந்தவரல்லவா அவர். அனைத்தையும் செவியுற்ற அண்ணல் பட்டபாட்டை - துடித்த துடிப்பை இயம்ப இயலவில்லை.

இறைநம்பிக்கையை இதயத்தில் பதித்து, இறை நெறியை வாழ்வில் விதைத்து, இறை நெறி அழைப்புப் பணிக்கென பல ஆண்டுகள் பண்படுத்தப்பட்டு பயிற்சி பெற்றிருந்த தம் உயிரனைய தோழர்களனைவரும் ஒரு சேர கொலை செய்யப்பட்டது பெருமானாருக்குப் பெரும் துயரத்தைத் தந்தது. அண்ணலின் பொன் மனதில் எழுதவியலா பாதிப்பை ஏற்படுத்தியது. இந்த நிகழ்வுக்குத் துன்பப்பட்டது போல் அண்ணலார் வேறெந்த நிகழ்வுக்கும் இப்படித் துன்பப்பட்டதில்லை.

எதிரிகளால் எத்தனையோ முறை துன்புறுத்தப்பட்ட போதும் அவமானப்பட்ட போதும் சாதாரணமாகக் கருதி சகித்துச் சென்ற செம்மல் நபிகளார் தம் தோழர்கள் இப்படி அநியாயமாகக் கொல்லப்பட்டதைப் பொறுக்க முடியாமல் தவித்தார்கள். இருப்புக் கொள்ள முடியாத இறைத்தூதர் தொடர்ந்து ஒரு மாதம் காலைத் தொழுகையை (ஸுபுஹ்) குனூத் ஓதி எதிரிகள் குறித்து இறையிடம் முறையிட்டுப் பிரார்த்தித்தார்கள்.

தோழர்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டதைத் தாங்க முடியாமல் மதீனா வந்து கொண்டிருந்த அம்ரு (ரளி) எதிரில் வந்து கொண்டிருந்த பனீ ஆமிர் கிளையைச் சேர்ந்த இருவரை ஆத்திரத்துடன் கொன்று விட்டார். உண்மையில் இவர்கள் கொலைகாரர்களல்லர். அண்ணலின் ஆதரவாளர்களான இவர்களை அம்ரு (ரளி) தவறாக அவசரப்பட்டு கொன்று விட்டார்.

இச்செய்தி அறிந்து வருந்திய அண்ணல் கொல்லப்பட்ட இருவரின் குடும்பத்தினருக்கும் ஈட்டுத் தொகை வழங்குவதென முடிவு செய்தார்கள். எவருக்கும் எள் முனையளவும் அநீதி இழைக்கக்கூடாது என்பதைப் போதனையாக மட்டுமல்ல, வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்தவர்களல்லவா வள்ளல் பெருமானார்.

இருவரின் இறப்பினால் துடித்து ஆத்திரத்துடன் பொங்கிக் கொண்டிருந்த அவர்களது உறவினர்களிடம் நேரடியாக அணுகுவதைக் காட்டிலும் அவர்களின் நட்புக் குழுவினராகிய யூதர்களில் ஒரு பிரிவினராகிய பனீநதீர்களின் வழி செல்வது நல்லது என நபிகளார் எண்ணினர். மதீனத்து முஸ்லிம்களுக்கும், பனீநதீர்களுக்குமிடையே எந்த ஒரு வெளிப்பிரச்சனையாயினும் அதனை எதிர்கொள்ள கலந்து பேசி ஆவன செய்வது எனும் உடன்பாடு முன்னமே இருந்தது. இறைத்தூதர் மதீனாவில் தடம் பதித்ததும் சுற்றி வாழ்ந்த யூதர்

கள் இன்னபிற முஸ்லிமல்லாத கோத்திரத்தாரிடையே அமைதி உடன்படிக்கை செய்திருந்தார்கள்.

ஆட்சித் தலைவரும் அரசியல் தலைவருமான அண்ணலார் தம் தோழர்கள் சிலருடன் பனீநதீர் குலத்தினர் வாழ்ந்த கோட்டைக் குடியிருப்பு களுக்குச் சென்றார்கள். தாம் வாழும் பகுதிக்கு இறைத்தூதர் வந்திருப்பதை அறிந்திட்ட விஷமத்தனங்களை இயல்பாகக் கொண்ட யூதர்கள் ஓடி வந்து உபசரிப்பது போல நடித்துப் பாசாங்கு செய்தார்கள்.

நிகழ்ந்தவைகளை எடுத்துரைத்த இறைத்தூதர் ஈட்டுப் பணம் பெற்றுச் சமாதான மடைய பனூ ஆமிர் கிளையின ரைச் சம்மதிக்கச் செய்யுமாறு கேட்டுக் கொண்டார்கள்.

## தூதரைக் கொல்ல முனைந்த யூதர்களின் கொலைவெறிச் சதி

அண்ணலின் வேண்டு கோளை ஆர்வத்துடன் கேட்பது போல் நடித்த பனீநதீர் யூதத் தலைவர்கள் "பனூ ஆமிர்கள் எங்களது நட்புக்குழுவினர். எங் களது பேச்சை எள்முனையள வும் மீறமாட்டார்கள். தூதரே! நீங்கள் கவலையை விடுங்கள். உங்கள் சமாதான நல்லெண்ணத் திற்கு நாங்கள் துணை நிற்போம். ஆக வேண்டியவை அனைத்தை யும் நாங்கள் பார்த்துக் கொள் கின்றோம்" என உறுதியுடன் பேசினர்.

அமைதி - சமாதானத்தை இலட்சியமாகக் கொண்ட கள்ளங்கபடமற்ற அண்ணல் எனும் வெண்புறா அவர்களின் பேச்சில் நம்பிக்கை கொண்டு சற்று ஆறுதலடைந்ததும் அண்ணலே ஆட்சித் தலைவரே எங்கள் கோட்டை குடியிருப்புக்கு இவ்வளவு தூரம் தாங்கள் வந்து விட்டீர்கள். உங்களைச் சிறப்பித்து கௌரவிப்பது எங் களது கடமையாகி விட்டது.

கண்ணியமிக்க தங்களுக் கென்றே சுவையான உணவு வகைகள் சமைத்திட உத்தர விடப்பட்டுள்ளது. தாங்களும் தங்களின் தோழர்களும் சிறிது ஓய்வெடுத்து விருந்துண்டு எங்களைச் சிறப்பித்துச் செல்லு மாறு அன்போடு வேண்டுகிறோம் என்றார் யூதத் தலைவர்களில் ஒருவரான ஹுயை என்பார்.

எப்போதும் மற்றவரை - மாற்றரை மதிக்கும் மாசில்லா மனங்கொண்ட மாநபிகள் யூதத் தலைவரின் விருந்தழைப்பை மனமுவந்து ஏற்றுக் கொண் டார்கள். பொதுவாக கொள்கையை விட்டுக் கொடுக்காமல் பிறரிடம் இணங்கி வாழும் பண்பு இறைத்தூதரின் இயல்பாக இருந்தது. ஒருவகை யில் யூதர்கள் முஸ்லிம்களின் உடன்பாட்டு ஒப்பந்தத்தில்

கட்டுப்பட்ட கூட்டத்தினர். அவர்களைத் திருப்திப்படுத்த வேண்டும் எனும் எண்ணத்தாலும் பனூ ஆமிர்களிடையே சமாதானத்திற்கான உறவுப் பாலமாக இருப்பர் என்பதாலும் அண்ணலார் புன்னகையுடன் சம்மதித்தார்கள்.

நல்ல காற்றோட்டமுள்ள கோட்டை வாசலில் அண்ணலும் அவர்களின் அன்புத் தோழர்களும் சற்று இளைப்பாறினர். வெய்யவனின் வெப்பக் கற்றைகள் எரிந்து கொண்டிருந்த அந்த நண்பகலின் வேளையில் தென்றலாய்த் தவழ்ந்து பின் விரைந்து வீசிய காற்று உடலுக்கும் உள்ளத்திற்கும் இதமாக இருந்தது. தனக்கென ஒரு தனி இருக்கையோ சிறப்பு அந்தஸ்தோ தேடாத, விரும்பாத இறைத் தூதர் தோழர்களில் ஒருவராக வீற்றிருந்தார்கள் எளிமையும், அடக்கப் பண்புமே இறைத் தூதரின் குணயியல்புகள் எங்கும் எப்போதும் இவையே அவர்கள் இயல்பாயின.

இறைத்தூதரின் தோற்றத்தில் திடீரென மின் வெட்டியது போன்ற சின்ன மாற்றம் நெற்றியிலும் முகத்திலும் வியர்வைப் பூக்கள்.. முகம் ஒளியாய்ப் பிரகாசித்தது. எவரிடத்தும் எதுவும் கூறாத இறைத்தூதர் அக்கணமே அங்கிருந்து புறப்பட்டு வெளியேறினார்கள். தோழர்களுக்கொன்றும் புலப்படவில்லை. அவசர அவசரமாய் அண்ணல் இங்கிருந்து செல்ல என்ன காரணம்? எது காரணம்? தோழர்கள் திகைத்தனர்.

தூதர் நபிகளார் திரும்ப வருவர் எனச் சிறிது நேரம் எதிர் பார்த்துக் காத்திருந்த மூத்த பண்பட்ட தோழர்களான ஹள்ரத் அபூபக்கர் - உமர் இருவரும் அங்கிருந்து எழுந்தனர். அவர்களைத் தொடர்ந்து ஏனைய தோழர்களும் கோட்டையை விட்டு வெளியேறினர்.

புறப்பட்டு வந்த காரணத்தைப் புனித நபிகளார் சொன்ன போது உயிரனைய தோழர்கள் கொதித்துப் போயினர். குமுறிக் கிளர்ந்தனர். அனைவரையும் அண்ணல் அமைதியாக இருக்கப் பணித்தார்கள். "தோழர்களே! அமரர்களின் தலைவர் ஜிப்ரயீல் (அலை) ஆங்கு எம்மிடம் வந்தார். "இறைத்தூதரே உடனே எழுந்து புறப்பட்டுச் சென்று விடுங்கள். உம்மைக் கொலை செய்ய மாபெரும் சதித்திட்டம் தீட்டப்பட்டு அதற்கான ஏற்பாடுகளில் யூதர்கள் தீவிரமாக இறங்கியிருக்கின்றனர்" என இறைவன் அறிவிக்கின்றான் என்றார். நஞ்சினும் கொடிய வஞ்சகர்களின் கூடாரத்தை விட்டு இறைக்கட்டளைக்கேற்ப உடனே புறப்பட்டு வந்தேன்" என்றார்கள் இறைத்தூதர்.

"அண்ணலே! அருட்தூதே! அந்த நம்பிக்கைத் துரோகி

களை... நயவஞ்சகப் பேய்களை, கொலைகாரப் பாவிகளை இன்னும் நாம் விட்டு வைப்பது நீதியாகாது. எல்லாரையும் இல்லாதொழிப் போம். அனைத்தையும் ஒன்று விடாமல் அழிப்போம். நம்மோடு செய்திருந்த ஒப்பந்தத்தை... உடன்பாட்டை மீறிய, உடைத் திட்ட அந்த உன்மத்தர்களின் கோட்டை கொத்தளம் குடியிருப்பு களைத் தகர்த்தெறிவோம் உத்தமரே உத்தரவிடுங்கள்!" உயிர்தோழர்கள் உணர்ச்சிப் பிழம்பாய் மாறி இருந்தார்கள்.

பொறுமை - சகிப்புத் தன்மை - அமைதியைப் போதித்த அண்ணலார், "அவசரம் வேண் டாம். நிதானமாகச் சிந்தித்து முறையான நடவடிக்கை மேற் கொள்வோம்" என்றார்கள். ஆர்ப்பரித்த தோழர்கள் அடங்கிப் போயினர். பொங்கிய பாலில் நீர்த்துளிப்பட்டதுபோல்.

இரகசியக் கொலைத் திட்டம் இறைத்தூதருக்குத் தெரிந்து விட்டதை அறிந்திட்ட யூதர்கள் பெரிதும் அதிர்ந்தனர். புலிகளின் குகையில் வந்த புள்ளி மானைத் தப்பவிட்டோமே! என வருந் தினர். இந்தத் துரோகத்திற்கு இறைத்தூதர் என்ன தண்டனை தரப் போகின்றார்களோ? எத்தகு நடவடிக்கை எடுக்கப் போகின்றார் களோ? என்றெண்ணியெண்ணிக் குழம்பினர். விருந்து சமைத்துக் கொண்டிருக்கும் நிலையில். கோட்டை வாசலின் மேலிருந்து பெரும் பாறைக் கல்லை அண்ண லின் தலைமேல் தள்ளிக் கொன்றுவிடுவது என்பது அவர் களின் திட்டம். அது நிறைவேறா மல் போனது பெருத்த ஏமாற்ற மும் அவமானமாகவும் அவர்களுக்கிருந்தது.

ஆட்சித் தலைவராம் அண்ணல், ஒரு தீர்க்கமான முடிவுக்கு வந்துவிட்டார்கள். இது அந்த நம்பிக்கைத் துரோகி களுக்குச் சரியான பாடமாகவும் உரிய தண்டனையாகவும் அமைந் தது. ஆம்; முஹம்மது பின் மஸ்லாமா (ரளி) அவர்களை யூதர்களிடம் தூதராக அனுப்பி னார்கள். பனீநதீர்கள் வசித்த குடியிருப்புக் கோட்டைக்கு வந்த இறைத்தூதர் யூதர்களைக் கூவி அழைத்தார். இது யூதர்கள் எதிர்பார்த்ததுதான். யூதர்களின் தலைவர்கள் ஓடோடி வந்தனர்.

"இதோ நன்றாகக் கேட்டுக் கொள்ளுங்கள். இறைத் தூதரின் அறிக்கையை உங்களுக்கு நான் அறிவிக்கப் போகின்றேன். அவர்கள் உங்கள் மீது எடுத்துள்ள நடவடிக்கையைத் தெரிவிக்கப் போகின்றேன். பனூ ஆமிர்

நபி (ஸல்) அவர்கள் இஷாத் தொழுகைக்கு முன் உறங்குவதையும், இஷாவுக்குப்பின் பேசுவதையும் விரும்பாதவர்களாக இருந்தார்கள். (திர்மிதீ – 153)

களுக்கு ஈட்டுப் பணம் கொடுப்பது சம்பந்தமாக அவர்களின் நட்புக் கூட்டத்தினராகிய உங்களின் உதவியை நாடி இறைத்தூதர் உங்களிடம் வந்தபோது அவர்களைக் கொலை செய்யவும் நீங்கள் திட்டம் தீட்டி இருக்கின்றீர்கள். அந்த இரகசியத் திட்டம் இவ்வாறு அமைந்திருந்தது" அண்ணலைக் கொலை செய்யும் அவர்களது திட்டங்களை ஒன்று விடாது அப்படியப்படியே எடுத்துச் சொன்னார். அதுகேட்டு சதிகார யூதர்கள் வியந்து அதிர்ந்தனர்.

"எப்படி இவருக்கு இதெல்லாம் தெரிந்தது? வேற்று மனிதர் எவருக்கும் தெரியாத... நம்மில் சிலருக்கு மட்டும் தெரிந்திட்ட திட்டமல்லவா இது?" என யூதத் தலைவர்கள் தங்களுக்குள் குமைந்து கொண்டனர். மூளையைக் குழப்பிக் கொண்டனர். என்ன ஆகுமோ, ஏதாகுமோ என்று பயந்தனர்.

இறைத்தூதரோடு நீங்கள் ஏற்கனவே செய்திருந்த உடன்பாட்டை பகிரங்கமாக உடைத்து விட்டீர்கள். இனி நீங்கள் எங்கள் நாட்டில் வசிக்கத் தகுதியற்றவர்களாகின்றீர்கள். இன்றிலிருந்து பத்து நாட்களுக்குள் உங்கள் பொருள் உடைமைகள் எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு இங்கிருந்து வெளியேறிவிட வேண்டும் இல்லையேல்...

(தொடரும்....)


துவக்கம் 1958

# குர்ஆனின் குரல்

நம்பர் 1 மாத இதழ்

நிறுவனர்கள் :

அல்லாமா
அ.மு. அப்துல் ஜப்பார் பாகவி (ரஹ்)
மவ்லானா முஃப்தீ அல்ஹாஜ் "அஸ்அதுல் மில்லத்"
அ. முஹம்மது அஷ்ரஃப் அலீ மன்பயீ (ரஹ்)

பொறுப்பாசிரியர் :

மவ்லானா ஹாஃபிழ் காரி முஃப்தீ அல்ஹாஜ்
மு.முஹம்மது இஸ்மாயீல்
காஷிஃபீ பாஜில் தேவ்பந்தீ



அலுவலக முகவரி :

குர்ஆனின் குரல்
த.பெ.எண் : 99
2-A, பந்தல்குடி முதல் தெரு,
பாலம் ஸ்டேஷன் ரோடு, மதுரை-625002.

அலுவலக அலைபேசி எண் :
94420 56547
E.mail : quraaninkural@gmail.com
web : www.quraaninkural.com



ஓராண்டு சந்தா ரூ.300/-
தனி இதழ் ரூ.25/-

Our Bankers : M/s. INDIAN BANK, Madurai Tallakulam Branch,
M.MOHAMED ISMAIL
S.B. A/c No.6851528029 IFSC Code : IDIB000T003

M/s. INDIAN OVERSEAS BANK,
Madurai Meenakshi College Branch,
M.MOHAMED ISMAIL
S.B. A/c No.175701000003467
IFSC Code : IOBA0001757

Google Pay Name: QURANIN KURAL
Google Pay No. : 9486729192

QURAANIN KURAL GSTIN : 33BCZPM4763Q1ZH



குர்ஆனின் குரலில் வெளியாகும் விளம்பரங்களின் நம்பகத்தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல.

# அஸ்ராருல் குர்ஆன்

அரபி மூலம் : இமாம் **ஜலாலுத்தீன்** அஸ்ஸுயூத்திய்யி

தமிழில் : மவ்லானா மவ்லவீ முஃப்தீ

**முஹம்மது கிஃபாயத்துல்லாஹ்**

தாவூதி ஃபாஜில் ஜமாலி பாகவி ஹள்ரத் எம்.ஏ.,

ஈரோடு மாவட்ட அரசு காஜி

கேள்வி : கண்ணியமிகுந்த அல்குர்ஆன் அத்தியாயங்களின் துவக்கங்கள் எத்துணை வகைகளில் உள்ளன ?

பதில் : கண்ணியம் மிகுந்த அல்குர்ஆன் அத்தியாயங்களின் துவக்கங்கள் பத்து வகைகளில் அமைந்துள்ளன. முதலாவது, அல்லாஹ் தன்னைப் புகழ்ந்தவனாகத் துவக்கும் முறை. புகழ் இரண்டு வகைப்படும். அவை: 1. புகழுக்குரிய அம்சங்களைக் கூறிப் போற்றுதல். 2. இகழ்ச்சியும், குறையும் உள்ள பண்புகளைக் கூறி நிராகரித்தல் என்பதாகும்.

முதல் வகைக்கு உதாரணமாக, அல்குர்ஆன் முதல் அத்தியாயமான அல்ஃபாத்திஹாவானது "அல்ஹம்து" எனத் துவங்கி "அகில உலகங்களின் இரட்சகன் அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் எனப் பரவுகிறது. அவ்வாறே 1. அல்அன்ஆம், 2. அல்அஹ்காஃப், 3. ஸபா, 4. ஃபாத்திர் ஆகிய நான்கு அத்தியாயங்களின் துவக்கங்களும் உள்ளன. அல்ஃபுர்கான், அல்முல்க்கு ஆகிய இரண்டு அத்தியாயங் களும் "அருள் நிறைந்தவன்" எனப் பொருள் தருகின்ற தபாரக் கல்லதீ என்னும் புகழ் மொழியால் துவங்குகின்றன.

இரண்டாவது வகையான - இகழ்ச்சியைக் கூறி நிராகரிப்பதற்கு உதாரணம், "அல்இஸ்ராஉ" அத்தியாயத் துவக்கத்தைக் குறிப்பிடலாம். தனது அடியாரை இரவில் (மிஃராஜ்) பயணம் செய்யவைத்த இறைவனை 'மாசு மருவற்றவன் எனப் புகழ்கிறேன்' எனும் பொருள் தருகின்ற "ஸுப்ஹானல்லதீ அஸ்ராபி அப்திஹீ" எனத் துவங்குகின்றது. இவ்வாறே, அல்அஃலா, அல்ஹதீது, அல்ஹஷ்ரு, அஸ்ஸஃப், அல்ஜுமுஆ, அத்தகாபுன் ஆகிய ஆறு அத்தியாயங்களின்

துவக்கங்களும் அமைந்துள்ளன. ஆக, ஏழு அத்தியாயங்கள் புகழ் கூறிப் போற்றியும் ஏழு அத்தியாயங்கள் இறைவன் மாசில்லாதவன் எனப் போற்றியும் துவங்குகின்றன. அல்குர்ஆனில் உள்ள 114 அத்தியாயங்களில் 14 அத்தியாயங்கள் இவ்வாறான அற்புதமாய் இரகசியங்களைக் கொண்டு அமைந்துள்ளன.

அடுத்து, 29 அத்தியாயங்கள் தனியெழுத்துகளைப் பெயர்ச் சொற்களைக் கொண்டு துவங்குகின்றன. 1.அலிஃப் லாம் மீம். 2.அலிஃப் லாம் மீம் ஸாத். 3.அலிஃப் லாம் மீம் ரா. 4.காஃப் ஹா யா அய்ன் ஸாத். 5.தா ஹா. 6.தா ஸீன். 7.தா ஸீன் மீம். 8.ஹா மீம். 9.ஹா மீம் அய்ன் ஸீன் காஃப். 10.காஃப். 11.நூன் ஆகியவை இத்தொகுதியில் அடங்குகின்றன.

மூன்றாவதாக, "யா" என்ற அழைப்புடன் ஆரம்பமாகின்றன. "யா அய்யுஹல்லதீன ஆமனூ" (ஓ நம்பிக்கையாளர்களே!) எனத் துவங்கும் பத்து அத்தியாயங்கள் . அவை முறையே: 1.அல்மாயிதா. 2.அல்ஹுஜுராத். 3. அல்மும்தஹினா. 4. அல்அஹ்ஸாப். 5.அத்தலாக். 6.அத்தஹ்ரீம். 7. அல்முத்தஸ்ஸிர். 8.அந்நிஸாஉ. 10.அல்ஹஜ்ஜு 11.அல்முஸ்ஸம்மில் ஆகியவையாம்.

நான்காவதாக, 'அபஸ வதவல்லா' (அவர் முகம் கடுகடுத்தார் என்பது போன்ற செய்தியோடு துவங்கும் அத்தியாயங்கள் அவை: 1.அத்தவ்பா. 2. அந்நஹ்லு. 3. அல்அன்பியா. 4.அந்நூர். 5.அஸ்ஸுமர். 6.அல்முஜாதலா. 7.அல்மஆரீஜ். 8.நூஹ். 9.அல்கியாமா. 10.அல்பலத். 11.அல்கமர். 12. அல்பய்யினா. 13. அத்தகாஃதுர் என்னும் அத்தியாயங்களாம்.

ஐந்தாவதாக, சத்தியமிட்டுத் துவங்கும் 15 அத்தியாயங்கள் அல் குர்ஆனில் இடம்பெற்றுள்ளன. உதாரணமாக, "வல்ஃபஜ்ரி வலயாலின் அஷ்ரின்" (புலர் காலைப் பொழுதின் மீதும், பத்து இரவு களின் மீதும் சத்தியமாக) என்பதாகும். இவை முறையே, 1.அஸ்ஸாஃப்ஃபாத். 2.வத்தாரியாத். 3.வத்தூர். 4.வந்நஜ்ம். 5.வல்முர்ஸலாத். 6.வந்நாஸிஆத். 7.வஸ்ஸமாயி தாத்தில் புரூஜ். 8.வல்ஃபஜ்ர். 9.வஷ்ஷம்ஸ். 10.வஸ்ஸமாயி வத்தாரிக்கி. 11.வல்லய்ல். 12.வள்ளுஹா. 13. வத்தீன். 14.அல்ஆதியாத். 15.வல்அஸ்ர் ஆகியனவாம்.

ஆறாவதாக, "இதா வகஅத்தில் வாகிஆ" (அந்த மாபெரும் நிகழ்ச்சி நடக்குமேயானால்...) என்ற நிபந்தனைகளோடு துவங்கும் ஏழு அத்தியாயங்களாகும். அவை முறையே, 1.அல்வாகிஆ. 2. அல்முனாஃபிகூன். 3. அத்தக்வீர். 4. இன்ஃபிதார். 5. இன்ஷிகாக்.

6. இதாஜுல்ஸிலத். 7. இதா ஜாஅ நஸ்ருல்லாஹ் என்பனவாம்.

ஏழாவதாக, “இக்ரஃ பிஸ்மி ரப்பிக்க” (உனது இரட்சகனின் திருநாமத்தைக் கொண்டு ஓதுவீராக!) என்ற ஆணையோடு துவங்கும் அத்தியாயங்கள் ஆறு உள்ளன. அவை: 1. குல் ஊஹிய. 2. இக்ரஃ பிஸ்மி ரப்பிக்க 3. குல் யாஅய்யுஹல் காஃபிரூன். 4. குல்ஹுவல்லாஹு அஹத். 5. குல் அஊது பிரப்பில் ஃபலக். 6. குல் அஊது பிரப்பின்னாஸ் ஆகியவையாம்.

எட்டாவதாக, “அலம்தர” (நீர் பார்க்கவில்லையா?) என்ற கேள்வியோடு ஆறு அத்தியாயங்கள் துவங்குகின்றன. இவை: 1. அத்தஹ்ரு. 2. ஹல் அதாக. 3. அரஅய்த்த. 4. அம்மயத்த ஸாஅலூன். 5. அலம் நஷ்ரஹ் 6. அலம் தர கய்ஃப ஆகியனவாகும்.

ஒன்பதாவதாக, “தப்பத் யதா அபீ லஹபின்” (அபூலஹபின் இரு கைகள் நாசமாகட்டும்!) என்பது போல் சாபமிட்டுத் தொடங்கும் அத்தியாயங்கள் மூன்று உள்ளன. அவை: தப்பத் யதா. 2. வய்லுன் லில் முதஃப்ஃபிஃபீன். 3. வய்லுன் லி குல்லி ஹுமஜா... ஆகியனவாம்.

பத்தாவதாக, காரணத்தைக் கூறித் துவங்கும் அத்தியாயமாகும். இவ்வகையில் “லி ஈலாஃபி குரைஷ்” (குரைஷிகளுக்கு யாத்திரையின் மீது விருப்பமுண்டாக்கி...) என்ற ஒரேயொரு அத்தியாயம் மட்டுமே அல்குர்ஆனில் இடம் பெறுகின்றது. இவ்வாறு மாமேதை அல்லாமா அபூஷாமா அப்துர்ரஹ்மான் பின் இஸ்மாயீல் அஷ்ஷபிய்யுல் மக்தஸிய்யு (மறைவு ஹிஜ்ரீ 660) என்பவர் அல்குர்ஆனின் அத்தியாயத் துவக்கங்களை ஆராய்ந்து பத்து வகைப்படுத்திக் கூறியுள்ளார்.

கேள்வி : அருள் மிகு அல்குர்ஆனின் **114** அத்தியாயங்களும் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவா ?

பதில் : ஆம். இதற்கு “இல்முஸ்ஸிபாத்” எனப்படும் அல்குர்ஆன் ஆய்வுக் கலையில் இதுவும் முக்கிய அம்சம் வகிக்கின்றது. பொதுவானது (ஆம்), குறிப்பானது (காஸ்), அறிவுக்குட்பட்டது (அகலீ), உணர்ச்சிப் பூர்வமானது (ஹிஸ்ஸீ), சிந்தனைக்குரியது (கியாஸீ), ஒன்றுக்கொன்று தொடர்பும் வேற்றுமையும் (ளித்தீ) போன்றவை இதில் அடங்கும்.

இக்கலையில் பேரறிஞர் அல்இமாம் அபூஹய்யான் அவர்களின் ஷைகு அபூஜஅஃபர் பின் ஜுபைர் உந்துலுஸீ நஹ்வீ அவர்கள் (மறைவு ஹிஜ்ரீ 807) எழுதிய அல்புர்ஹானு ஃபீ முனாஸபத்தி தர்த்தீபி

ஸுவரில் குர்ஆன் என்ற நூலும், மாமேதை இமாம் ஃபஃக்ருத்தீன் அர்ராஸீ அவர்கள் எழுதிய தஃப்ஸீரும் அல்லாமா ஷைகு புர்ஹானுத்தீன் அல்பாகாஇய்யி அவர்களின் நழ்முத்துரர் ஃபீ தனாஸுபில் ஆயாத்தி வஸ்ஸுவர் என்ற நூலும் பிரபலமானவைகளாகும்.

அத்தியாயங்களுக்கு இடையிலுள்ள தொடர்புகளின் அற்புதங்களைக் காண, உதாரணமாக, அல்கவ்சர் அத்தியாயத்துக்கும் அதற்கு முன்னுள்ள அல்மாஊன் அத்தியாயத்துக்கும் இடையிலுள்ள எதிரும் புதிருமான வேற்றுமையை பாருங்கள்! அல்மாஊன் அத்தியாயத்தில் நயவஞ்சகர்களின் நான்கு பண்புகளை அல்லாஹ் குறிப்பிடுகின்றான். அவை: 1. கஞ்சத்தனம். 2. இறைவழிபாடான தொழுகையை நிறைவேற்றாமல் இருத்தல். 3. முகஸ்துதிக்காகத் தொழுதல். 4. ஜகாத் வரியைச் செலுத்தாமல் இருத்தல் ஆகியன.

அடுத்துள்ள அல்கவ்சர் அத்தியாயத்தில் நான்கு நற்பண்புகளை இறைவன் குறிப்பிடுகின்றான். அவை: 1. அதிகமாக தானம் வழங்குதல். 2. தொழுகையைத் தொடர்தல். 3. அல்லாஹ்வுக்காகத் தொழுதல். 4. குர்பானி செய்து ஏழைகளுக்கு வழங்குதல் என்பனவாம். இப்பண்புகள் நான்கும் மாஊன் அத்தியாயத்தில் விமர்சிக்கப்படும் நயவஞ்சகர்களின் நான்கு பண்புகளுக்கு முற்றிலும் முரண்பாடானவைகளாகும்.

கேள்வி : அல்குர்ஆனின் 114 அத்தியாயங்களின் முடிவுகள் எவ்வாறெல்லாம் அமைந்துள்ளன ?

பதில் : எவ்வாறெல்லாம் அருள் மறை அத்தியாயங்கள் அழகுபடத் தொடங்குகின்றனவோ அவ்வாறே பல அற்புத இரகசியங்களோடும் அவை முற்றுப் பெறுகின்றன. சொல்லப்போனால் ஒவ்வொரு அத்தியாயத்தின் சாராம்சங்களும் அதன் இறுதி வசனங்களில் அடங்கிக் கிடக்கின்றன. ஒரு முழு அத்தியாயத்தின் முக்கியத்துவத்தைக் காணும் பேறு பெற்ற மனிதனுக்கு அதை முடிக்கும் தருவாயில் அதன் சாராம்சம் உள்ளத்தில் பதிந்துவிடல் வேண்டும். செவிகளில் அவ்விறுதி வசனம் ஒலித்துக்கொண்டே இருத்தல் வேண்டும். ஆகவே தான் பயன் தரும் பல இரகசியங்களை அவ்விறுதி வாக்கியங்கள் தமக்குள் அடக்கிக் கொண்டுள்ளன. அவ்வசனத்தை ஓதி நிறைவு செய்யும்போது அடுத்துள்ள அத்தியாயத்தையும் ஓதலாமே என்ற ஆர்வத்தை அவை தூண்டிவிடுகின்றன.

(தொடரும்)

# திப்பு சுல்தான் அவதூறுகளும் பதில்களும்

"வரலாற்றுப் பேரறிஞர்"
செ.திவான் M.A.,M.Phil.,

## குடகு (கூர்க்) மக்களின் திருமண முறை

விசித்திரமான இயற்கைக்கு மாறுபட்ட இயல்பு திரிந்த, தடுமாற்றந் தருகிற, தீமையான, கெடுதி விளைவிக்கின்ற வழக்கம் குடகில் இருந்தது. ஒரு வீட்டில் மனைவி எல்லோருக்கும் பொது வானவள், பொது உடைமையான வள். அந்த வீட்டில் வாழும் அனைத்து சகோதரர்களுக்கு அவளே மனைவியாவாள். பிறக் கின்ற குழந்தைக்கு தந்தை யார் என்பதை அவளே தீர்மானிக்க வேண்டும். அது மட்டுமா?

"The Brahmans, the clever casuists of India who know to find a reason, or precedent for any thing when it suits their inter est have told the Coorgs that in this unnatural and hurtful custom they resemble the five great Pandava brothers of antiquity who had one wife Draupadi" (Ibid)

சமய சாத்திரங்களின் தத்துவ ஆதாரங்களை காட்டி விதண்டா வாதம் புரியும் குதர்க்கவாதிகளான பிராமணர்கள் இயற்கைக்கு மாறாக கேடான, ஒரு பெண்ணிற்கு பல கணவன் என்ற குடகு மக் களின் நிலைக்கு பஞ்ச பாண்டவர் கள் ஐவர் திரௌபதியை மண முடித்ததை சான்றுக்கு சொல் வார்கள். இத்தகைய வழக்கம் (ஒரு பெண்ணிற்கு பல கணவன்மார்கள் உள்ளது) அந்தப் பகுதியிலும் துளு நாட்டிலும் இருப்பதையும் ஏ.மோக்லின் விவரித்துக் கொண்டே செல்வார்.

முழுக்க முழுக்க ஹைதர் அலீ யையும் திப்புசுல்தானையும் தாக்கி எழுதுவதற்கென்றே எழுதப்பட்ட நூல் கர்னல் மார்க் வில்க்ஸின் மைசூர் வரலாறாகும். அந்த நூலின் முதல் பாகம் கி.பி.1810இல் வெளி வந்தது. கி.பி.1817ஜூன் 25இல் இரண்டாம், மூன்றாம் பாகம் வெளி வந்தது. சென்னை யில் 1869இல் இரண்டாவது பதிப்புவந்தது. பின்பு முர்ரிஹாமிக் குறிப்புகளுடன் 1930இல் மூன்றாவது பதிப்பு இரண்டு பாகங்களாக வெளிவந்தது.

முதல் பாகம் 850 பக்கங்கள்; இரண்டாம் பாகம் 817 பக்கங்கள். நூல் முழுவதும் முழுக்க முழுக்க ஆங்கிலேயே போர் ஆவணங் களை ஆதாரமாகக் கொண்டது. அதில் திப்பு சுல்தானின் நிர்வாகங் களை பற்றிய குறிப்புகள் அரிது. எனினும் அவரே தெரிந்தோ தெரி

யாமலோ ஒரு விஷயத்தை மறந்து பதிவு செய்துள்ளார். இதோ அது -

குடகில்போர் முடிந்ததும் திப்பு சுல்தான் அங்குள்ள நிலைமை களை பார்க்கிறார். ஒரு பெண் பல கணவன்மார்களை கொண்டிருப்பதை கண்ட திப்பு சுல்தான் அந்த முறையைப் பற்றி கடுமை யான கருத்தை குடகில் கூறுகிறார். கர்னல் மார்க் வில்ஸ் நூலில் 2வது தொகுதியில் 280வது பக்கமும், 281வது பக்கமும் தருகிற செய்தி இது. "Six brothers dwell together in one house and if the elder marries, his wife become equally the wife of the other five, and the inter course so far from being disgraceful is familiarly considered as a national rite" ஆறு சகோதரர்கள் இருக்கிற வீட்டில் மூத்த சகோதரர் மணம் செய்து கொண்ட பெண்ணை மற்ற ஐவரும் சமமாக உடல் உறவு கொள்ளும் அவமானம் விளைவிக்கிற, அவ மதிப்பு தருகிற, வெட்கக்கேடான, பழிப்புக்கு இடமான நிகழ்வு நடை பெற்று வருவதை நான் அறி கிறேன். கடைசியில் குழந்தை யாருக்கு பிறந்தது என்று தெரி யாமலே போய் விடுகிறது. நாட்டி லுள்ள மக்களுக்கு தன் தந்தை யார் என்பதே தெரியாமல் போய் விடும்.

...not a man in the country knows his father and the ascendancy of women, and bastardy of childern, is your common attribute, from the period of my father's conquest of the country. You have rebelled seven times, and caused the death of thousands of our troops" எனது தந்தை ஹைதர் அலீ குடகு நாட்டை வென்றார். ஆனால் குடகர் களோ எங்களை எதிர்த்து ஏழு தடவை கலகம் செய்தீர்கள். அத னால் எங்களது படைப்பிரிவில் பல் லாயிரக்கணக்கான வீரர்களை நாங்கள் பலி கொடுத்துள்ளோம்.

"I forgive you once more, but if rebellion be ever respected I have made a vow to god to honour every man of the country with Islam. I will make them aliens to their home, and establish them in a distant land and thus at once extinguish rebellion and plurality of husbands and initiate them in the more hon ourable practices of Islam" நான் மறுபடியும் ஒரு தடவை உங்களை மன்னித்து விடுகிறேன். நீங்கள் மறுபடியும் கலகம் செய்ய முயன்றீர்கள் என்றால், நான் இறைவன் மேல் சத்தியம் செய் கிறேன். இஸ்லாம் மார்க்கத்தை இறைவன் மேல் சத்தியம் செய் கிறேன். இஸ்லாம் மார்க்கத்தை பின்பற்றுபவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் உங்கள் அனைவரையும் நான் தூர தேசத் திற்கு அனுப்பிவிடுவேன். உங்கள் வீட்டிற்கும் உங்கள் நாட்டிற்கும் சம்பந்தமில்லாமல் நீங்கள் தூர தேசத்திற்கு குடியமர்த்தப்படுவீர் கள். குடகில் கலகம் நின்ற பிறகு ஒருத்திக்கு பல கணவன்மார்கள் இருக்கின்ற வழக்கமும் நின்ற

பிறகு இஸ்லாம் மார்க்கத்தில் பெரிய கொள்கையில் அவர்களை ஈடுபடுத்துவேன். (Manual of Coorg a Gazetteer, G.Richter, Page 147. Tiger of Mysore, The Life and Death of Tippu Sulthan, Denys Forest, Page 94).

1893இல் ஆக்ஸ்போர்டு கிளரண்டன் பிரஸ்ஸில் அச்சிட்டு வெளியான 233 பக்கங்கள் கொண்டசர் வில்லியம் வில்சன் கண்டர் பதிப்பித்த மைசூர் தலைமை கமிஷனர் எழுதிய ஹைதர் அலீ மற்றும் திப்பு சுல்தான் நூலில் (Lewin B.Bowring, formerly Chief Commissioner of Mysore, Haider Ali and Tippu Sulthan and the struggle with the Musal man powers of the south, Cruelities in Coorg எனும் தலைப்பில் பக்கம் 127இல் கூறுகிறார்.

Tippu marched into the country with his army and lectured the Coorg on the inquity of their custom of polyandry. He warned them that if any further rebellion took place he would extinguish it by removing the population and Islamizing them.

திப்பு குடகு நாட்டில் தனது இராணுவத்தினருடன் சென்று அங்குள்ள மக்களிடம் உரை யாற்றினார். ஒரு பெண் பல கண வரைப் பெற்றிருக்கும் பழக்கத்தை உடனடியாக கைவிட வேண்டும் என்றும், மாறாக கலகம் புரிந்தால் இங்குள்ள மக்கள் இஸ்லாம் மார்க்கத்தை ஏற்க வேண்டி வரும் என்றார். இங்குள்ள அனைவரையும் இங்கிருந்து அகற்றி விடுவேன் என்று எச்சரித்தார். History of Tippu Sulthan by Mir Hussain Ali Khan Kirmani பெர்சிய மொழியில் எழுதி ஆங்கிலத்தில் கர்னல் தீ.மைல்ஸ் மொழி பெயர்த்த நூல் 1864இல் வெளிவந்தது. மறுபதிப்பாக 1986இல் வந்தது. அதில் பக்கம் 36இல் சொல்கிறார்.

..."it was a foolish custom but one considered in their pagan religion both proper and meritorius that if there happened to be four bothers in one house only one of them married, and the other cohabited with the women so married by turns, one every night and some even say that all four remained with her every night. The off spring of these marriage were divided among the brethren"

குடகு நாட்டிலுள்ள முட்டாள் தனமான வழக்கம். நான்கு பேர் ஒரு வீட்டில் இருந் தால் ஒருவர் மட்டுமே திருமணம் செய்வது, மற்றவர்களோடு அந்தப் பெண் ணோடு முறை வைத்து ஒரு நாளுக்கு ஒருவர் என்றும், ஒரு இரவில் ஒருவர் என்றும் சில வேளை களில் நான்கு பேருமே ஓர் இரவில் அந்த பெண்ணுடன் கூடியிருப் பார்கள். அவர்களது வாரிசு களாக பிறக்கும் பிள்ளைகளை சகோதரர் கள் நான்கு பேரும் பகிர்ந்து ஏற்றுக் கொள்வார்கள். (தொடரும்)

# துஆ மஜ்லிஸ்

## நலமுடன் வாழ

என் உடலிலுள்ள அனைத்து நோய் பிரச்சனைகள் நீங்கவும், பிள்ளைகளுக்கு சிறப்பான சாலிஹான வாழ்க்கை அமைந்து நலமுடன் வாழவும் வல்ல ரஹ்மானிடத்தில் துஆ செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். **குரல் வாசகி** – மதுரை.

பாத்திமா ஜின்னாஹ், எஸ்.ஹெச்.சகாபுதீன் - மதுரை; குரல் வாசகி - ஒட்டன்சத்திரம்; ஹபீப் நிஸா - ஒட்டன் சத்திரம்; முஹம்மது ரஃபீக், ஷமீமா, அர்ஹம், அய்மன் - துபாய்; டாக்டர் ஜி.மும்தாஜ் - மதுரை; ஒய்.ஜாஹிர் உசேன், மெஹ்ராஜ் பேகம், ஆப்ரின் பானு, அப்துஸ் ஸலாம் - மதுரை; சுபைதா - சோழமாதேவி; ரஷாத் - தஞ்சாவூர்; ஹபீபுன்னிஸா - ஈரோடு; ஷபீர் அஹமது - துபாய்; எம்.உமர் - ஈரோடு; தங்கமணி - ஈரோடு; ஜே.முஜம்மில் - டெல்லி; சேகர், குணா - ஈரோடு; எம்.ரேஷ்மா - சவூதி அரேபியா; அ.அப்துல்லாஹ், உஷ்னாரா, ரேஷ்மா பிர்தௌஸ், ஹஸீனா - மதுரை; என்.மும்தாஜ் - தஞ்சாவூர்; கே.முஹம்மது பாரூக் - நாமக்கல்; ஏ.மஹபூபுன்னிஸா - தஞ்சாவூர்; பி.காதர்பாட்சா, ரமீஜா பீபீ, ஷேக் தாவூது, ஷஃபானா ஆப்ரின், ஷமீம் பானு, அல்தாப் நாகூர் மீரான் - மதுரை; நாகூர்மீரான் - மானூர்; பி.முஹம்மது இப்ராஹீம் - பழனி; நஸீர் - தஞ்சாவூர்; எம்.ஷானவாஸ் - சவூதி அரேபியா; பி.மல்லிக்கா பேகம், பி.அபுதாஹிர், பாத்திமா பேகம், பஹீமுல் ஹஸன் - மதுரை; பி.காதிர் பாட்சா - பொள்ளாச்சி; ஹஸன் பானு - தஞ்சாவூர்; ஜி.அப்துல் ஸமது - குடியாத்தம்; என்.சமீரா - கோட்டூர்; எம்.முஹம்மது இப்ராஹீம் - அரவாக்குறிச்சி; காஜா ஹுசைன், நஸீமா பானு, நஸீரா, நிலோஃபர் - மதுரை; முதஸ்ஸிர் அஹ்மத் - ஆரணி; எஸ்.தில்ஷாத், எஸ்.சாதிக் அலீ, யாஸ்மீன் பானு, முஹம்மது இஸ்மாயீல், யாசர் அரபாத், ரேஷ்மா, கதீஜா, மரியம் பாத்திமா, ஷகிலா பானு, முஹம்மது பாரூக், நிஷா, நர்கீஸ் பானு, இர்ஷாத் பாட்சா, ஆலியா, ஆலிஷா - மதுரை; முஹம்மது மஅஜ்ஜம் - பெங்களூரு; முஹம்மது மாஸ் - பெங்களூரு; ஐ.காதர் பாட்சா, கா.முஸ்திரி பேகம் - மதுரை; ஹாஜி அப்துல் ஸமது - எருமபட்டி; சுல்தான் அலாவுதீன், ரோஸ் பானு - ஒத்தக்கடை;

செல்லபா, எஸ்.கோரிமா, எஸ்.சிக்கந்தர் பாஷா - விராதனூர்; கா.ரபீக் ராஜா, ஷபீனா, ஆயிஷா ஆப்ரின், முஹம்மது மஃபாஜ், இப்ராஹிம்ஷா, பர்வீன் பானு, முஹம்மது தாஹா - மதுரை; அப்பாஸ் அலீ, பரிதா ராணி, அஜ்மல்கான், ஷமிம் பானு, ரைஷா, சுல்தான் ரஹமத்துல்லா, ஆபிதா, முஹம்மது யூசுப் இர்பானா, சையத் அஹமத், ஜியான் அஹமத், பஜுலுர் ரஹ்மான், முபினா, பஹிமா, ஹபிஸா, பாஸிலா - மதுரை; சாஹிதா பானு, ஜுனைது பாபு - சென்னை; எம்.ஜரீனா பேகம் - மதுரை; சபினா ஆஸ்மி, முஹம்மது காமில் - இராமநாதபுரம்; ஹஸன் முஹம்மது - சென்னை; எஸ்.முஸ்தபா, ஆயிஷா பீ, முஹம்மது பாரூக், முஹம்மது மீரான் - மதுரை; அகில் வாரிது, ஆஸிர் ரைஹான் - சென்னை; சையது அப்துல் காதர், சைதானி, முஸ்தபா ஹுசைன், முஹம்மது கவுஸுல்லாஹ், மெஹர் பாத்திமா, தஸ்லீம் சுல்தானா, அனீஸ் பர்ஹானா, ஜெஸிரா ஷகீன், ஷஃபீரா ரோஷித், பஹீமா ஷரீன் - இராமநாதபுரம்; ஜவாஹிர் பேகம் - மதுரை; ஆசதாம் உசேன் - பர்ஹத்துல் சாஹிரா - செட்டியார்பட்டி;

இவர்கள் அனைவருடைய ஹலாலான ஹாஜத்துகள் நிறைவேறவும், இவர்களின் துன்பங்கள், துயரங்கள் நீங்கவும், நோய் நொடிகள் நீங்கி சுகம் பெறவும், மற்றும் இவர்களின் கோரிக்கைகள் அனைத்தும் இன்ஷா அல்லாஹ் கபூலாகிட துஆ மஜ்லிஸ் குழுவின் தலைவர் மதுரை ஜே.எம்.எஸ். அரபு கல்லூரி முதல்வர் அஷ்ஷைகு அல்லாமா எம்.முஹிப்புல்லாஹ் ஹள்ரத் தாமத் பரக்காத்துஹு அவர்களும், மதுரை ஜே.எம்.எஸ்.அரபுக் கல்லூரி மாணவர்களின் துஆ மஜ்லிஸ் குழுவினரும் துஆ செய்கிறார்கள். குரலின் அருமை வாசக நேயர்களே! கண்ணிய மிக்க உலமா பெருமக்களே! இதைக் காணும் நல்லவர்களே! நீங்களும் துஆ செய்யுங்கள்! வல்ல அல்லாஹ் நம் துஆக்களை கபூலாக்குவானாக!

**துஆ மஜ்லிஸுக்காக 01.12.2021 அன்று வரை நமக்கு கிடைத்த கடிதங்கள் அனைத்தும் இவ்விதழில் இடம் பெற்றுள்ளன.**

**துஆ மஜ்லிஸ் மூலம் பயன் அடைந்தோரின்...**

# இதயம் பேசுகிறது!

வல்ல ரஹ்மானின் பேரருளாலும், துஆ மஜ்லிஸ் குழுவினரின் துஆ பரக்கத்தாலும் மருமகளுக்கு சுகப்பிரசவத்துடன் ஆண் குழந்தை பிறந்து தாயும், சேயும் நலமுடன் உள்ளனர். துஆ செய்த அனைவருக்கும் மிக்க நன்றி!

**அ.பாத்திமா பேகம் - மதுரை.**

# இறைவா, நிறைவருள் புரிவாயாக!

கரூர் மாவட்டம் அரவக்குறிச்சி டீசல் முஹம்மது சபியுல்லாஹ் அவர்களின் மகனார் ஜனாப் எம்.முஹம்மது காதர் இப்ராஹீம் அவர்கள் 24.08.21 அன்றும்,

கேரளா அத்திக்கோடு மர்ஹூம் சாகுல் ஹமீது ராவுத்தர் (ரஹ்) அவர்களின் மனைவியும், ஹனஃபீ சுன்னத்வல் ஜமாஅத் பள்ளியின் தலைவர் மற்றும் அத்திக்கோடு மவாரடு பஞ்சாயத்து உறுப்பினருமான அல்ஹாஜ் எஸ்.முஹம்மது பாரூக் அவர்களின் தாயாருமான அல்ஹாஜ்ஜா ஹபீபா அவர்கள் 11.10.21 அன்றும்,

அத்திக்கோடு மர்ஹூம் செய்யது சாஹிப் (ரஹ்) அவர்களின் மகனாரும், குர்ஆனின் குரலின் நீண்ட கால சந்தாதாரருமான ஜனாபா எஸ்.எம்.ஆயிஷா அவர்கள் 21.10.21 அன்றும்,

அத்திக்கோடு மர்ஹூம் அபூபக்கர் (எ) பக்கர் ராவுத்தர் (ரஹ்) அவர்களின் மனைவியும், ஜனாப் ஜபருல்லாஹ் அவர்களின் தாயாருமான ஜனாபா ஹாஜிராமா அவர்கள் 02.11.21 அன்றும்,

கேரளா கொழிஞ்சாம்பாறை மர்ஹூம் லத்தீப் மாஸ்டர் (ரஹ்) அவர்களின் மகளார் ஜனாபா பரீதா அவர்கள் 06.11.21 அன்றும்,

அத்திக்கோடு பள்ளிமேடு மர்ஹூம் அப்பா ராவுத்தர் அவர்களின் மனைவி ஜனாபா ரஹ்மத் பீவி அவர்கள் 10.11.21 அன்றும்,

கோவை கவுண்டன்பாளையம் கீரனூர் பாவா பாட்சா அவர்களின் மகனார் ஜனாப் அப்துல் ஸமது 15.11.21 அன்றும்,

அத்திக்கோடு மர்ஹூம் சாகுல் ஹமீது ராவுத்தர் (ரஹ்) (பனைவியாபாரம்) அவர்களின் மனைவி ஜனாபா நபீஸா அவர்கள் 15.11.21 அன்றும்,

ஈரோடு பெரிய அக்ரஹாரம் முன்னாள் பேரூராட்சி தலைவரும், வக்பு போர்டு உறுப்பினருமான அல்ஹாஜ் எஸ்.அப்துல் ரஹீம் அவர்களின் மருமகனார் ஜனாப் ஆர்.எஸ்.அப்துல் காதர் அவர்கள் 17.11.21 அன்றும்,

தேனி மாவட்டம் உத்தமபாளையம் பி.டி.ஆர்.காலனி மர்ஹூம் பக்கீர் முஹம்மது (ரஹ்) அவர்களின் மகனாரும், கோட்டைமேடு இம்பாலா ஹோட்டல் சையது முஹம்மது அவர்களின் தகப்பனாருமான ஜனாப் அசன் முஹம்மது அவர்கள் 18.11.21 அன்றும்,

திருப்பூர் மாவட்டம் சோழமாதேவி மவ்லானா மர்ஹூம் அப்துல் அஜீஸ் ஹஸ்ரத் (ரஹ்) அவர்களின் மகனாரும், கோவை சூலூர் ஜனாப் எம்.பஜ்ருல்லாஹ் சகோதரர்களின் தகப்பனாருமான ஜனாப் எம்.மவ்லானா அவர்கள் 19.11.21 அன்றும்,

உத்தமபாளையம் பி.டி.ஆர்.காலனி மர்ஹூம் கோழிக்கடை கான் முஹம்மது (ரஹ்) அவர்களின் மனைவி ராபியாம்மாள் அவர்கள் 19.11.21 அன்றும்,

கடத்தூர் ஜனாப் கே.எம்.ஜியாவுதீன் அவர்களின் மாமனாரும், மைசூர் ஜனாப் அ.ராஜா முஹம்மது அவர்களின் தகப்பனாருமான ஜனாப் வஹாப் அவர்கள் மைசூரில் 19.11.21 அன்றும்,

நாமக்கல் மாவட்டம் எருமப்பட்டி காலனி ஜனாப் சாகுல் ஹமீது அவர்களின் தகப்பனார் அல்ஹாஜ் அப்துல் ஸமத் அவர்கள் 21.11.21 அன்றும்,

உத்தமபாளையம் கருத்தராவுத்தர் கல்லூரியின் முன்னாள் பேராசிரியரும், புகழ்பெற்ற கவிஞருமான ஜனாப் திருவை அப்துர் ரஹ்மான் அவர்கள் 22.11.21 அன்றும்,

உத்தமபாளையம் கோட்டைமேடு கறிக்கடை மர்ஹூம் சுலைமான் (ரஹ்) அவர்களின் மகனார் ஜனாப் காதிர் மைதீன் அவர்கள் 23.11.21 அன்றும்,

உத்தமபாளையம் கோட்டைமேடு மர்ஹூம் சாஹுல் ஹமீது (ரஹ்) அவர்களின் மனைவி ஜனாபா ரோசாம்மாள் அவர்கள் 23.11.21 அன்றும்,

உத்தமபாளையம் பி.டி.ஆர்.காலனி மனு எழுத்தாளர் ஜனாப் முஹம்மது சலீம் அவர்களின் அக்காள் மகளார் ஜனாபா சபியா பேகம் அவர்கள் 29.11.21 அன்றும்,

மேட்டுப்பாளையம் மர்ஹூம் அப்துல் ரஜாக் (ரஹ்) அவர்களின் துணைவியாரும், ஜனாப் முஹம்மது யாசீன் சகோதரர்களின் தாயாருமான ஜனாபா ஜெய்புனிசா அவர்கள் 04.12.21 அன்றும்,

உத்தமபாளையம் பி.டி.ஆர்.காலனி மர்ஹூம் ஏ.அப்பாஸ் (ரஹ்) அவர்களின் மனைவி ஜனாபா கலீதா பானு அவர்கள் 06.12.21 அன்றும்,

குர்ஆனின் குரலின் நீண்டகால விற்பனையாளர் கேரள பாலக்காடு ஹபீபுல்லாஹ் ஹஸ்ரத் அவர்களின் மனைவி ஜனாபா ஷஃபியா உம்மா அவர்கள் 07.12.21 அன்றும்,

இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் பள்ளபட்டி நகரத் தலைவர் கம்பத்து அல்ஹாஜ் கே.ஏ.கமால் பாட்சா அவர்கள் 07.12.21 அன்றும்,

திருவள்ளூர் மாவட்டம் பழவேற்காடு ரியாளுல் ஹுதா அரபு மதரஸாவின் பேராசிரியர் மவ்லானா மவ்லவீ தமீமுல் அன்சாரி காஷிஃபி ஹஸ்ரத் அவர்கள் 07.12.21 அன்றும்,

சென்னை காமராஜபுரம் மஸ்ஜித் காலனியின் "மஸ்ஜிதே அன்வரி"யின் நீண்ட நெடிய கால இமாம் பேரையூர் மவ்லானா மவ்லவீ அப்துந் நாஸிர் ஹஸ்ரத் அவர்கள் 10.12.21 அன்றும்,

## வல்ல ரஹ்மானே! உன்னளவில் சேர்ந்துவிட்டனர்

**உன்னளவில் சேர்ந்துவிட்ட இந்த உத்தமமான நல்லடியார்களின் பாவங்கள் அனைத்தையும் மன்னிப்பாயாக! நன்மைகளை கபூலாக்கிக் கொள்வாயாக! கேள்வி, கணக்கில்லாமல் அவர்களுக்கும், அவர்களைப் பெற்றெடுத்தவர்களுக்கும் உயர்ந்த சொர்க்கங்களை உரிமையாக்கித் தந்து, அந்த சொர்க்கங்களில் அண்ணலெம்பெருமானார் (ஸல்) அவர்களுக்கு மிக நெருக்கமாக அவர்களையும், எங்களையும் வாழச் செய்வாயாக!**

# வாசகர் வட்டம்

"கேள்வி பதில்" பகுதியில் பயணம் செய்யும்போது தொழுகையைப் பேணுவது குறித்து அருமையாக நீண்ட பதில் சொல்லியுள்ளீர்கள். நிய்யத்துடன் பயணம் செய்யும்போது நிச்சயமாக தொழுகைக்கு நேரம் கிடைக்கும். தொழுகை நேரத்திற்கு தகுந்தவாறு பயண நிலைகளை அமைத்துக் கொள்ள வேண்டும் என்பது அருமையான அறிவுரை. தொழுகை நம்பிக்கையாளர்களின் உயிர் ஆயிற்றே.


(ப. மீர் இஸ்மாயில்)
உத்தமபாளையம்

முஃப்தீ மு.முஹம்மது இஸ்மாயீல் ஹள்ரத் எழுதிய "ஆலிம்களின் கிரீடம் சாய்ந்தது" படித்து கண்கலங்கி நின்றேன். அன்னாரது பிழைகளை மன்னித்து இறைவன் அவரது ஆன்மாவை தனது அர்ஷின் நிழலில் இளைப்பாறச் செய்வானாக!

கடந்த சில மாதங்களாக கடைசிப்பக்க கட்டுரையைக் காணவில்லையே! எம்.ஜே.அன்வரி தப்லீக் ஜமாஅத்தில் சென்றுள்ளாரா?

மவ்லவீ
**ஆர்.எம்.ஸதகத்துல்லாஹ்** ஹஸனி
மதுரை.

எழில் குலுங்கும் இலங்கை பாட்டிகலோ ஜாமிஉஸ் ஸலாம் ஜும்ஆ மஸ்ஜித் அட்டைப்படம் அருமையிலும் அருமையாக இருந்தது.



இந்தியாவுக்கு 101வது இடம் என்ற தலையங்கம் மூலம் மோடியின் பித்தலாட்டங்களை புட்டு புட்டு வைத்து விட்டீர்கள்!

மவ்லானா ஜம்பை ஜப்பாரின் "பணம் வாழ்க்கைக்குத் தேவை! பணமே வாழ்க்கை அல்ல!" என்ற கருத்து குணத்தின் பெருமையை ஒருபடி உயர்த்திக் காட்டியது.

செய்திக்கலவை பல்வேறு தகவல்கள் பலவற்றை கொண்ட கருவூலமாக திகழுகிறது.

மவ்லவீ எஃப்.ஜமால் பாகவியின் இஸ்லாம் கூறும் ஒழுக்கம் கட்டுரையில் குடும்பம் கொண்டாடும் அழகிய பழக்க வழக்கங்களை அமர்க்களமாய் சொல்லியிருந்தார். மேலும் –

மாதந்தோறும் குர்ஆனின் குரல் சந்தனக் காற்றாய் மணக்கிறது! செந்தமிழ் பாட்டாய் ஒலிக்கிறது! தென்றலாய் சுகம் தருகிறது! கண்கள் ஜொலிக்கும் தங்கப் பதக்கமாய் மின்னுகிறது!

அ. ஷேக் முஹம்மது
வத்தலக்குண்டு.

மவ்லானா ஜே.எம்.அப்துல் ஜப்பார் ஹள்ரத் எழுதிய "பணம் வாழ்க்கைக்குத் தேவை! பணமே வாழ்க்கை அல்ல!" கட்டுரை பணத்தின் தேவையையும், அதனை ஈட்டும் வழிமுறையையும் விளக்கிற்று. நேர்மையாக, முறையாக ஈட்டும் பணம் நல்ல விதமாக பயன்படும். தவறாக மோசடியாக சம்பாதிக்கும் பணம் சீர்கேட்டை உருவாக்கும் என தெளிவுபடுத்தியது. பணத்தை விட பண்பும், ஒழுக்கமும் வாழ்க்கையில் தேவை!

**ஜி.அன்பழகன்,**
லப்பைப்பேட்டை, ஆற்காடு.

சென்ற மாத குர்ஆனின் குரலில்வந்த அனைத்து கட்டுரைகளும் மிகச் சிறப்பாக இருந்தது. மக்கள் அனைவரும் படித்து பயன் பெற ஓர் அரிய பொக்கிஷம்! குர்ஆனின் குரலின் 65வது வயதுக்கு எங்களின் துஆ கலந்த வாழ்த்துக்கள்!

**கா.முஸ்திரி பேகம்**
மதுரை.

வாசகர் வட்டம் பகுதியில் வாசகர்களின் கடிதங்கள் குறைந்து கொண்டே வருகின்றன. எப்பவும் போல் அதிகமாக பிரசுரமானால் வாசகர்களின் எண்ணம் பிரதிபலிக்கும். கூடவே வாசகர்களின் எழுதும் பழக்கமும் குறையாமல் இருக்கும். அதிகமாகவரவேண்டும் என்பதே ஆவல்!

"செய்யது சகோதரர்கள்" தரப்பில் வெளியாகின்ற செய்திகள் கருத்தாழ மிக்கவையாகவும் எளிதாக கடைபிடிக்கும்படியாகவும் இருக்கின்றது. இம்மாதம் பள்ளிவாசல் அல்லாஹ்வின் இல்லம் என்ற ஹதீஸ் இக்காலத்தின் அவசியமாகவும் நினைவூட்டக்கூடியதாகவும் உள்ளது. தொழுகையாளிகள் அதிகமாக பள்ளியின் பக்கம் வர அல்லாஹ் போதுமானவன்.

கேள்வி பதில் பகுதியில் பள்ளிகளில் தஃலிம் கிதாப் வாசிப்பது பற்றி எழுதியிருந்தவைகளை நடைமுறைப்படுத்துவது அவசியம். அதனுடன் குர்ஆன் தர்ஜுமா வாசிப்பதும் நல்லது. தொழுகையாளிகள் குர்ஆனில் சொல்லப்பட்டுள்ளதைப் பற்றி கொஞ்சமாவது அறியக் கூடிய தெரிந்திட வாய்ப்பு ஏற்படும். இமாம்கள் எடுத்துக்கூறி ஆவன செய்வதும் பலன் தரும்.

பா.ஜாகிர்உசேன்.
சேந்தமங்கலம்.

நாயகம் (ஸல்) அவர்கள் அருளினார்கள் : "எனது தோழர்களை எவரேனும் ஏசப்பேசக் கண்டால் (அல்லது கேட்டால்) இந்த கெடுதிக்காக அல்லாஹ்வின் சாபம் அவர்கள்மீது உண்டாகட்டும் எனச் சொல்லுங்கள்"
அறிவிப்பாளர் : ஹள்ரத் இப்னு உமர் (ரளி) அவர்கள் ( திர்மிதீ, மிஷ்காத்)

# கடைசிப்பக்கம்

எம்.ஜே.அன்வரி

வங்காள தேசத்தில் இந்து சமுதாயத்தவரின் துர்கா பூஜையின் போது அந்த சிலையின் காலடியில் குர்ஆன் வைக்கப்பட்டிருந்தது என்ற செய்தி வெளியானது. இதனால் இந்துக்களுக்கு எதிராக அங்குள்ள முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்துக்களுக்கு எதிராக முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதை கண்டித்த வங்களாதேச பிரதமர் ஷேக் ஹசீனா, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்கள் இரும்புக்கரம் கொண்டு அடக்கப்படுவார்கள் என்று அறிவித்தத்தோடு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்க உத்தரவிட்டார்.

இந்நிலையில்,

வங்காள தேசத்தில் இந்துக்கள் தாக்கப்படுவதாக கூறிக் கொண்டு வங்காள தேசம் அருகிலுள்ள இந்திய மாநிலமான திரிபுரா மாநிலத்தில் இந்துத்துவா கும்பல் வன்முறை வெறியாட்டம் ஆடி வருகின்றன. இந்த மாநிலத்தில் பாரதீய ஜனதா கட்சியின் ஆட்சி நடைபெறுகிறது.

திரிபுராவில் நூற்றுக்கணக்கான பள்ளிவாசல்கள் தீக்கிரை யாக்கப்பட்டுள்ளன. முஸ்லிம்களின் வீடுகள் இடிக்கப்பட்டுள்ளன. முஸ்லிம் பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டுள்ளனர். பத்திரிகை யாளர்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு சென்று செய்தி சேகரிக்க தடை விதிக்கப்பட்டுள்ளனர்.

கலவரக்காரர்கள் வன்முறை முழக்கங்களுடன் செல்லும் ஊர்வலங்களுக்கு போலீஸ் முழு பாதுகாப்பு அளித்தது. இந்துத்துவா கும்பலின் வன்முறை வெறியாட்டங்களின்போது போலீஸ் அமைதி காத்தது.

இவை அனைத்திற்கும் மேலாக வன்முறையால் பாதிக்கப்பட்ட முஸ்லிம்களையே போலீஸ் கைதும் செய்துள்ளது.

இந்த இலட்சணத்தில் இந்திய ஒன்றிய உள்துறை அமைச்சகம், "திரிபுராவில் ஒன்றுமே நடக்கவில்லை! திரிபுரா அமைதி பூஞ்சோலையாக திகழ்ந்து வருகிறது" என்று ஓர்

அறிக்கையை வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கை அயோக்கியத்தனத்தின் உச்சக்கட்டம் இல்லையா?

இந்நிலையில்,

திரிபுராவில் முஸ்லிம்கள் மீது இந்துத்துவா கும்பலால் வன்முறை தாக்குதல் தொடர்ந்து நிகழ்த்தப்பட்டு வருகின்ற செய்தியை அறிந்த அம்மாநில உயர்நீதிமன்றம் தாமாக முன்வந்து வழக்கு தொடர்ந்துள்ளது. மேலும், திரிபுரா கலவரங்கள் குறித்து அறிக்கை தாக்கல் செய்யும்படி மாநில அரசுக்கு உத்தரவிட்டுள்ளன.

வங்கதேசத்தில் வன்முறையில் ஈடுபட்டவர்கள் மீது அந்த அரசு வழக்குப் பதிவு செய்து அனைவரையும் கைது செய்துள்ளது. திரிபுராவில் முஸ்லிம்கள் மீதும், பள்ளிவாசல்கள் மீதும் தாக்குதல் தொடுக்கிறார்கள். ஆனால் திரிபுரா அரசு இதுவரை வன்முறையில் ஈடுபட்ட நபர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

கடந்த 60 ஆண்டுகாலமாக திரிபுராவில் இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் இடையே எந்த கலவரமும் ஏற்பட்டதில்லை. ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டதில்லை.

பாபரி மஸ்ஜித் இடிக்கப்பட்டபோது கூட திரிபுராவில் எந்த கலவரமும் நடைபெறவில்லை. ஆனால் திரிபுராவில் பாரதீய ஜனதா கட்சி ஆட்சிக்கு வந்ததிலிருந்து இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்குமான மோதல் திட்டமிட்டு உருவாக்கப்படுகிறது.

டெல்லியிலிருந்து வழக்கறிஞர்கள் தலைமையில் உண்மை கண்டறியும் குழு திரிபுரா சென்று, விசாரணை நடத்தி அந்த அறிக்கையை செய்தியாளர்கள் சந்திப்பில் தெரிவித்தார்கள். உடனே அந்த வழக்கறிஞர்கள், செய்தியாளர்கள் உள்ளிட்ட 102 பேர் மீது உபா சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்து கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்ய மாநில அரசுக்கு நீதிமன்ற அனுமதி தேவையில்லை.

இந்த சட்டம் மனித உரிமைகளுக்கு ஜனநாயகத்திற்கு எதிரானது. அந்த சட்டத்தை பயன்படுத்தி பாரதீய ஜனதா கட்சி நாடு முழுவதும் முஸ்லிம்கள், கிறித்துவர்கள், தலித்துகளுக்கு எதிரான தாக்குதலை தொடுத்து வருகிறது.

திரிபுராவை ஆளும் பாரதீய ஜனதா கட்சியின் ஒப்புதலோடு மத வெறுப்பு அமைப்புகள் அரசு எந்திரமான காவல்துறையுடன் கைகோர்த்து இந்தக் கலவரத்தை நடத்தியிருக்கிறது.

ஊருக்குள் புகுந்துவிட்ட காட்டு விலங்கை வேட்டையாடச் செல்வது போல துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்கள் சகிதமாக திடீர் பாய்ச்சலாக முஸ்லிம்கள் மீது பாய்ந்துள்ளார்கள்.

கோவில் திருவிழாக்களில் பலி விலங்குகளை வெட்டுவதைப் போன்று முஸ்லிம்களை வெட்டியுள்ளனர்.

முஸ்லிம்களை ஆத்மா உள்ள உயிராகவோ, அடிப்படை உரிமைகளைக் கொண்ட அரசியல் சமூகமாகவோ இந்துத்துவா கும்பல் பார்க்கவில்லை. முற்றிலும் அழிக்கப்பட வேண்டிய ஒரு அற்ப உயிரினம் என்ற எண்ணம் அவர்கள் உள்ளத்தில் தேங்கி நிற்பதை திரிபுரா வன்முறை உணர்த்தியிருக்கிறது.

திரிபுராவில் நடந்துள்ள இந்தக் கோரச் சம்பவங்களை இந்தியாவிலுள்ள நாளிதழ்கள், தொலைக்காட்சிகள் வெளிப்படுத்தவில்லை. முற்றாக நிராகரித்திருப்பது வியப்பளிக்கவில்லை என்றாலும் ஜனநாயகத்தின் நான்காவது தூண் செல்லரித்திருப்பது மீண்டும் ஒருமுறை அழுத்தமாக நிரூபணமாகியிருக்கிறது.

அரசு, அரசு நிறுவனங்கள், நாளிதழ், தொலைக்காட்சிகள் அனைத்தும் பாசிசத்தில் நன்றாகத் தோய்ந்து விட்டதாக உணர முடிகிறது.

“இந்தியாவைச் சோசலிஸ குடியரசாக்குவோம், ஜனநாயக அரசாக்குவோம், மதச்சார்ப்பற்ற பண்பாக்குவோம்” என்கிற ஜவஹர்லால் நேரு உள்ளிட்ட தேசச் சிற்பிகளின் கனவுகள் ஆட்டங்காணத் தொடங்கியிருக்கிறது.

திரிபுராவில் முஸ்லிம்கள் மீது நடத்தப்பட்ட மாபெரும் வன்முறை தாக்குதல்கள் மற்றும் தீவைப்பு சம்பவங்கள், நாட்டின் உள்நாட்டுப் பாதுகாப்பையும் ஒருமைப்பாட்டையும் குலைப்பதற்கு இந்துத்துவ பாசிசக் குற்றவாளிகள் எந்த தீவிரமான மற்றும் பயங்கரமான நடவடிக்கைகளையும் செய்ய முடியும் என்பதற்கான ஆபத்தான சமிக்ஞையாகும்.

காவல்துறையின் முன்னிலையிலேயே திரிபுராவில் முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்தவும், தீ வைக்கவும் பாசிஸ்டுகள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதலை திட்டமிட்டு விஷமத்தனமான முழக்கங்களுடன் கூடிய பேரணிகள் சங்பரிவார் அமைப்பை சேர்ந்தவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டது மட்டுமின்றி

காவல்துறையால் அந்த பேரணிகள் அனுமதிக்கப்பட்டுள்ளது கொடுமையிலும் கொடுமையாகும்.

திரிபுராவில் பல பள்ளிவாசல்கள் சேதமடைந்துள்ளன. பல முஸ்லிம் கடைகள், பல முஸ்லிம் வீடுகள் சூறையாடப்பட்டு எரிக்கப்பட்டுள்ளன. பல முஸ்லிம் வாகனங்கள் தீ வைக்கப் பட்டுள்ளன. முஸ்லிம்கள் ஏராளமானோர் காயமடைந்துள்ளனர். மக்கள் அச்சத்தில் உறைந்துள்ளனர். சில முஸ்லிம் குடும்பங்கள் முன் கூட்டியே பயந்து வீட்டை காலி செய்து சென்றுள்ளனர். அவர்கள் வீட்டையும் சூறையாடியுள்ளனர். பல முஸ்லிம் குடும்பங்கள் பல நாட்கள் உயிரை கையில் வைத்துக் கொண்டு வீட்டிலேயே முடங்கியுள்ளனர். கலவரத்திற்கு பிறகு சில முஸ்லிம் குடும்பங்கள் அடியோடு புலம் பெயர்ந்து நகர்ப்புறத்திற்கு குடியேறியுள்ளனர்.

இந்த கலவரம் நன்கு திட்டமிட்டு நடத்தப்பட்டுள்ளது. வங்காளதேச பிரச்சனையைத் தொடர்ந்து தாங்கள் தாக்கப்பட வாய்ப்புள்ள சூழலை ஊகித்துக் கொண்ட முஸ்லிம்கள், முதலமைச்சர் பிப்லாப் குமாரை சந்தித்து முன்கூட்டியே நடவடிக்கை எடுக்க வேண்டுகோள் வைத்துள்ளனர். ஆனால் அந்த வேண்டுகோள் அலட்சியப்படுத்தப்பட்டது வேதனையானது.

சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் பத்திரிகையாளர்கள் மீது திரிபுரா காவல்துறை வழக்கு பதிந்துள்ளதற்கு இந்தியப் பத்திரிகையாளர்கள் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

பத்திரிகையாளர்களுக்கு எதிரான காவல்துறையின் நடவடிக்கை பெரும் அதிரிச்சியை அளிக்கிறது. வன்முறையைக் கட்டுப்படுத்துவதில் அடைந்த தோல்வியை மறைக்கவும், திசைத்திருப்பவும் திரிபுரா அரசின் முயற்சி இது என்று பத்திரிகையாளர்கள் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

"திரிபுரா எரிகிறது" என்று ட்வீட் செய்தததற்காக பத்திரிகை யாளர் ஷியாம் மீரா சிங் மீது உபா சட்டத்தின் கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. விசாரணை முறையும், ஜாமின் வழங்கல் முறையும் கடுமையாக உள்ள இச்சட்டத்தை, வகுப்புவாத வன்முறையைப் பற்றி புகார் செய்பவர்களுக்கும் அவ்வன்முறையை எதிர்ப்பவர்களுக்கும் எதிராக மட்டுமே பயன்படுத்தப்படுவது காட்டுமிராண்டித்தனமாகும். ஊடகவியலாளர்களையும், சமூக ஆர்வலர்களையும் கைது செய்யாமல் இவ்வன்முறை குறித்து நியாயமான விசாரணையை மாநில அரசு நடத்த வேண்டும். பேச்சு சுதந்திரத்திற்கும், பத்திரிகை சுதந்திரத்திற்கும் எதிராக இத்தகைய

சட்டங்கள் நியாயமற்ற முறையில் பயன்படுத்தப்படப்பட முடியாத வண்ணம். முறையான வழிகாட்டுதல்களை உச்சநீதிமன்றம் வழங்க வேண்டும்.

சென்றாண்டு "வகுப்புவாத தாக்குதல்" என்ற பெயரால் ஐ.நா.மனித உரிமைகள் ஆணையம் இந்தியாவை கடுமையாக விமர்சனம் செய்தது.

சென்றாண்டு ஏப்ரல் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் வெளியிட்ட அறிக்கையில் இந்தியா எச்சரிக்கையோடு அணுக வேண்டிய நாடு என்று குறிப்பிட்டது.

இந்தியாவில் மத சுதந்திரம் மிகவும் கவலைக்குரியதாக உள்ளதாகவும், பாரதீய ஜனதா கட்சியின் தலைமையிலான ஒன்றிய அரசு இந்து தேசியவாத கொள்கைகளை ஊக்குவிப்பதாகவும் சர்வதேச மத சுதந்திரத்திற்கான அமெரிக்க ஆணையத்தின் தலைவர் நதீன் மென்சா அல் ஜசீராவுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார். தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக இந்தியாவை மத சுதந்திர கருப்பு பட்டியலில் சேர்க்க அந்த ஆணையம் பரிந்துரைத்துள்ளது.

சர்வதேச அரங்குகளில் தீவிரவாதத்திற்கு எதிராக குரல் எழுப்பும் மோடி தனது சொந்த நாட்டில் இந்துத்துவ பயங்கரவாதம் குறித்து கள்ள மௌனம் சாதிக்கிறார்.


மோடி குஜராத்தில் முதல்வராக இருந்தபோது நடந்த மிக கொடூரமான முஸ்லிம் இனப் படுகொலையில் பலியான காங்கிரஸ் கட்சியின் முன்னாள் எம்.பி. இஹ்ஸான் ஜாஃப்ரியின் மனைவி ஜாக்கியா ஜாஃப்ரி, தனது கணவருக்கு நீதி கிடைக்கவும், குஜராத்தில் முதல்வராக இருந்தபோது மோடிக்கு நற்சான்றிதழ் வழங்கப்பட்டதை எதிர்த்தும் உச்சநீதிமன்றத்தை அணுகுவதிலிருந்து மோடி தலைமையிலான இந்தியாவில் மத சுதந்திரத்தின் நிலைமையை சாதாரண மக்களும் புரிந்து கொள்ள முடியும்.

ஜாக்கியா ஜாஃப்ரியை போன்ற இந்திய அரசியல் சாசனம் நீதி அமைப்பின் மீது நம்பிக்கை கொண்டவர்களின் அநீதிக்கு எதிரான நிலைகுலையாத தொடர் போராட்டங்கள் மூலம் பாசிச ஆட்சிக்கு சாவு மணி அடிக்கும் நாள் இன்ஷா அல்லாஹ் விரைவில் வரும்.

# தாஜ் டிரேடர்ஸ்

**சில்லரை மற்றும் மொத்த விற்பனையாளர்**


எங்களிடம் பள்ளிவாசல் கார்பெட் மற்றும் வீடு ஹோட்டல்கள் கம்பெனிகளுக்கு
தேவையான ரப்பர், கயர் மேட் வகைகள் பேன்சி மேட்கள், கிளீனிங் பிரஸ்கள்
வைப்பர்கள் துடைப்பம் மற்றும் இதர கிளீனிங் பொருட்கள் கிடைக்கும்








No : 2/5, Gandi Nagar Trunk Road, Opposite to Porur Lake
Karambakkam, Porur, Chennai - 600 116
PH : 044 2476 0129, Cell : 94444 85670, 95005 95001



Touches Your Heart
Remains Forever ...
P.M.P
50th
1968 - 2018
Ulama
LUNGIES * VESTS * BRIEFS
Follow us on
PMPCORPORATE
Mfd. by: P.M.P & CO
"EXPORT HOUSE" Recognized by Govt. of India
No.60, Old No.103A, Ramasamy Street,Chennai - 600 001.
: +91- 44 - 2525 4050, 4859 4050 : 81220 14050 : 7845064050
: ho@pgtextiles.in : www.pmpcorporate.com
online shopping site : www.ulama.co.in Made in India